


Follow us:

# தமிழன்

THAMILAN தமිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 436 பிலவ வருடம், தை மாதம் 11 ஆம் திகதி திங்கட்கிழமை
(24.01.2022) ஹிஜ்ரி - 1443, ஜமா அத்துல் ஆகீர் - 20, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30




## வெலிகம கடலில் மூழ்கிய சிறுமிகள் இருவர் மாயம்

வெலிகம கடலில் நீராடச் சென்ற இரு சிறுமிகள் காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

12 மற்றும் 15 வயதான இரு சிறுமிகளே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், நிஹால் தல்துவ குறிப்பிட்டுள்ளார். காணாமல் போயுள்ள சிறுமிகளைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## ஆயித்தியமலையிலிருந்து வந்த 8 கிலோ மான் இறைச்சி

### மட்டக்களப்பில் இரு இளைஞர்கள் கைது

முச்சக்கரவண்டியும் மீட்பு



02 பக்கம்




முல்லைத்தீவில் மும்முரமாக நெல் அறுவடை இடம்பெறுவதால், விவசாயிகள் அனைவரும் நெல் உலரவிடும் தளங்களை பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால், கட்டாயமாக நெல்லை உலரவைத்து சந்தைப்படுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். முல்லைத்தீவு விவசாயி ஒருவர் நெல்லை உலரவைக்கும் வகையில் கால்களால் பரப்பிவிடுகிறார். (படம்:- விஜயரத்தினம் சரவணன்)

## இன்று முதல் மின்வெட்டு அமுல்படுத்தப்படலாம்!

### மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் எச்சரிக்கை

பல மின் உற்பத்தி நிலையங்களிலுள்ள எண்ணெய்க் கையிருப்பு குறைவடைந்துள்ளதால் இன்றிரவு முதல் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. 02 பக்கம்



## குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயம்



தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான சாத்தியம் நிலவுகின்றது.

இதன் காரணமாக நீரை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டுமென தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உதவிப் பொது முகாமையாளர் ஏக்கநாயக்க வீரசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்தியாவசியத் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி நீரைப் பயன்படுத்துமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கு அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகமும், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேகமும் நேற்றுக்காலை (23) பக்திபூர்வமாக இடம்பெற்றன. (படம் - ஐ.சிவசாந்தன்)

# அமைச்சுகளில் தலையிடும் சீனத் தூதரக அதிகாரிகள்!

## நெடுஞ்சாலைகள் அமைச்சின் கூட்டத்தில் அமைச்சர் ஜோன்ஸ்டனுடன் வாய்த்தர்க்கம்

அரசாங்க அமைச்சுகளில் நடக்கும் கூட்டங்களில் இலங்கையிலுள்ள சீனத் தூதரக அதிகாரிகளின் தலையீடு அதிகரித்திருப்பதாக அமைச்சர்கள் பலர் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளனர்.

இது தொடர்பில் அமைச்சரவையின் கவனத்திற்கும் கொண்டுவர அமைச்சர்கள் பலர் முடிவு செய்துள்ளனர். அண்மையில் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கூட்டமொன்றுக்கு சென்ற இலங்கையிலுள்ள சீனத் தூதரகத்தின் வாணிபப் பிரிவு அதிகாரி அங்கு அமைச்சரிடமே தர்க்கமிட்டு நடந்து கொண்ட விதம் அரசுக்குள் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த புதன்கிழமை மாலை 6 மணிக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையில் இடம்பெற்ற உயர் மட்டக் கலந்துரையாடலில் சீனத் தூதரகத்தின் வாணிபப்பிரிவு அதிகாரி கலந்து கொண்டார். இக்கலந்துரை யாடலில் நெடுஞ்சாலைகள் அமைச்சர் என்ற வகையில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இந்த கலந்துரையாடல் நடந்து கொண்டிருந்தபோது கருத்து வெளியிட்ட தூதரக வாணிபப் பிரிவு அதிகாரி, வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி நிர்மாணத்திற்கான ஒப்பந்ததாரராக சீனாவை தெரிவுசெய்து.. 02 பக்கம்

## நாட்டை மீட்கும் புரட்சியை நாடாளுமன்றில் ஆரம்பிப்போம்

### அனைவரும் ஒன்றிணைய சம்பிக்க அறைகூவல்



(படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

02 பக்கம்



## உஷ்

பிரதமர் அலுவலகத்தில் பணியாற்றிய பதுளை பிரமுகர் ஒருவர் நிதி மோசடி விவகாரத்தில் கையும் மெய்யுமாக சிக்கியுள்ளதாக தகவல்.

பிரதமரின் தனிப்பட்ட வங்கிக்கணக்கினைக் கையாளும் அதிகாரம் இவருக்கு வழங்கப்பட்டிருந்தது. இதனால் பிரதமரின் நாடாளுமன்ற ஊதியம் உட்பட அவரின் சேமிப்பிலிருந்த சுமார் ஐந்து கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை இவர் கையாண்டிருப்பது தெரியவந்துள்ளது.

இவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. லொக்காவுக்கே கொக்கா காட்டியிருக்கிறார் லொக்கு என்கின்றனர் பிரதமர் அலுவலக அதிகாரிகள்.



02 பக்கம்

### ஆட்டிலறிகள் - குண்டுத் தாக்குதல்கள் இல்லை:

## பிரசாரமும் பரப்புரையுமே புலிகளின் ஆயுதங்கள்!

### வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கொலம்பகே தெரிவிப்பு

## கைப்பற்றப்பட்ட இந்திய ஆழ்கடல் இழுவைப் படகுகள் அடுத்த மாதம் ஏலத்தில்

### மீன்பிடி அமைச்சு தீர்மானம்

கடந்த காலங்களில் இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோத ஆழ்கடல் இழுவை மீன்பிடியில் ஈடுபட்டபோது கைப்பற்றப்பட்ட சுமார் 105 இந்திய ஆழ்கடல் இழுவைப் படகுகளை, சட்ட நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், அடுத்த மாதம் பொது ஏலத்தில் விடுவதற்கு மீன்பிடி அமைச்சு தீர்மானித்துள்ளது. 02 பக்கம்



## கமெண்ட் கந்தர்..



அப்போ இனி சஜித் வேறயா சம்பிக்க வேறயா நாட்டை மீட்பாங்களோ... ?

## கட்சியை அபகரிக்கச் சதி; ஆனந்தசங்கரி அறிக்கை



தமிழர் விடுதலைக் கூட்டணியை அபகரிக்க ஒரு குழுவினர் தந்திரமாக செயற்பட்டுவருவதாகவும், அவர்களை கட்சியின் ஆதரவாளர்களும், மக்களும் நம்பவேண்டாம் என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுக்குழு மத்திய செயற்குழு உறுப்பினர்களுக்கு அன்பான வேண்டுகோள். 02 பக்கம்

## புதிய அரசியல் கட்சிகளுக்கான விண்ணப்பங்கள் இன்றுமுதல் ஏற்பு

02 பக்கம்



## ஆயித்தியமலையிலிருந்து...

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஆயித்தியமலை பிரதேசத்தில் இருந்து மட்டக்களப்பு நகருக்கு வியாபாரத்துக்காக 8 கிலோ மான் இறைச்சியை முச்சக்கரவண்டி ஒன்றில் எடுத்துச் சென்ற இருவரை வவுணதீவு பிரதேசத்தில் வைத்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை (22) இரவு கைது செய்துள்ளதாக வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிசாந்த அப்புகாமி தெரிவித்தார்.

விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து, சம்பவதினமான நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் வவுணதீவு பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் ஆயித்தியமலை - வவுணதீவு வீதியில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது மட்டக்களப்பு நகரை நோக்கி பிரயாணித்த முச்சக்கரவண்டியை நிறுத்தி சோதனையிட்டபோது அதில் மறைத்து வைக்கப் பட்டிருந்த 8 கிலோ மான் இறைச்சியுடன் இருவரை கைது செய்ததுடன் முச்சக்கரவண்டியையும் மீட்டுள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்கள் வவுணதீவு பிரதேசத்தைச் சேர்ந்த 26, 24 வயதுடையவர்கள் எனவும் ஆயித்தியமலை பிரதேசத்தில் இறைச்சியை வாங்கி மட்டக்களப்பு நகரில் விற்பனை செய்துவருவதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதுடன் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## நாட்டை மீட்கும் புரட்சியை...

யோ.தர்மராஜ்

நாடு வங்குரோத்து நிலையை நோக்கிச் செல்லும் தற்போதைய சூழ்நிலை ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலுக்கு தயாராகும் நேரமல்ல.

அதற்கு முன்னர் எதிர்வரும் சில மாதங்களில் நாடு, மியன்மார் மற்றும் வடகொரியா போன்ற நிலைமைக்கு செல்வதை தடுப்பதற்கு என்ன செய்வது என்பதே முக்கியம். எனவே, இந்த நாட்டை மீட்கும் புரட்சியை நாடாளுமன்றத்திலிருந்தே ஆரம்பிப்போம். அதற்கு அனைவரும் ஒன்றிணையுங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க அழைப்பு விடுத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்கவின் தலைமையில் நேற்று 23ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு ஸ்ரீஜயவர்தனபுரவில் “நம்பிக்கையோடு காத்திருப்போம்: உயர்வோம் உயர்த்துவோம்” என்ற தொனிப் பொருளில் மாபெரும் தேசிய மாநாடொன்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற் றுகையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள மோசமான நிலைமைக்கு முகம் கொடுப்பதற்கு பலம் மற்றும் அனுபவம் எமக்கு தேவையாகும். கடனை செலுத்த முடியாவிட்டால் நாட்டுக்கு ஏற்படும் ஆபத்துகள் குறித்து கடந்த ஆட்சியின்போதே சுட்டிக்காட்டினோம். முறையற்ற பொருளாதார கொள்கையால் நாடு வங்குரோத்து நிலையை நோக்கி தள்ளப்படுகின்றதே உண்மை.

இயற்கை அனர்த்தத்தால் பொருளாதாரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டால், அதனை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு முடியும் என்பதும், சமூக முரண்பாடுகள், மோதல்கள், ஆட்சி போன்றவற்றால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்தும் குறுகிய காலத்தில் பொருளாதாரத்தை மீட்க முடியும் என்பதை கடந்த கால வரலாற்றிலிருந்து தெரிந்துகொண்டுள்ளோம். ஆனால், தற்போது ஆட்சி மாற்றம் ஒன்றினால் மீளக்கூடிய சூழ்நிலையில்லை. நாடு வங்குரோத்து அடைவதிலிருந்து எவ்வாறு மீள்வது என்பதை இதுவரை எமக்கு எவ்வித அனுபவமும் இல்லை. சில நாடுகள் வங்குரோத்து அடையும் நாடுகள் மீண்டும் மீள முடியாதுள்ளது. ஆகவே, கடனை மீள செலுத்த முடியாது, நாடு வங்குரோத்து அடையும் பட்சத்தில் சுனாமி, யுத்தத்தால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து மீண்டது போன்று மீள முடியாது என்பதே நிதர்சனம்.

இதேவேளை, தற்போது நாங்கள் கடன் பெறவில்லை என ஜனாதிபதி கூறியுள்ளார். ஆனால், நாங்கள் கடன் பெறவில்லை என்பதை விட எங்களுக்கு கடன் வழங்குவதற்குக் கூட யாரும் முன்வருவதில்லை என்பதே உண்மை. கடனை பெற்றுக்கொள்ளக் கூடிய சூழ்நிலைகூட இன்று இல்லாது போயுள்ளது. இதனாலேயே, இன்று எரிவாயு, மருந்துகள், பால்மா, மின்சாரம் மற்றும் எரிபொருள் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

மேலும், அத்தியாவசிய பொருட்கள் இல்லாது மக்கள் பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். பால்மா இல்லாது அழும் குழந்தையின் வேதனை இவர்களுக்கு புரிகின்றதா என்பது தெரியவில்லை.

விவசாயிகள், பெருந்தோட்ட மக்கள் மற்றும் பொருட்களின் விலையால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் வேதனைகளை கார் ஓட்டப்பந்தயத்தில் பங்கேற்கும் மற்றும் வெளிநாட்டுக்குச் சென்று நட்சத்திர ஹோட்டலில் தங்கும் உறுப்பினர்களால் புரிந்துகொள்ளத்தான் முடியுமா? எதிர்வரும் காலங்களில் எரிபொருள் வழங்குவதில் பாரிய நெருக்கடி ஏற்படும் என்பதையும் புரிந்துகொள்ளவில்லை.

ஒரு குடும்பத்தின் வியாபார நோக்கம் கொண்ட நிதிக் கொள்கை, தவறான பொருளாதார கொள்கையால் முழு நாட்டு மக்களும் இன்று நஷ்டஈடு வழங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. ஒரு குடும்பத்தால் முழு நாட்டின் பொருளாதாரமும் சீர்குலைந்துள்ளது. இன்று வணிக நம்பிக்கை முற்றாக இல்லாது போயுள்ளது.

இளைய தலைமுறையினருக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி புதிய தொழில்நுட்பத்தின் ஊடாக டொலரை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை முன்னெடுக்க வேண்டும். கடனை அதிகரிக்கும் அபிவிருத்திகளை நிறுத்திவிட்டு, நன்மைகளை ஏற்படுத்தும் அபிருத்திகளை முன்னெடுக்க வேண்டும்.

மேலும், 20ஆவது திருத்தத்தை நீக்கி, ஜனாதிபதிக்கும் நாடாளுமன்றத்திற்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்தும் மற்றும் சுயாதீனத் தேர்தல் முறைமையை கொண்டுள்ள 17 அல்லது 19ஆவது திருத்தத்திற்குச் செல்வதற்கு தேவையான நடவடிக்கை நாடாளுமன்றத்தில் முன்னெடுக்க வேண்டும். தற்போது, முன்னெடுக்கப்படும் இராணுவ மயமாக்கத்தை நிறுத்தி, அரச சேவைகள் மீது நம்பிக்கைக் கொண்ட யுகத்திற்குச் செல்ல வேண்டும்.

அனைவருக்கும் சுதந்திரமாக பேசக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். அத்தோடு, 13ஆவது திருத்தம் தொடர்பாக உரிய தீர்வை எடுக்க வேண்டும். இல்லையேல், தற்போதுள்ள நெருக்கடிகளுக்கு மத்தியில் இவ்வாறான பிரச்சினைகளும் பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும். உதவி செய்யும் நாடுகளுடன் நட்புறவை வலுப்படுத்தும் கொள்கையை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

இதேவேளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நினைத்தால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை 2023 டிசம்பரில் நடத்தலாம். இல்லையேல், 2024 டிசம்பரில் நடக்கும். அதேபோன்று, ஜனாதிபதி நினைத்தால் 2023 பெப்ரவரியில் நாடாளுமன்றத்தை நடத்தலாம். இல்லையேல் 2025 ஆம் ஆண்டே தேர்தலை நடத்தலாம். ஆனால், தற்போதைய சூழ்நிலை ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலுக்கு தயாராகும் நேரமல்ல. அதற்கு முன்னர் எதிர்வரும் சில மாதங்களில் நாடு, மியன்மார் மற்றும் வடகொரியா போன்ற நிலைமைக்கு செல்வதை தடுப்பதற்கு என்ன செய்வது என்பதற்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஆகவே, நாட்டை மீட்கும் புரட்சியை நாடாளுமன்றத்திலிருந்தே ஆரம்பிப்போம். அதற்கு அனைவரும் ஒன்றிணையுங்கள் - என்றார்.

## அமைச்சுகளில் தலையிடும்...

அந்தத் திட்டத்தை ஆரம்பிக்க தேவையான கடன் வசதிகளை சீனாவின் எக்சிம் வங்கி வழங்கினால், துணை ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்வதற்கான முழு சுதந்திரமும் சீனாவிடம் இருக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். இதனால் துணை ஒப்பந்ததாரர்களின் அறிவும் அனுபவமும் சம்பந்தப்பட்ட திட்டங்களை தாமதமின்றி முடிக்க உதவும் என்று வாணிபப் பிரிவு அதிகாரி, இந்த கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் மற்றும் பிற அதிகாரிகளுக்கு தெரிவித்தார். இதில் தலையிடவோ அதுபற்றி விவாதமோ இருக்க முடியாது என்றும் வாணிபப் பிரிவு அதிகாரி வலியுறுத்தினார்.

சீனத் தூதரக வாணிபப் பிரிவு அதிகாரி விடுத்த கோரிக்கைக்கு பதிலளித்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சீனாவுக்கு கொடுத்த திட்டங்களில் இதுபோன்ற முடிவை எடுக்க முடியாது என்றார். இந்த திட்டங்கள் அரசாங்கத்தின் நிதியுதவி மற்றும் அரச நிறுவனங்களின் ஊடாக முன்னெடுக்கப்படுவதாகவும், அவை அமைச்சுகளின் கீழ் மேற்கொள்ளப்படுவதால், ஒப்பந்ததாரர்களைத் தெரிவு செய்வதில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கும் ஓரளவு அதிகாரம் இருக்க வேண்டும் என்றும் அமைச்சர் இங்கு கூறினார்.

ஆனால் இதற்கு உடன்படாத சீனத் தூதரக அதிகாரி, இலங்கையில் மட்டுமன்றி உலகின் ஏனைய பகுதிகளிலும் இவ்வாறான செயற்றிட்டங் களை சீனா முன்னெடுத்து வருவதாகவும், இவ்வாறானதொரு விடயம் அந்நாடுகளில் இடம்பெறவில்லை எனக் கூறியதுடன் அமைச்ச ரின் கருத்தை நேரடியாக நிராகரிப்பதாக கடுந் தொனியில் தெரிவித்துள்ளார்.

சீனத் தூதரக அதிகாரியின் காய்ந்த நிலைப்பாட் டினால் ஆத்திரமடைந்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, அப்படி அதைச் செய்ய முடியாது என்றும் அமைச்சர்களுக்கும் இலங்கை நிர்வாக அதிகாரிகளுக்கும் அங்கு ஏதாவது அதிகாரம் இருக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

ஆனாலும் அமைச்சரின் கருத்தை ஏற்காத சீனத் தூதரக அதிகாரி, ‘நாங்கள் இலங்கையில் உள்கட்டமைப்பை மேம்படுத்தி வருகிறோம். அதை நீங்கள் மதிக்க வேண்டும். எவ்வாறாயினும், இது வேண்டுமென்றே தடைசெய்யப்பட்டால், அது எங்கள் ஒப்பந்தக்காரர்களை பாதிக்கலாம், அது சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நல்லெண்ணத்தையும் பாதிக்கலாம்” என்று மீண்டும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, இந்தக் கூட்டம் முடிவின்றி முடிந்துள்ளபோதும் சீன அதிகாரிகளின் இவ்வாறான தலையீடுகள் வேறு பல அமைச்சுகளி லும் இடம்பெற்றுள்ளதால் சில அமைச்சர்கள் ஒன்றிணைந்து இது விடயம் தொடர்பில் அரச மேலிடத்தில் பேச்சுக்களை நடத்த தயாராகி வருவதாக அறியமுடிந்தது.

## கைப்பற்றப்பட்ட இந்திய...

காரைநகர் (65), காங்கேசன்துறை (5), கிரஞ்சி (24), தலைமன்னார் (9), கற்பிட்டி (2) ஆகிய இடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இழுவைப் படகுகள் பெப்ரவரி 7, 8, 9 மற்றும் 10ஆம் திகதிகளில் ஏலம் விடப்படும்.

குறித்த படகுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாலோ அல்லது பயன்படுத்துவதற்கு ஏற்ற நிலையில் இல்லாத காரணத்தினாலோ அவற்றை ஏலம் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எஸ்.ஜே. கஹவத்த தெரிவித்தார்.

“அதுமட்டுமல்லாமல், இந்த இழுவைப் படகுகள் பல ஆண்டுகளாக கடற்படை துறைமுகங்களில் நங்கூரமிடப்பட்டு டெங்கு இனப்பெருக்கம் செய்யும் இடங்களாக மாறிவிட்டன. நீதிமன்ற நடவடிக்கைகள் நீண்ட காலத்திற்கு முன்பே முடிவடைந்ததால், அவற்றை அப்புறப்படுத்த வேண்டும்” என கூறினார்.

கைப்பற்றப்பட்ட இழுவைப் படகுகளை அடுத்த மாதம் பொது ஏலத்தில் விடுவதற்கு முன்னதாக கடல் பொறியியலாளர்களின் உதவியுடன் மதிப்பிடும் பணியை சம்பந்தப்பட்ட மாவட்ட கடற்றொழில் திணைக்களங்கள் ஏற்கனவே ஆரம்பித்துள்ளன. கடற்றொழில் திணைக்களம் வெளியிட்டுள்ள பொது அறிவிப்பின்படி, ஏல வளாகத்திற்குள் நுழைபவர் ரூ. 1000 செலுத்த வேண்டும். எதிர்வரும் 31 முதல் பெப்ரவரி 5 வரை அந்த இடத்தில் கைவினைப் பொருட்களை ஆய்வு செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

சாத்தியமான, வாங்குபவர்கள் கடற்படையின் முன் அனுமதியைப் பெறுவதற்கான கோரிக் கையை மாவட்ட மீன்பிடி உதவி இயக்குனரிடம் சமர்ப்பிக்க வேண்டும். வாங்குபவர் ஏலத்தின் முடிவில் மொத்தத் தொகையில் இருபது சதவீதத்தை செலுத்த வேண்டும், மீதமுள்ள தொகையை ஐந்து வேலை நாட்களுக்குள் செலுத்த வேண்டும்.

2017ஆம் ஆண்டு இலங்கை கடற்படையி னரால் கைப்பற்றப்பட்ட 12 இழுவைப் படகுகளை மீட்பதற்காக மீனவர்கள் மற்றும் அதிகாரிகளைக் கொண்ட இந்தியக் குழுவொன்று வடபகுதிக்கு விஜயம் செய்தது.

ஆழ்கடல் இழுவை மீன்பிடியை நிறுத்த, மாவட்ட உதவி இயக்குநர்களுக்கு கடந்த ஒக்டோபர் மாதம் கடற்றொழில் திணைக்களம் உத்தரவு பிறப்பித்தது. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்ட 1996ஆம் ஆண்டின் மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் சட்டம் எண் 2 மற்றும் 1979ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க மீன்பிடி (வெளிநாட்டு மீன்பிடி படகுகளை ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தை நடைமுறைப்படுத்த அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

2018ஆம் ஆண்டு புதிதாக திருத்தப்பட்ட விதிகளின்படி, அனுமதியின்றி இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபடும் வெளிநாட்டுக் கப்பல்கள் அரச சொத்தாக அறிவிக்கப்படும்.

## ஆட்டிலறிகள்...

விடுதலைப்புலிகள் தற்போது தற்கொலை குண்டுகளை பயன்படுத்துவதில்லை – பரப்புரையும் பிரசாரங்களும் நீதிமன்ற நடவடிக்கைகளுமே தற்போது அவர்களின் ஆயுதம் என தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயனத் கொலம்பகே, எனினும் விடுதலைப்புலிகளின் ஈழக்கொள்கை மாறவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றில் அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியிருப்பதாவது,

இலங்கையர்களை விசாரணை செய்வதற்கான வெளிநாட்டு பொறிமுறைகளை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

நாங்கள் மனித உரிமைகளை மதிக்கின்றோம். மூன்று தசாப்தங்களாக பயங்கரவாதத்தை எதிர்த்து போரிட்டபோதிலும் பாரியளவிலான மனித உரிமை மீறல்களில் நாங்கள் ஈடுபடவில்லை என்பதே எங்கள் நிலைப்பாடு.

எப்.பி.ஐ. 2008இல் அறிவித்தபடி இலங்கை உலகின் மிகவும் ஈவிரக்கமற்ற பயங்கரவாத இயக்கத்தை எதிர்த்துப் போராடியது.

மீறல்கள், பிரச்சினைகள் இருந்தால் இலங்கை உள்நாட்டு பொறிமுறைகள் மூலம் அதற்கு தீர்வை காண்கின்றது. விடுதலைப்புலிகள் இராணுவரீதியாக உள்நாட்டில் தோற்கடிக்கப்பட் டுள்ள போதிலும் அவர்கள் வெளிநாடுகளில் செயற்படுகின்றனர்.

அவர்களது ஆயுதங்கள் தற்கொலை குண்டுகளும் ஆட்டிலறிகளும் இல்லை. மாறாக, பரப்புரை நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் பிரசாரமே தற்போது அவர்களின் ஆயுதங்கள்.

ஆனால், அவர்களின் கொள்கை மாறவில்லை - தமிழீழம் என்ற தனிநாடு.

குறிப்பிடத்தக்க அளவு புலம்பெயர் தமிழர்கள் விடுதலைப்புலிகளின் கொள்கைகளை முன்னெ டுப்பதால் வாக்குகளை பெறுவதற்காக அவர்க ளுக்கு ஆதரவளிக்கும் தீர்மானங்களை எடுக்கும் நிலையில் உள்ளவர்களின் ஆதரவை அவர்களால் பெறமுடிகின்றது.

மனித உரிமைகளை சில குழுக்களும் நாடுகளும் துஷ்பிரயோகம் செய்கின்றன என நாங்கள் கருதுகின்றோம். நாங்கள் கொள்கைகளை, ஐ.நாவின் பிரகடனத்தை, ஐ.நாவை மதிக்கின்றோம்.

ஆனால், இலங்கையர்களை விசாரணை செய்வதற்கான வெளிநாட்டு பொறிமுறைகளை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

மனித உரிமை ஆணையாளர் தன்னிடம் 120,000 ஆதாரங்கள் உள்ளன என தெரிவிக்கின் றார். அந்த ஆதாரங்கள் என்ன? ஆதாரங்கள் என்னவென தெரிவிக்காமல் குற்றம்சாட்டுவது நீதியா?

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் 16 உறுப்பினர் களுக்கு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஏனையவர்களை விடுதலை செய்வது குறித்து ஆராய்வதற்கான குழுவை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

அதன்பின்னர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த மேலும் 13 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.



நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தலைமையில் ஸ்ரீஜயவர்தனபுரவில் நேற்று (23) இடம்பெற்ற 43ஆவது படையணியின் தேசிய மாநாட்டில் மனோ கணேசன் உட்பட கட்சித் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். (படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

# அனர்த்த முகாமைத்துவக் குழுவை அரசாங்கம் நியமித்திருக்க வேண்டும்

### எதிர்க்கட்சியின் எச்சரிக்கைகளை கவனிக்காமல் விடுத்து இப்போது ஆதரவு கேட்பதில் அர்த்தமில்லை என்கிறார் கிரியெல்ல




நாட்டில் அனர்த்தம் ஒன்று ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் நாடாளுமன்றத்தில் அறிவிக்க வேண்டும். ஆனால், இன்றுவரை அது செய்யப்படவில்லை. அனர்த்த முகாமைத்துவ சட்டம் 2005இன் கீழ் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகள் அடங்கிய அனர்த்த முகாமைத்துவ குழுவை ஜனாதிபதியும் அரசாங்கமும் நியமித்திருக்க வேண்டும். இதன் கீழ் தலைவர் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் 24 ஆளுந்தரப்பு அமைச்சர்கள் உள்ளனர். மேலும், எதிர்க்கட்சியில் ஐந்து பேர் நியமிக்கப்பட்டு, முதலமைச்சர்களும் உள்ளடங்குவார்கள். எனவே, எதிர்க்கட்சிகளின் ஆதரவு தேவைப்பட்டால், இந்த அனர்த்த முகாமைத்துவக் குழுவை அரசாங்கம் முதலில் நியமித்திருக்க வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (23) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

அண்மையில் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியின் சிம்மாசன உரையைக் கேட்டுக் கொண்டிருந்தோம். குறிப்பாக, ஜனாதிபதியின் உரையானது, கொவிட் பிரச்சினை காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமையை பிரதிபலித்தது பேசினார். கொவிட் பிரச்சினையின் அடிப்படையில் அவர் சாக்குப்போக்கு கூறினார். எதிர்க்கட்சிகளிடம் அடிக்கடி ஆதரவு கேட்டார். ஆனால், அதற்கான சந்தர்ப்பம் நம்மிடம் வழங்கப்படவில்லை.

இன்று நான் சுட்டிக்காட்டுவது மிக முக்கியமான விடயம் ஒன்றையாகும். ஆளும் கட்சியும் ஜனாதிபதியும் எதிர்க்கட்சிகளின் ஆதரவை நாடுகின்றனர். எதிர்க்கட்சிகளின் ஆதரவு தேவைப்பட்டால், இந்த நாட்டில் அனர்த்தம் ஒன்று ஏற்பட்டுள்ளதாக நாடாளுமன்றத்தில் அறிக்கை விடுக்கவும். அனர்த்தம் உள்ளதென்பதை நேர்மையான முறையில் அரசாங்கம் முதலில் நாடாளுமன்றத்தில் தெரிவிக்க வேண்டும். இன்று வரை அது செய்யப்படவில்லை.

அனர்த்த முகாமைத்துவச் சட்டம் 2005 இன் கீழ் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகள் அடங்கிய அனர்த்த முகாமைத்துவக் குழுவை ஜனாதிபதியும் அரசாங்கமும் நியமித்திருக்க வேண்டும். இதன் கீழ் தலைவர் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் 24 ஆளுந்தரப்பு அமைச்சர்கள் உள்ளனர். மேலும், எதிர்க்கட்சியில் ஐந்து பேர் நியமிக்கப்பட்டு, முதலமைச்சர்களும் உள்ளடங்குவார்கள். எனவே, எதிர்க்கட்சிகளின் ஆதரவு தேவைப்பட்டால், இந்த அனர்த்த முகாமைத்துவக் குழுவை அரசாங்கம் முதலில் நியமித்திருக்க வேண்டும். நாட்டின் சார்பாக எமது கருத்துகளை முன்வைப்பதற்கு நாடாளுமன்றத்தில் பேசுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்துகின்றேன். இதற்கான அதிகாரம் ஆளுந்தரப்புக்கு உண்டு. ஒரு குழுவை நியமித்தால் அதுபோன்ற சூழ்நிலையில் எமது ஆதரவை நாங்கள் வழங்குவோம். பின்பற்ற வேண்டிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைக் கண்காணிக்கும் அதிகாரமும் இந்தக் குழுவுக்கு உண்டு. எனினும், ஜனாதிபதி இன்று வரை அனர்த்த முகாமைத்துவக் குழுவை நியமிக்கவில்லை.

அப்படி குழுவொன்றை நியமனம் செய்யாமல் எங்களிடம் ஆதரவு கேட்பது முட்டாள்தனமானதாகும். இந்தக் குழு நியமிக்கப்பட்டால் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தலையிட்டு நாட்டுக்காக ஆற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்ற வாய்ப்பு ஏற்படும்.

அதை நியமிக்குமாறு நாடாளுமன்றத்தில் பலமுறை கோரியுள்ளோம். ஆனால், அது இன்று வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆனால், அரசாங்கம் நியமிக்கவில்லை. அரசு திமிர்பிடித்த வகையில் இருந்தது. இதை எங்களால் தனியாகச் செய்ய முடியும் என்று யாரும் கூறவில்லை. இக்குழுவை நியமிப்பதற்கு பதிலாக இராணுவத் தளபதி தலைமையில் ஒரு குழுவை ஏன் நியமித்தனர்? சட்டத்தில் விதிகள் உள்ளன. ஆனால், இவர்கள் நாடாளுமன்றத்தினை கணக்கிலேயே எடுத்துக்கொள்ளவில்லை.

சிம்மாசன உரை பேசுவதில் அர்த்தம் ஒன்றும் இல்லை. நாட்டில் நிலவும் முக்கிய பிரச்சினைகளான டொலர் நெருக்கடி, மின்சார நெருக்கடி, எரிவாயு நெருக்கடி, வாழ்க்கைச் செலவு பிரச்சினை என்று பலதும் இருந்தும் ஜனாதிபதி தீர்வாக என்ன சொன்னார்? இந்த துறைமுக நகரம் வேலைப்பாடுகள் 2035இல் முடிவடையும். அதற்கு முன் நம் நாட்டுக்கு ஐந்து சதம் காசு கூட வருமானம் வராது. அரசுக்கு பணம் கொடுப்பதை தவிர வேறு வழியில்லை. வருடக்கணக்கில் நடப்பதைக் கூறி பயனில்லை. மூன்று, நான்கு மாதங்களாக என்ன நடக்கிறது என்பதை சிந்தித்துப் பாருங்கள். இந்த வாரம் முடிவிற்குள் எரிபொருள் இல்லை. நான்கு மணி நேர மின்வெட்டு வரவுள்ளது. மக்கள் ஆதரவற்றுள்ளனர். அவர்களின் வாழ்வின் பொன்னான நேரம் வீணாக கழிகிறது. ஜனாதிபதியின் உரையில் இவற்றுக்கான பிரச்சினைகளுக்கு தீர்வு இல்லை. ஜனாதிபதிக்கு மனித உரிமைகள் தொடர்பில் அனுபவம் இல்லை. - என்றார்.

## இன்று முதல் மின்வெட்டு...

நீர்மின் உற்பத்தி நேற்று மொத்த மின் தேவையில் 25 சதவீதமாக குறைந்துள்ளது, அதே நேரத்தில் நிலக்கரி, டீசல் மற்றும் உலை எண்ணெய் மூலம் மின் உற்பத்தி 72 சதவீதமாக அதிகரித்துள்ளது.

தேசிய மின் கட்டமைப்பிற்கு சுமார் 108 மெகாவோட் மின்சாரத்தை சேர்க்கும் சப்புகஸ்கந்த அனல்மின் நிலையம், அதன் இயக்கத்திற்கு தேவையான உலை எண்ணெய் இல்லாததால் முற்றாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், நுரைச்சோலை நிலக்கரி அனல்மின் நிலையத்தின் ஊடாக இழந்த மின்சாரத் திறன் நாளைமறுதினம் 26ஆம் திகதிக்குள் மீளமைக்கப்படும் என இலங்கை மின்சார சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

## கட்சியை அபகரிக்க சதி:...

தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு பாரம் பரியமிக்க கட்சி. இதனை பொய்களை வாரி வழங்கும் ஒரு குழுவினர் தந்திரமாக அபகரிக்கத் திட்டமிட்டு என்மேல் அவதூறு சொல்லி என்னை அவமானப்படுத்தி கட்சி ஆவணங்களையும், அலுவலகத்தையும் அபகரிக்கத் திட்டமிட்டதோடல்லாமல், இன்று (24) நடவடிக்கைக் குழுவைக் கூட்டவிருப்பதாகவும் எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறவிருக்கும் கூட்டத்தில் நியமனங்களை வழங்கவிருப்பதாகவும் அறிகிறேன்.

இதில் கலந்துகொள்வது சட்டவிரோதமான செயலாகும். ஆதலால் தயவுசெய்து சட்டவிரோதமான இக்கூட்டத்தில் கலந்துகொள்ளாதீர்கள்.

இந்த மோசடிக்காரர்களுக்கெதிராக எனது சட்டத்தரணி மூலம் சட்ட நடவடிக்கை எடுத்துள் ளேன் என்றும் இந்த மோசடிக்காரர்களை மக்கள் நம்பவேண்டாம் என்றும், அவர்களு டன் எவ்வித தொடர்பும் வைக்க வேண்டாம் என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அனைத்து ஆதரவாளர்களையும் தாழ்மையு டன் கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

## புதிய அரசியல்...

புதிய அரசியல் கட்சிகளைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் நடவடிக்கைகள் இன்று (24) முதல் ஆரம்பிக்கப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இன்று (24) வெளியிடப்படும் என ஆணைக்குழுவின் தலைவர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது வரை அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் எண்ணிக்கை 79 ஆகும்.

அவற்றுள் சட்டச் சிக்கல்களை கொண்ட சுமார் 6 பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் மாத்திரம் செயலற்ற அரசியல் கட்சிகளாக கருதப்படுவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு அரசியல் கட்சிகளாக பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் 03 அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு அண்மையில் தீர்மானித்தது.

# இன்றைய ராசி பலன்

**24.01.2022 திங்கட்கிழமை தை 11**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

| | | |
|---|---|---|
| **நட்சத்திரம்: அத்தம்** | **யோகம்: சுகர்மம்** | காலை 9.13 வரை |
| காலை 11.15 வரை | காலை 11.12 வரை | **திதி: அமர பட்சஸப்தமி** |
| **சித்திரை** | **திருதி** | காலை 8.43 |
| காலை 11.15 -25.01.2022 காலை 10.55 வரை | காலை11.12 -25.01.2022 | -25.01.2022 காலை 7.48 வரை |

| | | |
|---|---|---|
| **முற்கரணம்: வணிஜம்** காலை 8.43 வரை | காலை 7.57 - 9.26 | **லோகநாயகி** |
| **பிற்கரணம்: பத்திரை** காலை 8.43 - இரவு 8.19 | **குளிகை காலம்** பிற்பகல் 1.51 - 3.20 | **ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை** |
| **சுப நேரங்கள்** காலை 6.29 - 7.56 மாலை 4.48 - 6.17 | **எமகண்ட காலம்** காலை 10.54 - பி.ப. 12.23 | **பிரத்யங்கிராவின் கருணையாலே** |
| **அசுப நேரங்கள் ராகு காலம்** | **துர் முகூர்த்தம்** பிற்பகல் 12.46 - 1.34 மாலை 3.08 - 3.55 | **நற்பவி நற்பவி நற்பவி** |

**மேஷம்:** தன்னலமற்ற உங்கள் உதவி பாராட்டுதல்களுக்கு உள்ளாகலாம். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கலாம். இன்று ஆடம்பர மகிழ்ச்சியை அனுபவிக்கலாம். பணிகளில் விடாமுயற்சி முன்னேற்றம் தரும்.

**ரிஷபம்:** திறமைகள் மேம்பட்டாலும், வெற்றியில் உங்களுக்கு திருப்தியின்மை தோன்றலாம். சிலருக்கு திருமணம் உறுதி செய்யப்படலாம். வாக்குறுதிகளை கொடுப்பதில் கவனம் தேவைப்படலாம்.

**மிதுனம்:** வாகனம் வாங்கும் திட்டம் உருவாகலாம். மாணவர்களுக்கு கல்வியில் மேலதிக முயற்சி தேவைப்படலாம். பணியில் செயல்முறை மேம்படுத்தல் பயனளிக்கும். சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் தடைகள் உண்டாகலாம்.

**கடகம்:** சில நிறுவனங்களில் பணி செய்பவர்களுக்கு சம்பள உயர்வு ஏற்படலாம். உங்கள் எதிர்ப்பு விடயங்களில் உங்களுக்கு வெற்றி கிடைக்கலாம். இல்லத்தில் மகிழ்ச்சியான சூழல் உருவாகும். உங்கள் இலக்குகள் தெளிவாக நிர்ணயிக்கப்படலாம்.

**சிம்மம்:** குடும்பத்தினரால் உங்களுக்குப் பரிசுகள் கிடைக்கலாம். சில சங்கடங்கள் நீங்கப் பெறலாம். பிள்ளைகளின் சில சாதனைகளால் மகிழ்ச்சி உண்டாகலாம். இன்று காதலில் இனிமையான நாளாக அமையலாம்.

**கன்னி:** காணி/ வீடு சொத்து சம்பந்தப்பட்ட விடயங்களில் தடைகள் நீங்கலாம். வாழ்க்கைத்துணையின் அன்பான ஆதரவும் கிடைக்கப் பெறலாம். இல்லத்தில் ஒற்றுமை மேம்படும். தொழில் முயற்சியில் நல்ல நிலை தோன்றலாம்.

**துலாம்:** வெளிநாட்டு வேலைவாய்ப்பு கிடைக்கலாம். வீட்டை அழகுபடுத்தும் திட்டங்களில் செலவு ஏற்படலாம். பணிச்சுமை அதிகரிக்கலாம். இன்று கடன் கொடுக்க அல்லது வாங்க சாதகமான நாளாக இல்லை.

**விருச்சிகம்:** எழுத்தாளர்களுக்கு சிறந்த அங்கீகாரம் கிடைக்கலாம். பணியிடத்தில் உங்கள் செயற்திறனால் நிர்வாக மேலதிகாரிக்கு மகிழ்ச்சியுண்டாகும். பங்குச்சந்தை இலாபம் கிடைக்கப் பெறலாம். வணிகப் பயணம் உருவாகலாம்.


**தனுசு:** நிதி சம்பந்தப்பட்ட தொழில்துறையில் இருப்பவர்களுக்கு நல்ல நாளாக அமையலாம். வெளிநாட்டு பணவரவு கிடைக்கலாம். ஆடம்பர செலவு ஏற்படலாம். நிர்வாக சேவைகளில் இருப்பவர்களுக்கு கௌரவம் உண்டாகலாம்.

**மகரம்:** சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் வெற்றி கிடைக்கப் பெறலாம். சகோதரர்களுடன் இன்று நல்ல நாளாக அமையலாம். சில விருப்பங்கள் நிறைவேறலாம். பணிகளில் சக ஊழியர்கள் உங்கள் உழைப்பின் பலனைப் பெற முயற்சிக்கலாம்.

**கும்பம்:** வணிகத்தில் வாடிக்கையாளர்களுடன் உறவை மேம்படுத்துவது நல்லது. பணிகளில் சிறிது பிரச்சினை தோன்றலாம். விருப்பமான வேலைகளில் நன்மை கிடைக்கலாம். கால்வலி சிறிய அளவில் உண்டாகலாம்.
**சந்திராஷ்டமம்: பூரட்டாதி நட்சத்திரம் பாதம் 1/2/3க்கு அ.கா 5.16 - இரவு 11.08**

**மீனம்:** வாழ்க்கைத்துணையின் ஆலோசனை நன்மை தரும். கடன்களை திரும்பச் செலுத்த சாதகமான நாளாக அமையலாம். தொழில் சம்பந்தப்பட்ட விடயங்களில் தடைகள் நீங்கலாம். நிர்வாகம் சம்பந்தப்பட்ட பணிகளில் இருப்பவர்களுக்கு நல்ல நாளாக அமையலாம்.
**சந்திராஷ்டமம்: பூரட்டாதி நட்சத்திரம் பாதம் 4க்கு இரவு 11.08 - 25.01.2022 அதிகாலை 5.02 வரை**

வீடியோவைக் காண...



இலங்கையின் முதலாவது டிரோன் வர்ண கண்காட்சி நேற்று முன்தினம் (22) கொழும்புத் துறைமுக நகரில் ஆரம்பமானது. (படப்பிடிப்பு – லலித் பெரேரா)

# ‘பெண்டோரா பேப்பர்ஸ்’ தொடர்பில் முன்னாள் எம்.பி. ரஞ்சனிடமும் வாக்குமூலம் பதிவுசெய்ய நடவடிக்கை



‘பெண்டோரா பேப்பர்ஸ்’ தொடர்பில் இடம்பெறும் விசாரணைகள் தொடர்பில், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிடம் வாக்குமூலம் பெறுவதற்கு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

ரஞ்சன் ராமநாயக்கவின் கோரிக்கைக்கு அமையவே இந்த வாக்குமூலம் பெறப்படவுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருதாவது,

சட்டத்தரணியூடாக சத்தியக்கடதாசி மூலம் வாக்குமூலம் வழங்குமாறு அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

‘பெண்டோரா பேப்பர்ஸ்’ தொடர்பிலான விசாரணைகளுக்காக நிருபமா ராஜபக்ஷ மற்றும் திருக்குமார் நடேசன் ஆகியோரிடம் மாத்திரமே வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

இந்த விசாரணைகளுக்காக உள்நாட்டு வணிக வங்கிகள், அரச வங்கிகள் மற்றும் வரி வருமான திணைக்களத்திடம் ஆவணங்கள் கோரப்பட்டுள்ளன.

சர்வதேச அரசியல் தலைவர்கள் மற்றும் கோடீஸ்வரர்களின் இரகசிய கொடுக்கல், வாங்கல் அடங்கிய பட்டியலில் இலங்கையின் முன்னாள் அமைச்சரான நிருபமா ராஜபக்ஷ மற்றும் அவரது கணவரான வர்த்தகர் திருக்குமார் நடேசன் ஆகியோரது பெயர்களும் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே.கவால் நாளை காலியில் பாரிய மக்கள் ஆர்ப்பாட்டம்

காலி பிரதான பஸ் தரிப்பிடத்திற்கு எதிரில் நாளைய தினம் (25) மாலை 3.00 மணியளவில் அரசாங்கத்துக்கு எதிராக, பாரிய மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுத்தல், அரசாங்க அதிகாரிகளுக்கான எரிபொருள் மற்றும் தொலைபேசி உள்ளிட்ட மேலதிக கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுக்குமாறும், கடன் வரையறையை நீக்குதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளையும் முன்வைத்து இந்த மக்கள் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதன்போது நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலுள்ள மக்கள் கலந்துகொள்வார்கள் என்றும் அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

# இன, மத வேறுபாடின்றி அனைவருக்கும் சட்டம் சமமாக அமுல்படுத்தப்பட வேண்டும்

## பரடுவ ஜினரதன தேரர் வலியுறுத்து




இனம், மதம், சாதி அடிப்படையில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவதாக உதாரணங்களுடன் சுட்டிக்காட்டிய மாத்தறை மாவட்ட சாசனாரக்ஷக சபையின் பதிவாளர் பரடுவ ஜினரதன தேரர், அவ்வாறில்லாமல் அனைவரையும் சமமாக நடத்தும் சட்டம் இயற்றப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

“ஒரே நாடு ஒரே சட்டம்” தொடர்பான ஜனாதிபதி செயலணி, தென் மாகாண மக்களின் கருத்துகளை கேட்டறியும் நிகழ்வு, நேற்று முன்தினம் (22) திக்வெல்ல பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

மதத் தலைவர்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்கள், செயலணியிடம் தங்கள் ஆலோசனைகளை முன்வைத்ததோடு, சிலர் எழுத்து மூலமும் முன்மொழிவுகளை சமர்ப்பித்தனர்.

பண்டைய காலத்தில் ஒரே சட்டம் அமுல்படுத்தப்பட்ட நாடாக இலங்கை இருந்தது. பல்வேறு படையெடுப்புகளால் அது மாறியது. இந்நிலையை மாற்றி, ஒரு நாட்டில் ஒரு சட்டத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி மேற்கொண்டுள்ள முயற்சிகளை ஜினரதன தேரர் பாராட்டினார்.

இலங்கையில் “ஒரே நாடு ஒரே சட்டம்” என்ற கருத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பல்வேறு தரப்பினரின் கருத்துகள் மற்றும் எண்ணக்கருக்களைக் கருத்திற்கொண்டு, அவை தொடர்பான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால், கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணி வட மாகாணத்தில் மக்களின் கருத்துகளை கேட்டறியும் நடவடிக்கையை ஆரம்பித்தது. அதன் பின், கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களைப் போன்றே கொழும்பில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அமைந்துள்ள அலுவலகத்திலும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகை தந்தவர்கள், செயலணி முன்னிலையில் தங்கள் கருத்துகளை முன்வைத்தனர். தென் மாகாண மக்கள், தங்காலை மாவட்ட செயலகத்தில் இன்று தமது கருத்துகளை சமர்ப்பிக்க முடியும்.

செயலணித்தலைவர் ராஜகீய பண்டித வண. கலகொட அத்தே ஞானசார தேரர், ஏனைய உறுப்பினர்களான பேராசிரியர் சாந்தி நந்தன விஜேசிங்க, சட்டத்தரணி சஞ்சய மாரம்பே, எரந்த நவரத்ன, பாணி வேவலகே மற்றும் செயலாளர் ஜீவந்தி சேனநாயக்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# எவோட்ஸ்-2021 இற்கான விருது வழங்கும் நிகழ்ச்சி இம்மாத இறுதியில்

கலை, இலக்கியத்துறையில் இளம் ஆர்வலர்களின் வளர்ச்சி மேம்பாட்டுக்காக கடந்த 41 ஆண்டுகளாக தலைநகரில் இயங்கிவரும் புதிய அலை கலை வட்டம் பல்வேறு களங்களை ஏற்படுத்தி இலைமறைகாயாக இருக்கும் இளங்கலைஞர்களை இனங்கண்டு வெளிக்கொணர்ந்து வருகின்றது. அந்த வகையில் 1995 ஆம் ஆண்டு முதல் கலை, கலாசாரப் போட்டிகளை ‘எவோட்ஸ்’ விருது வழங்கும் நிகழ்ச்சியாக நடத்தி வருகின்றது.

இந்த வரிசையில் எவோட்ஸ்-2021க்கான விருது வழங்கும் நிகழ்ச்சி எதிர்வரும் 30ஆம் திகதி மாலை 4 மணிக்கு கொழும்பு-11, கதிரேசன் வீதியிலுள்ள ஸ்ரீ கதிரேசன் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது. வட்டத்தின் நிறுவனரும், கலைஞரும், பத்திரிகை ஆசிரியருமான ராதாமேத்தாவின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்சியில், பிரதம அதிதியாக புரவலர் புத்தகப் பூங்காவின் நிறுவனரும், டவர் அரங்க மண்டப நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினருமான புரவலர் ஹாசிம் உமர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக அஸிஸ் மன்றத் தலைவர் அஷ்ரப் அஸிஸ், வீரகேசரி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி எம்.செந்தில்நாதன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கே.ரி.குருசாமி, தொழிலதிபர் கலாநிதி பிரபாகரன், தொழிலதிபர் கனக.ரகுநாதன், வத்தளை நகரசபை உறுப்பினர் ஆர்.விஜயகுமார், தினகரன் ஆசிரியர் தெ.செந்தில்வேலவர், வீரகேசரி ஆசிரியர் எஸ்.ஸ்ரீகஜன், காயத்ரி பீட நிர்வாகி ஸ்ரீரங்கதாஸ் விஜயானந்த், கவிஞர் பிரேம்ராஜ் டவர் அரங்க மண்டப தமிழ்த்துறை பொறுப்பாளர் கலாநிதி ஜெயபிரகாஷ சர்மா, தொழிலதிபர் ரவீந்திரன், சமூகசேவகி கௌசலாதேவி மற்றும் ஏ.ஆர்.ஜெ.வி. ஆஷா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் கடந்த வருடம் நடத்தப்பட்ட கலை, கலாசாரப் போட்டிகளில் பங்குகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கும், கடந்த காலங்களில் வட்டத்தினுடன் இணைந்து செயற்பட்டவர்களும் இளம் ஆர்வலர்களுக்கும் விருதும், ‘கலாகீர்த்தி’ பட்டமும் வழங்கப்படவுள்ளதுடன், கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

# நெற்செய்கைக்கு பொருத்தமற்ற நிலங்களில் பாசிப்பயறு பயிரிடுவதற்கு அரசாங்கம் தீர்மானம்

நெல் பயிரிட முடியாத நிலங்களில், இடைப்போகத்தில் மேலதிகப் பயிராக பாசிப்பயறு பயிர்ச்செய்கைக்கு ஒத்துழைப்பு வழங்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் செயற்பாடுகளைக் கண்காணித்த போது கிடைத்த தகவல்களைக் கருத்திற்கொண்டு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார். நீர்ப்பாசன வசதிகளின்மையால், சிறுபோகத்தில் நெல் பயிரிட முடியாத நிலங்களில் இடைப்போகத்தின் மேலதிக பயிராகப் பாசிப்பயறு பயிரிடுவதற்கு அவசியமான விதைகளைப் பெற்றுக்கொள்வதற்கு விவசாயிகளுக்கு நிதியுதவிகளை வழங்குமாறு ஜனாதிபதி, விவசாய அமைச்சுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

# புலமைப்பரிசில் பரீட்சை எழுதிவிட்டு அழுத வண்ணம் நிலையங்களிலிருந்து வெளியேறிய மாணவர்கள்

## பாடசாலைகளின் முன்னால் பெற்றோர் ஆர்ப்பாட்டம்





(சந்ரரத்ன இலங்ககோன்)

நாட்டில் நேற்று முன்தினம் (22) இடம்பெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின்போது மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதாக தெரிவித்து சில பாடசாலைகளின் முன்னால், நேற்று முன்தினம் அமைதியற்ற நிலை தோற்றம் பெற்றது.

அதற்கமைய, கல்கமுவ யூ.பி.வன்னிநாயக்க தேசிய பாடசாலையில் பரீட்சைக்குத் தோற்றியிருந்த ஒரு சில மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து மாணவர்கள் மற்றும் பெற்றோர் பாடசாலைக்கு அருகில் அமைதியின்றி செயறபட்டதால் நிலைமையை சீராக்குவதற்கு பொலிஸார் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

புலமைப்பரிசில் பரீட்சை முடிவடைந்தது வெளியில் வந்த மாணவர்கள், தமக்கு விடை எழுதுவதற்கான தாள்கள் முறையாக வழங்கப்படவில்லை என்றும், ஒரு பாடசாலை மாணவர்களுக்கு மாத்திரம் கடிகாரம் காட்சிப்படுத்தப்பட்டதாகவும், ஒரு சில மாணவர்களுக்கு கேள்விகளுக்காக விடைகள் சொல்லிக் கொடுக்கப்பட்டதாகவும் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர். இதனைத் தொடர்ந்து பெற்றோர் பதற்றநிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இதேவேளை, கல்கமுவ, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பாடசாலை ஆரம்ப காலத்திலிருந்து புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் பங்குபற்றுவது தொடர்பில் சாதனை படைத்த பாடசாலை என்பதுடன், அந்தப் பிரதேசத்திலுள்ள பிரதான பாடசாலையாகவும் கருதப்படுகிறது. புலமைப்பரிசில் பரீட்சையின்போது இப்பாடசாலை மாணவர்கள் தொடர்பில் மாத்திரம் விசேட கவனம் செலுத்தப்படுவதாக, ஏனைய பாடசாலை மாணவர்களின் பெற்றோர் தொடர்ந்து குற்றச்சாட்டுகளை முன்வைத்து வந்துள்ளனர்.

சிறுவர்கள் பொய் கூற மாட்டார்கள் என்றும், அநீதி இழைக்கப்பட்டிருக்குமாக இருந்தால் அதுதொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்றும் பெற்றோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது குறித்து புலமைப்பரிசில் பரீட்சை கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த அதிகாரிகளிடம் வினவியபோது,

மாணவர்கள் மற்றும் பெற்றோரால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளில் எவ்வித உண்மைத்தன்மையும் இல்லை என்றும், அவ்வாறாயின் சட்ட ரீதியான பரிசோதனைகளுக்கு தாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தனர் .

கல்கமுவ யூ.பி.வன்னிநாயக்க தேசிய பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சை நடத்தும்போது பெற்றோரால் முன்வைக்கப்பட்ட இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை செய்யவுள்ளதாக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மேலும், வெலிமடை கல்வி வலயத்துக்குட்பட்ட விஜய வித்தியாலயத்தில் முன்னெடுக்கப்பட்ட பரீட்சை மத்திய நிலையத்தில், மாணவர்களுக்கு முதலாவது வினாத்தாள் நேரத்துக்கு வழங்கப்படவில்லையென்றும், இருந்தபோதிலும் சரியான நேரத்துக்கு விடைத்தாள்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும் மாணவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். வினாத்தாள்களுக்கு பதிலளிப்பதற்கு சரியான நேரம் கிடைக்காமையினால் மாணவர்கள் அழுதுகொண்டு பரீட்சை நிலையங்களிலிருந்து வெளியேறியிருந்தனர்.

விடை எழுதிகொண்டிருந்த போதே விடைத்தாள்களைப் பறித்தெடுத்து சென்றதாக ஒருசில மாணவர்கள் குறிப்பிட்டனர். விடை எழுதுவதற்கான தாள்கள் கோரியதற்கு அங்கிருந்த பணியாளர்கள் திட்டியதாகவும் மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக பெற்றோர் நீதிக்கோரி வெலிமடை - பதுளை பிரதான வீதியின் குறுக்காக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். 150 மாணவர்களுக்கு இவ்வாறு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதுதொடர்பில் பெற்றோர் வெலிமடை வலய கல்வி பணிப்பாளர் ரோஹித அமரதாசவை சந்தித்து கலந்துரையாட முயற்சித்திருந்தாலும் அவர்களின் முயற்சி தோல்வியை சந்தித்துள்ளது.

அதன் பின்னர், இந்த சம்பவம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுமென கல்வி காரியாலயத்துக்கு வருகை தந்திருந்த பெற்றோருக்கு வெலிமடை வலய கல்வி பணிப்பாளர் ரோஹித அமரதாச தெரிவித்துள்ளார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜனவரி 24ஆம் திகதி, திங்கட்கிழமை

# வெளிவிவகார செயலரின் சமாளிப்பு

இந்தியாவிற்கு மூலோபாய பாதுகாப்பு அச்சுறுத்தலாக விளங்குவதற்கு இலங்கை விரும்பவில்லை என்று தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே, அந்நிய செலாவணி நெருக்கடியை சமாளிப்பதற்காக இலங்கை சீனாவின் பக்கம் சாய்கின்றது என்ற விமர்சங்களை நிராகரித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

“இலங்கை வரலாறு முழுவதும் சமமான உறவுகளைப் பேணிவந்துள்ளதுடன், நாங்கள் அதன்மூலம் நன்மையடைந்துள்ளோம். நாங்கள் முக்கியமான தருணங்களில் சில துணிச்சலான முடிவுகளை எடுத்துள்ளோம். உதாரணத்திற்கு சீனாவுடன் இராஜதந்திர உறவுகளை மீள ஏற்படுத்துதல், இறப்பர் அரிசி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டமை, கச்சதீவை மீளப்பெற்றமை போன்ற நடவடிக்கைகள் இதற்கான உதாரணங்களாகும்.

நடுநிலைமையைப் பேணுவதும், அதிகாரப் போட்டியில் சிக்காமலிருப்பதுமே எங்கள் வெளிவிவகார கொள்கையின் முக்கிய உத்தரவு. நாங்கள் எந்தப் பக்கமும் சாய்வதில்லை. நாங்கள் அனைவரினதும் நண்பர்கள். அனைத்து சிறந்த விடயங்களுக்கும் நாங்கள் ஆதரவு வழங்குகின்றோம்.

ஏனைய நாடுகளுக்கு இலங்கை தொடர்பான புவிசார் அரசியல் நோக்கங்கள் உள்ளன. இந்தியப்பெருங்கடலின் இயக்கவியலை நாங்கள் புரிந்துகொள்ளவேண்டும். யாரையும் பகைத்துக் கொள்ளக்கூடாது.

இந்தியாவின் அளவையும், முக்கியத்துவத்தையும் கருத்திற்கொள்ளும்போது அந்த நாட்டிற்கு மூலோபாய பாதுகாப்பு அச்சுறுத்தலாக விளங்குவதற்கு நாங்கள் விரும்பவில்லை. இலங்கையை இந்தியாவிற்கு ஆபத்தை ஏற்படுத்துவதற்கான தளமாக பயன்படுத்துவதற்கு ஒருபோதும் அனுமதிப்பதில்லை என்பது குறித்து ஜனாதிபதி மிகவும் உறுதியாக உள்ளார். இது எங்கள் அயல் – ஸ்திரமானதாக இல்லையென்றால் நாங்களும் பிரச்சினைகளை எதிர்கொள்ளநேரிடும். நாங்கள் சீனாவுடன் மாத்திரம் ஈடுபாட்டை கொண்டிருக்கவில்லை. எரிபொருள் கொள்வனவிற்காக இந்தியா எங்களுக்கு இன்னுமொரு 500 மில்லியன் டொலர்களை கடனாக வழங்கியுள்ளது. பங்களாதேஷ் கூட நாணயப் பரிமாற்றத்திற்கு இணங்கியுள்ளது. நாங்கள் எங்கள் நண்பர்களை ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளோம்.

பெருந்தொற்று காரணமாக உருவாகியுள்ள முன்னொருபோதுமில்லாத நிலைமை இது.

வருடத்திற்கு 4.5 பில்லியன் டொலர்களைப் பெற்றுத்தந்த மூன்று பில்லியன் மக்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை வழங்கிய சுற்றுலாத்துறை முடங்கிய நிலையில் காணப்படுகின்றது.

இலங்கை போன்ற சிறிய நாட்டிற்கு இது பெரும் பாதிப்பாகும். ஆனால், சுற்றுலாத்துறை தற்போது மீண்டும் உயிர்பெறத் தொடங்கியுள்ளது.

ஆனால், நாங்கள் எங்கள் நண்பர்களிடம் தங்கியிருக்கும் நிலையை தவிர்த்துக்கொள்ள வேண்டும் எங்கள் ஏற்றுமதி வருமானங்கள் மீள கிடைக்கத் தொடங்கியுள்ளமை நல்ல அறிகுறியாகும். புலம்பெயர்ந்த தொழிலாளர்களிடமிருந்து கிடைக்கின்ற வெளிநாட்டு வருமானம் மெல்ல மெல்ல அதிகரிக்கின்றது. நாங்கள் எங்கள் கையிருப்பை கட்டியெழுப்பவேண்டும். கடந்த 73 வருடங்களாக எங்கள் பொருளாதாரக் கொள்கையில் ஏதோ தவறு இடம்பெற்றிருக்கின்றது. பல பிரச்சினைகள் ஒன்றுசேர்ந்து தற்போதைய நெருக்கடியை உருவாக்கியுள்ளன. நாங்கள் உற்பத்திகளை அதிகரிக்கவேண்டும். வர்த்தகங்களைக் கவரவேண்டும். அதிகாரிகள் மட்ட தலையீடுகளை நீக்கவேண்டும். கொழும்புத் துறைமுக நகரம் சிறந்த உதாரணம். வர்த்தக நடவடிக்கைகளை இலகுவாக முன்னெடுப்பதற்கும், அதிகாரிகள் மட்ட தலையீடுகளை தவிர்ப்பதற்கும் அங்கு விசேட சட்டங்கள் உள்ளன. ஆகவே, நாங்கள் சீனா பக்கம் சாய்கின்றோம் என்பதில் உண்மையில்லை. எங்களுக்கு அதிகளவு தெரிவுகள் இல்லை. சர்வதேச சமூகம் எங்களுக்குத் திட்டங்கள், முதலீடுகள் தொடர்பில் அதிகளவு தெரிவுகளை வழங்கவேண்டும்” என்று குறிப்பிட்டுள்ளார் வெளிவிவகார செயலாளர்.

இலங்கையில் சீனாவும், இந்தியாவும் போட்டியிட்டுக்கொண்டு தமது இருப்பினைத் தக்கவைத்துக்கொள்ள முயற்சிகளை எடுத்துவரும் நிலையில், வெளிவிவகார அமைச்சின் செயலாளரது இந்தக் கருத்துகள் வெளியாகியுள்ளன. இலங்கையின் முதலீடுகளில் பெரும்பாலான பகுதிகளை சீனா ஆக்கிரமித்துக்கொண்டுள்ள நிலையில், இந்தியாவை சமாளிப்பதற்காக இலங்கை தடுமாறி வருகிறது. வெளிவிவகார அமைச்சு செயலரின் கருத்துகள் அதனையே சுட்டிநிற்கின்றன.

இந்தியாவுக்கு எதிராக செயற்படமாட்டோம் என்று கூறினாலும் இலங்கையால் அப்படி இருக்க முடியாது என்பதனையே அதன் செயற்பாடுகள் காட்டுகின்றன. இந்தியாவிடம் உதவிகளை வாங்கினாலும், பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள புதுடில்லியை நம்பினாலும், இலங்கை அவ்வப்போது தனது உண்மை முகத்தைக் காட்டாமலில்லை. சீனாவிடமிருந்து மீள முடியாதவாறு இலங்கை அதனிடம் சிக்கி நிற்கிறது. இலங்கை அரசின் தீர்மானம் எடுக்கும் சக்திகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலும் சீனா உருவாகியிருக்கிறது என்பதே உண்மை. வெளிவிவகார செயலாளர் பூசி மெழுகப் பார்க்கிறார். ஆனால், உண்மைகள் நீண்டநாள் உறங்கமாட்டாதென்பதை அவர் விரைவில் புரிந்துகொள்ளும் காலம் வரும்.

# கருத்து சுதந்திரப் படுகொலை!

## சுகிர்தராஜன் படுகொலை செய்யப்பட்ட - பிரகீத் காணாமலாக்கப்பட்ட நாள் இன்று

இலங்கையில் கடுமையாக நிலவிய கருத்துச் சுதந்திரப் படுகொலையை நினைவுபடுத்தும் நாள் இன்றாகும்.

இதேபோல் ஒரு நாளில் ஊடகவியலாளர் சுகிர்தராஜன் கொல்லப்பட்டதுடன், ஊடகவியலாளர் பிரகீத் காணாமலாக்கப்பட்டார். இலங்கையில் நிலவிய கடுமையான ஊடக சுதந்திர மறுப்பை வெளிப்படுத்தும் இந்த இரு நிகழ்வுகளும் சர்வதேச ரீதியில் கவனம் பெற்றவையாகும்.


**ஐந்து மாணவர்கள் படுகொலையின் சாட்சி சுகிர்தராஜன்**

சுப்பிரமணியம் சுகிர்தராஜன் (டிசம்பர் 12, 1969 – ஜனவரி 24, 2006) இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர். எஸ்.எஸ்.ஆர். என அழைக்கப்பட்டவர். சுடர் ஒளி பத்திரிகையில் ஊடகவியலாளராகப் பணியாற்றி வந்தவர். ஈழப் போர்க்காலத்தில் இவர் திருக்கோணமலையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

திருகோணமலை நகரின் போர்ச்சூழலிலிருந்து பல செய்தி நிறுவனங்களுக்கு செய்திகளை வழங்கி வந்தார். சுடரொளி, உதயன் ஆகிய பத்திரிகைகளின் திருமலை நிருபராகக் கடமையாற்றிய சுகிர்தராஜன், வீரகேசரி, மெட்ரோ நியூஸ் ஆகியவற்றில் அரசியல் கட்டுரைகள் எழுதிவந்தார்.

சுகிர்தராஜன் மட்டு. குருமண்வெளியில் பிறந்தார். தந்தை சுப்பிரமணியம். தாய் அருள் ஞானம்மா. இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்டு. குருமண்வெளி சிவசக்தி வித்தியாலயத்திலும், உயர்கல்வியை மட்டு. இந்துக் கல்லூரி மற்றும் மட்டு. மத்திய கல்லூரி என்பவற்றிலும் பயின்றார். பாண்டிருப்பு கதிர்ப்பு கலை இலக்கிய வட்டத்தின் ஸ்தாபகத் தலைவரான இவர் 1997 இல் இலங்கைத் துறைமுக அதிகார சபையில் எழுத்தளராகப் பணியில் சேர்ந்தார்.

2006 ஜனவரி 24 இல் சுகிர்தராஜன் திருமலையில் ஆளுநர் செயலகத்திற்கு அருகாமையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.





ஐந்து மாணவர்கள் படுகொலை தொடர்பிலான ஆதாரங்களை நிழற்படங்களாக இவர் முன்னர் வெளியிட்டிருந்தார்.

இப்படுகொலை குறித்து எவ்வித விசாரணைகளும் இடம்பெறவில்லை. திருமணமான இவருக்கு இரு பிள்ளைகள் இருந்தனர்.

**தமிழருக்காக குரல் கொடுத்த சிங்கள ஊடகவியலாளர்**

பிரகீத் எக்னலிகொட இலங்கையின் ஊடகவியலாளரும், கேலிச்சித்திர ஓவியருமாவார். சுதந்திர ஊடக அமைப்பைச் சேர்ந்த இவர் லங்கா நியூஸ்.கொம் இணையத்தளத்தின் ஊடகவியலாளராகப் பணியாற்றியவர்.

இவர் இலங்கை ஜனாதிபதித் தேர்தலுக்கு இரு நாட்களுக்கு முன், 2010, ஜனவரி 24 ஆம் திகதி இரவு 8:30 மணியளவில் கொஸ்வத்தையில் காணாமல் போனதாக முறையிடப்பட்டது. இவர் இலங்கை அரசு சார்பானவர்களால் கடத்தப்பட்டதாக அவரது குடும்பத்தினர் முறைப்பாடுகளை மேற்கொண்டனர்.

இரு பிள்ளைகளின் தந்தையான பிரகீத் முன்னொரு தடவையும் கடத்தப்பட்டு விசாரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை மையப்படுத்தி ‘போர் ஒன்றை வெற்றி கொள்வதற்கான இரகசியங்கள்’ என்ற 40 நிமிட நேர ஆவணத் திரைப்படத்தைத் தயாரித்தவர்களில் இவரும் ஒருவர்.

எக்னலிகொட காணாமல் போன நிகழ்வை விளக்கி பன்னாட்டு மன்னிப்பு அவை அறிக்கை வெளியிட்டுள்ளது. எல்லைகளற்ற செய்தியாளர்கள் என்ற அமைப்பும் இவரைப்பற்றித் தனது கரிசனையை வெளிப்படுத்தியுள்ளது. கொழும்பு குற்றப்பதிவுத் திணைக்களம் எக்னலிகொட காணாமல் போனமை குறித்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தது. ஆனாலும் இவர் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை.

# மரம் விதைக்கும் ட்ரோன்கள்



காடுகளின் பசுமைப் போர்வையை அதிகரிக்க, புதிதாக மரங்களை விதைக்கவேண்டும். இந்தப் பணிக்காக மனிதர்களைப் பயன்படுத்துவதைவிட, ட்ரோன்களையும், செயற்கை நுண்ணறிவு மென்பொருளையும் பயன்படுத்தினால், வேலை வேகமாக நடக்கும் என்கிறது அவுஸ்திரேலியாவின் எயார் சீட் டெக்னாலஜி நிறுவனம்.

உலகின் கார்பன் மாசுபாட்டை காற்றிலிருந்து அகற்றும் பணியை மரங்கள் செய்கின்றன. ஆனால், காடுகள் அழிக்கப்படுவதால், ஆண்டுதோறும், 13.5 இலட்சம் தொன்கள் கார்பன் மாசுபாட்டை அகற்றுவது தடைப்படுகிறது. புவி வெப்பமாதல் வேகமெடுப்பதைத் தடுக்க இன்னும் பத்தே ஆண்டுகள் இருப்பதாக ஐ.நா. சபை எச்சரித்து வருகிறது.

இந்நிலையில், வேகமாக காடுகளைப் புதுப்பிக்க ட்ரோன்கள் மூலம் விதைகளை வீசுவது உதவுமென எயார் சீட் நிறுவனம் கருதுகின்றது. எயார் சீட்டின் விதைப்பு முறை மிகவும் அறிவியல்பூர்வமானது. வனப்பகுதியில், எங்கே விதைக்க வேண்டுமோ, அந்தப் பகுதிக்கு நேராக எயார் சீட் பணியாளர்கள் செல்கின்றனர்.

அந்த நிலத்தின் மண் வளம், அருகாமை மரங்களின் வகைகள் போன்றவற்றை அலசி, வரைபடம் அமைத்துத் திட்டமிடுகின்றனர். அதன் பிறகு, அப்பகுதிக்கான விதைகளை நேர்த்தியாக செய்து, சத்துகள் அடங்கிய உருண்டைகளில் வைத்து அதன் பிறகே, ட்ரோனில் ஏற்றி விதைக்க அனுப்புகின்றனர். ஒரு ட்ரோனால், ஒரு நாளைக்கு 40 ஆயிரம் விதைகளை விதைக்க முடியும். மனிதர்களைவிட 25 மடங்கு வேகமாகவும், 80 சதவீதம் மலிவாகவும் மரம் விதைக்கும் பணியை எயார் சீட்டின் ட்ரோன்கள் செய்து முடிக்கின்றன. எதிர்வரும் 2024 ஆம் ஆண்டுக்குள் 10 கோடி மரங்களை விதைக்க எயார் சீட் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தொடாமல் சுரங்கம் தோண்டும் ரொபோ

காட்டுத் தீ உருவாக, காடுகளினூடாகச் செல்லும் மின் கம்பங்களும் காரணமாக இருக்கின்றன. இதனைத் தடுக்க, தரையடி மின் வடங்களைப் போட பல அரசுகள் திட்டமிட்டு வருகின்றன. இதற்கு உதவியாக, அமெரிக்காவில், பெட்ரா என்ற நிறுவனம், ஸ்விப்டி என்ற சுரங்கம் தோண்டும் ரொபோவை வடிவமைத்திருக்கிறது.

இது பாதி தானாக இயங்கும் புத்திசாலித்தனம் கொண்டது. அதைவிட முக்கியமாக, மிகவும் கடினமான நிலத்தடிப் பாறைகளைத் தொடாமல், வெறும் வெப்பத்தாலேயே உருக்கிவிடும் திறன் கொண்டது ஸ்விப்டி. இதற்கென அதிக சூடேற்றப்பட்ட வாயுவைப் பயன்படுத்துகிறது.

இதனால், சுரங்கம் தோண்டும் ட்ரில்லிங் இயந்திரங்களைப்போல ஸ்விப்டிக்கு தேய்மானம் அதிகமிருக்காது. பராமரிப்பும் குறைவு என பெட்ராவின் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். மேலிருந்தபடி மனிதர்கள் இயக்க, காடுகளில் இந்த ரொபோ, மின் கம்பிகளுக்கான தரையடி சுரங்கங்களை விரைவாக தோண்டித் தந்துவிடும்.



அதுமட்டுமல்ல, உலகெங்கும் தரைக்கடியில் சுரங்கம் தோண்டும் தொழில் வேகமெடுக்கப் போகிறது. பல வளரும் நாடுகள் நகர வாகனப் பெருக்கத்தைக் குறைக்க மெட்ரோ புகையிரதங்களை அமைக்கின்றன. ‘எலான் மஸ்கின் ஹைப்பர் லூப்’ போன்ற தரையடி விரைவுப் போக்குவரத்துத் திட்டங்கள் பல வரவிருக்கின்றன. அவற்றுக்கு பெட்ராவின் ஸ்விப்டி போன்ற கருவிகள் தேவைப்படும்.

# இன்றைய நாளில்...

- 1897 – சுவாமி விவேகானந்தர் சிக்காகோவிலிருந்து நாடு திரும்பும் வழியில் யாழ்ப்பாணம் வருகை தந்தார். யாழ். இந்துக் கல்லூரியில் அவருக்கு பெரும் வரவேற்பளிக்கப்பட்டது.
- 1908 – பேடன் பவல் இங்கிலாந்தில் முதலாவது சிறுவர் சாரணப் பிரிவை ஆரம்பித்தார்.
- 1939 – சிலியில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 28 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.
- 1978 – கொஸ்மஸ் - 954 என்ற சோவியத் செயற்கைக்கோள் பூமியின் வளிமண்டலத்தினுள் எரிந்து, அதன் பகுதிகள் கனடாவின் வடமேற்குப் பிரதேசத்தில் வீழ்ந்தன.
- 1984 – முதலாவது எப்பிள் மக்கின்டொஷ் தனி மேசைக் கணினி அமெரிக்காவில் விற்பனைக்கு வந்தது.
- 1986 – வொயேஜர் - 2 விண்கலம் யுரேனஸின் 81 ஆயிரத்து 500 கி.மீ. தூரத்துக்குள் வந்தது.
- 1990 – ஜப்பான் ‘ஐட்டென்’ என்ற தனது முதலாவது நிலவுச் சலாகையை ஏவியது.
- 2006 – இலங்கை ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் திருலையில் ஆளுநர் செயலகத்திற்கு அருகாமையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 2009 – இலங்கை ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட அரசுத்தலைவர் தேர்தலுக்கு இரு நாட்களுக்கு முன்னர் கொழும்பில் காணாமல் போனார். இவர் கொல்லப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

# நக்கல் நமசிவாயம்

அரசாங்கத்து தலைவர்மாரின்ர வேலையள பார்க்கும்போது புத்தியுள்ள மனிதரெல்லாம் வெற்றிகாண்பதில்லை.. வெற்றிபெற்ற மனிதரெல்லாம் புத்திசாலியில்லை என்ற பாட்டுத்தான் நினைவுக்கு வருகுதுங்கோ...



# “ஒரே நாடு ஒரே சட்டம்” தொடர்பில் முஸ்லிம் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை

## வெளிநாட்டு அமைச்சர் பீரிஸ் விளக்கம்

(அஷ்ரப் ஏ.சமத்)

இலங்கையிலுள்ள முஸ்லிம் நாடுகளின் தூதுவர்கள் “ஒரே நாடு ஒரே சட்டம்” தொடர்பில் தெளிவுபடுத்தக் கோரியிருந்தனர். இதுதொடர்பில் நான் அவர்களுக்கு தெளிவுபடுத்தினேன். “ஒரு நாடு ஒரு சட்டம்” பற்றி முஸ்லிம் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அண்மையில் கொழும்பு சாஹிராக் கல்லூரியில் பேராசிரியர் புர்க்கானின் சேவையை பாராட்டி கபூர் மண்டபத்தில் அவரது நிழற்படத்தைத் திறந்து வைத்ததன் பின்னர், அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதி அமைச்சர் அலி சப்ரி தனது மகனின் உயர் கல்வி சம்பந்தமாக அமெரிக்கா சென்றிருந்த நிலையில், அங்கு மேலும் இரு நாட்கள் அவர் அங்கு தங்க வேண்டியிருந்தமையால் பேராசிரியர் புர்க்கானின் 50 வருடங்கள் இக்கல்லூரியின் சேவை மற்றும் அவரது நிழற்படம் திரைநீக்கம் செய்யும் நிகழ்வுக்கு என்னை கலந்துகொள்ளுமாறு அலி சப்ரி பணித்தார்.

“ஒரு நாடு ஒரு சட்டம்” பற்றி முஸ்லிம் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. இலங்கையிலுள்ள முஸ்லிம் நாடுகளின் தூதுவர்கள் இந்தச் சட்டம் தொடர்பில் விளக்கம் கோரியிருந்தனர். இது பற்றி அவர்களுக்கு தெளிவுபடுத்தினேன். அதில் திருமண வயதெல்லை 18ஆக இருத்தல் வேண்டும். பங்களாதேஷ், இந்தோனேஷியா, துருக்கி ஆகிய நாடுகளில் கூட திருமண வயதெல்லை 18 ஆக உள்ளது. நமது முன்னோர்கள் ஏற்படுத்திய எமது நாட்டில் தேசவழமைச் சட்டம், கண்டிய சட்டம், முஸ்லிம் சட்டம் ஆகிய சட்டங்களை எம்மால் மாற்றியமைக்க முடியாது.






கொழும்பு பல்கலைக்கழகத்தில் நான் உபவேந்தராக பதவி வகித்த காலத்தில், பட்டதாரிகள் பட்டப்படிப்பை நிறைவுசெய்து வீடு செல்ல முன்னர் ஒரு வைபவத்தை அங்கு ஒழுங்குபடுத்தி என்னையும் அதிதியாக அழைத்தார்கள். அதே பீடத்திலுள்ள இன்னொரு மாணவர் குழு வேறாக ஒரு நிகழ்வை ஒழுங்குபடுத்தி அவர்களும் என்னை அழைத்தார்கள். எல்லோரும் இணைந்து ஒரு நிகழ்வை ஏற்படுத்தினால் நல்லது எனத் தெரிவித்தபோது அந்த மாணவர்கள் சிங்கள மொழி மூலம் நடைபெறும் நிகழ்வுகள் எங்களுக்கு விளங்காது. அவர்களது மொழி எங்களுக்கு தெரியாது. அவர்களுக்கு நாங்கள் பேசும் மொழி தெரியாது. அதற்காகவே எங்களது கலை, கலாசார முறைப்படி தமிழ் மொழியில் நாங்கள் வேறாக ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளோம் எனக் கூறினார்கள்.

ஆகவே, தான் பாடசாலைக் கல்வியிலிருந்து மாணவர்களை தமிழ் பாடசாலை, பௌத்த பாடசாலை, முஸ்லிம் பாடசாலை என மொழி ரீதியாகவும், இன ரீதியாகவும் பிரித்து வைத்துள்ளார்கள். இதனால் பல்கலைக்கழகத்திற்குள் கற்கும் மாணவர்கள் பட்டதாரிகளாகியும் ஏனைய மொழிகளில் தேர்ச்சியில்லாத நிலை உருவாகியுள்ளது. ஆகவே, அடிமட்டத்தில் மொழிப் பிரச்சினைகள் தீர்க்கப்படல் வேண்டும். சகல மாணவர்களும் ஒரே கூரையின் கீழிருந்து மற்றவர்களது இன, மத, மொழி, கலை, கலாசாரத்தை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும்.

அவர்களது பிரச்சினைகளை பேசித் தெரிந்து கொள்ளக் கூடியவாறு நமது கல்வித்திட்டம் அமைந்தாக இருக்கவில்லை. அண்மையில் நான் மட்டக்களப்பு பல்கலைக்கழகம் சென்றபோது, அங்கு பல்கலைக்கழக கலாநிதிகள், அதிகாரிகள் எனவும், தமிழ், முஸ்லிம், பௌத்தம், கிறிஸ்தவம் எனவும் இன ரீதியாகவே பாடசாலை அதிபர்களும், பாடசாலைகளும் பிரிக்கப்பட்டுள்ளன. பன்மொழி பேசுகின்ற நமது நாட்டில் அடிமட்டத்திலிருந்து இந்த மொழிப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ஜெஸிமா இஸ்மாயில், பேரியல் அஷ்ரப் ஆகியோருடன் மொழி, இன ஐக்கியம், தேசிய நல்லிணக்கம் பற்றி பலமுறை பல நிகழ்வுகளில் நான் கலந்து பேசியிருக்கின்றேன். இந்த சாஹிராக் கல்லூரியிலும் ஒரு நிகழ்வில் கலந்துகொண்டிருக்கிறேன். ஜெஸிமா இஸ்மாயிலின் கணவர் ஒரு சிறந்த வைத்தியத்துறைப் பேராசிரியர். நான் கொழும்பு பல்கலைக்கழகத்தில் உபவேந்தராக பதவி வகித்த காலத்தில் பேராசிரியர் இஸ்மாயில் மருத்துவத்துறையின் தலைவராக இருந்தார். பல நிகழ்வுகளை அவருடன் நான் கலந்து ஆலோசித்துள்ளேன்.

இஸ்லாம், குர்ஆன், ஹதீஸ்-முஹம்மத் நபி வாழ்க்கை முறை பற்றியும் குர் ஆன் மொழிபெயர்ப்புக்களையும் நன்கு படித்துள்ளேன். சில குர்ஆன் சர்த்துக்களை ஆங்கில மொழிக் கருத்துகளையும் அவர் ஞாபகப்படுத்தினார். இஸ்லாம் மதம் சாந்தி, சமாதானமானதொரு மார்க்கமாகும். முஹம்மத் நபி (ஸல்) ஒரு பிரச்சினையை சுயமாகப் பேசி அவர் அதனைக் கூடி ஆராய்ந்து மசூரா முறையில் தீர்மானம் எடுக்கும் முறை பற்றியும் நான் அறிந்துள்ளேன். அதில் ஹதிஸ் கிரந்தங்களை நான் கற்றதில்,

★“ஓர் ஊழியனிடமிருந்து நாம் வேலை வாங்கினால் அவனது வியர்வை வற்றிவிட முன்னர் அவனுக்குரிய ஊதியத்தை வழங்குங்கள்”

★“ஒரு வீட்டில் கறி சமைக்கும்போது அதன் முதலாவது கறிக்கோப்பையை நமது அடுத்த வீட்டில் வாழும் குடும்பத்துக்கு முதலில் பகிர்ந்தளித்தல்”

போன்ற பல ஹதீஸ்கள் நினைவில் இருக்கின்றன.

பேராசிரியர் புர்க்கான் கொழும்பு சாஹிராக் கல்லூரியின் முன்னாள் அதிபர், பழைய மாணவர் தலைவர், ஆளுநர் சபைத் தலைவர் போன்ற பல பதவிகளை இக்கல்லூரியில் வகித்து கல்வி வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டதொரு பேராசிரியர். அவர் தனது பெயரில் இங்கு வகுப்பறைகளை நிர்மாணித்துள்ளார். அதிபராக பதவி வகித்த காலத்தில் ஊதியம் பெறாமலும் தனது சொந்த நிதியில் மாதம் 50 ஆயிரம் ரூபாவை பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கி கல்விக்கு உதவி செய்துள்ளார் என்றார்.

# கடவத்தையில் இளைஞரொருவர் கழுத்தறுக்கப்பட்டுக் கொலை

### சிறு வயது காதல் தொடர்பால் ஏற்பட்ட விபரீதம்!

கண்ணாடித் துண்டொன்றினால் இளைஞரொருவர் கழுத்து அறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவமொன்று கடவத்தை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

கடவத்தை, என்ட்ரூஸ் ஒழுங்கை பிரதேசத்திலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் (22) இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், கழுத்து வெட்டப்பட்டு படுகாயங்களுக்குள்ளான இளைஞர் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் (22) காலை கடவத்தை பிரதேசத்தில் வாடகை வீடொன்றில் ஏற்பட்ட முரண்பாடு வலுபெற்றதில் இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கோனஹேன பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞரொருவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். காதல் தொடர்பினால் ஏற்பட்ட முரண்பாட்டின் காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 19 வயது இளைஞர் கண்ணாடித் துண்டுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட சிறுமி வாடகை அறையில் தங்கியிருந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு கடவத்தை பிரதேசத்தில் இசை நிகழ்ச்சியொன்று இடம்பெற்றுள்ளதுடன், அதன்போது இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சிறுமி தனது முதலாவது காதலனை சந்தித்துள்ளார். அதனைத் தொடர்ந்து மீண்டும் அவர்களுக்கிடையிலான காதல் மலர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதன் பின்னர் இருவரும் சிறுமி தங்கியிருந்த வீட்டுக்கு வந்துள்ளனர்.

இதுதொடர்பில் தகவலறிந்த சிறுமியின் தற்போதைய காதலனான சந்தேகநபர், கோபமுற்று சிறுமி தங்கியிருந்த வீட்டுக்கு அதிகாலை 3 மணியளவில் வருகை தந்துள்ளார். குறித்த சிறுமி தனது முதலாவது காதலனுடன் குறித்த வாடகை வீட்டில் தங்கியிருந்த நிலையில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடவத்தை, கோனஹேன பிரதேசத்தைச் சேர்ந்த ராஜூ மதுசங்க என்ற இளைஞரே இந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமி, சிறுவர் புனர்வாழ்வளிப்பு நிலையத்திலிருந்து தப்பித்து வந்து இவ்வாறு வாடகை வீட்டில் தங்கியிருந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர் கொலை செய்த முறை தொடர்பில் பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளார். கடவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள வேண்டுமாயின் இராஜதந்திர தலையீடுகள் அவசியம்

### தூதுவர்கள் இதனைப் புரிந்து கொள்ளாமை கவலையளிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு





பிரச்சினைகளில் சிக்கிக் கொண்டு படுகுழியில் விழுந்துள்ள நாட்டைக் குணப்படுத்த சம்பிரதாய வேலைத்திட்டம் ஒருபோதும் ஒத்துவராது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரம் பாதாளத்தில் வீழ்ந்துள்ளது. அதிலிருந்து மீட்சி பெற முடியும். நிலையானதும், நேர்மையானதுமான வேலைத்திட்டத்தினூடாகவே அதனை முன்னெடுக்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

உடன்பாட்டுக்கு சுதந்திர வாய்ப்பு என்ற தொனிப்பொருளிலான, மெதகத் மாவத்தை சிவில் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத்திற்கு தனித்தனித் தீர்மானம் எடுத்து சுயமாக செயற்படமுடியாது. விசேடமாக சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை ஆகிய மூன்று தூண்களின் ஒன்றுபட்ட சுழற்சி முறைமை இருக்க வேண்டும்.

சமூக ஜனநாயக முறைமையின் பிரகாரம் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். மிகவும் யதார்த்த பொது வேலைத்திட்டத்தின் தேவைப்பாடு முன்பு ஒருபோதும் இல்லாத அளவிற்கு உணரப்படுகின்றது. குறித்த பொது வேலைத்திட்டம் யதார்த்த பூர்வமாக இருப்பதுடன் தினந்தோறும் கலந்துரையாடலுக்கு உட்படக் கூடிய நேர்மையானதாக இருக்க வேண்டும்.

எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் தொடர்பான தற்போதைய கருத்துகள் யதார்த்தபூர்வமற்றவை. வருமான பற்றாக்குறை மிகவும் மோசமான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளதுடன், வருமான பற்றாக்குறையை மறந்து பொருளாதார வளர்ச்சி வேகம் தொடர்பில் பேசுவது நகைப்புக்குரியது.

இவ்வாறான அனர்த்த காலத்தில் இராஜதந்திர தலையீடுகள் அவசியமானதாக இருக்கிறது. இலங்கையினால் நியமிக்கப்பட்ட தூதுவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகள் மிகவும் அதிகமாகும். துரதிர்ஷ்டவசமாக பெரும்பாலான தூதுவர்கள் இதனைப் புரிந்து கொள்ளாமல் இருக்கின்றனர். அது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

நாட்டைக் கட்டியெழுப்பும் பிரதான ஐந்து தூண்களில் சிவில் அமைப்புகளும் உள்ளடங்க வேண்டும். நல்லாட்சி மற்றும் உயரிய ஆட்சி முறைமைக்கு அது அத்தியாவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# பூனைப்பிட்டியில் இறந்த நிலையில் கரையொதுங்கிய ஆமை



(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பூனைப்பிட்டி பிரதேச கடற்கரையில் இறந்த நிலையில் கடல் ஆமையொன்று நேற்று (23) கரையொதுங்கியுள்ளது.

குறித்த கடற்பிரதேசத்தில் தொழிலுக்கு சென்ற மீனவர்கள் இவ்வாறு இறந்த நிலையில் கடல் ஆமையொன்று கரையொதுங்கியுள்ளதை அவதானித்து அதுபற்றி, ஆனைவிழுந்தான் வனவிலங்கு அலுவலக அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

45 - 50 கிலோ கிராம் நிறையுள்ள குறித்த கடல் ஆமையின் உடலில் சில காயங்களும் காணப்படுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை, கடந்த சில மாதங்களில் மட்டும் புத்தளம் மாவட்டத்தில் பல கடல் ஆமைகளும், பல டொல்பின்களும், சுறா மீன்களும் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விலங்குகள் மற்றும் தாவர பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ், சகல கடல்வாழ் ஆமைகள், அவற்றின் குஞ்சுகள் மற்றும் முட்டைகள் என்பன இலங்கையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், அண்மையில் எக்ஸ்பிரஸ் பேர்ள் எனும் கப்பலில் ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக பல தொன் நிறைகொண்ட இரசாயனம் கடல் நீரில் கலந்துள்ளமையால்தான் இவ்வாறு கடல் ஆமைகளும், மீன்களும் உயிரிழந்த நிலையில் கரையொதுங்குவதாக தொடர்ச்சியாக குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது.

எனினும், குறித்த கடல் ஆமைகள் உள்ளிட்ட கடல்வாழ் உயிரினங்கள் இறந்து கரையொதுங்குவதற்கான காரணங்களைக் கண்டறிய வனஜீவராசிகள் திணைக்களம் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# குருநாகல் - கொழும்பு வீதியில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு - பத்து பேர் காயம்


பொல்கஹவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருநாகல் - கொழும்பு வீதியில் ரத்மலகொட பிரதேசத்தில் பஸ்ஸொன்று நேற்று (23) காலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

ரிப்பர் ரக வாகனம் மற்றும் பஸ் என்பன நேருக்கு நேர் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இவ்வாறு விபத்துக்குள்ளான பஸ் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமானது என்பதுடன், முல்லைத்தீவிலிருந்து மஹரகம வரையில் பயணித்த பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் பதவிய பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய நபரொருவர் உயிரிழந்துள்ளதுடன், 10 பேர் காயமடைந்துள்ளனர். இவ்வாறு காயங்களுக்குள்ளான நபர்கள் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களில் நால்வர் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த விபத்து தொடர்பில் பஸ் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளனர்.







யாழ்ப்பாணம், நல்லூர் வடக்கு அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகமும், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேகமும் நேற்று (23) பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

## மாவட்ட செயலகத்தில் காணப்படும் பாரபட்சத்தை எதிர்த்து

# ‘நுவரெலியாவில் இருந்து நுவரெலியாவுக்கு’ கையெழுத்து சேகரிப்புப் பயணம் ஆரம்பம்



**27ஆம் திகதி மாவட்டச் செயலாளரிடம் கையளிக்கப்படும் என மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் திலகராஜ் தெரிவிப்பு**

நுவரெலியா மாவட்ட செயலக அதிகரிப்பினை காலி மாவட்டத்துக்கும் நுவரெலியா மாவட்டத்துக்கும் மாறுபட்ட விதத்தில் பாரபட்சமாக நடைமுறைப்படுத்துவதற்கு எதிராகவும் நுவரெலியா மாவட்டத்தில் முழுமையான பிரதேச செயலகங்களை நடைமுறைப்படுத்தவும் கோரி மலையக அரசியல் அரங்கம் முன்னெடுத்த ஒருமாத கையெழுத்து இயக்கத்தினை நிறைவாக நுவரெலியா மாவட்டம் முழுவதும் பயணித்து மக்களிடம் சேகரிக்கும் பணியை “நுவரெலியாவில் இருந்து நுவரெலியாவுக்கு” எனும் பயணமாக நடத்தவுள்ளதாக மலையக அரசியல் அரங்கம் அறிவித்துள்ளது.

மலையக அரசியல் அரங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் (22) கொழும்பில் நடத்திய ஊடகச் சந்திப்பிலேயே மேற்படி விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை 25ஆம் திகதி நுவரெலியா நகரில் ஆரம்பிக்கும் கையெழுத்துப் பெற்ற கோவைகளைச் சேகரிப்பு பயணம் வலப்பனை, ஹங்குராங்கெத்த, கொத்மலை, அம்பகமுவ ஆகிய பிரதேச செயலக எல்லைகளின் ஊடாகப் பயணித்து இறுதியாக 27ஆம் திகதி நுவரெலியா பிரதேச செயலக எல்லையை அடைந்து அன்று மாலை மாவட்டச் செயலாளரிடம் பொதுமக்கள் மனு கையளிக்கப்படும் என அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் உள்ள நகரங்களில் தமது குழுவினரிடம் கையெழுத்து மனுவை பொதுமக்கள் கையளிக்கத்தக்கதாக தமது களச் செயற்பாட்டாளர்கள் ஊடாக ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாகவும் நாளை 25ஆம் திகதி வலப்பனை, ஹங்குராங்கெத்த, கொத்மலை ஆகிய பிரதேச நகரங்களிலும் 26ஆம் திகதி அம்பகமுவ பிரதேச செயலக நகரங்களிலும் 27ஆம் திகதி நுவரெலியா பிரதேச செயலக பகுதி நகரங்களிலும் கையெழுத்துகள் பெற்ற கோவைகள் சேகரிக்கப்படவுள்ளன.

இத்தகைய ஜனநாயக வழியில் எமது கோரிக்கையை மாவட்டச் செயலாளர் ஊடாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர், பிரதமர், ஜனாதிபதி ஆகியோருக்கு அனுப்பி வைக்கும் அதேவேளை உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாதவிடத்து, மலையக அரசியல் அரங்கம் சார்பாக அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கினை தொடர்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்த ஊடகச் சந்திப்பில் பிரதான அமைப்பாளர் செந்தூரன், செயலாளர் கிருஷ்ணகுமார், உயர்பீட உறுப்பினர் வினோத் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

# ஹைபொரஸ்ட் பிரதேசத்தில் பொலிஸ் நிலையம் திறப்பு

(செ.திவாகரன்)

நுவரெலியா மாவட்டம் இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹைபொரஸ்ட் பிரதேசத்தில் புதிய பொலிஸ் நிலையம் உத்தியோகபூர்வமாக கடந்த 21ஆம் திகதி





காலை திறந்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைவாக, நாட்டில் புதிய பொலிஸ் நிலையங்களை திறக்கும் வேலைத்திட்டத்திற்கு அமைவாக இந்த பொலிஸ் நிலையம் ஹைபொரஸ்ட் பிரதேச மக்களின் நலன்கருதி திறந்து வைக்கப்பட்டது.

பொலிஸ்மா அதிபர் டி.ஜி.விக்கிரமரத்னவின் ஆலோசனைக்கமைய, நுவரெலியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்தி.யூ.உடுகமசூரியவின் அழைப்பின் பேரில் மத்திய மாகாண பொலிஸ்மா அதிபர் பிரசாத் ரணசிங்கவின் வழிகாட்டலின்கீழ், மத்திய மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன புதிய பொலிஸ் நிலையத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

ஹைபொரஸ்ட் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த பொலிஸ் நிலையம் ஆறு கிராமசேவகர் பிரிவினை உள்ளடக்கி ஹைபொரஸ்ட் - கோணப்பிட்டிய பிரதான வீதிக்கு அருகில் ஹைபொரஸ்ட் முதலாம் பிரிவு தோட்டத்தில் 1928ஆம் ஆண்டு கட்டப்பட்ட கட்டடம் ஒன்றை புதுப்பித்து நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

ஹைபொரஸ்ட் இல 1 - 3 வரையான தோட்டப்பகுதிகள், குருந்துஓயா பிங்கந்தலாவை, கோணக்கலை, மெரிகோல்ட் மற்றும் கோணப்பிட்டியவில் ஒரு பகுதி அடங்களாக வாழும் மக்கள் பயன் பெறும் வகையில் இந்த பொலிஸ் நிலையம் மத்திய பகுதியில் போக்குவரத்துக்கு இலகுவாக ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# அக்கரப்பத்தனை அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேக பெருவிழா

(க.கிஷாந்தன்)

நுவரெலியா - அக்கரப்பத்தனை நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி பெருவிழா நேற்று (23) நடைபெற்றது.







கடந்த 19ஆம் திகதி புதன்கிழமையுடன் ஆரம்பித்த கிரியாரம்பத்தை தொடர்ந்து நேற்றுமுன்தினம் 22ஆம் திகதி எண்ணெய்க் காப்பு நடைபெற்றதுடன் நேற்றுக் (23) காலை மஹாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி பெருவிழா நடைபெற்றது.

சிவஸ்ரீ சிவகுகேந்திர குருக்கள் தலைமையில் நடைபெற்ற இந்த மஹா கும்பாபிஷேகத்திற்கு நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர்களான ஏ.பி.சக்திவேல், ஆர். ராஜாராம், அக்கரப்பத்தனை பிரதேச சபைத் தலைவர் கதிர்ச்செல்வன் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும், தொடர்ந்து 48 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பரீட்சைத் தினத்தில் பரிதவித்த குழந்தை!

## பெற்றோரின் கவனக்குறைவால் கண்டியில் பரபரப்பு

**3 வயது குழந்தையை காப்பாற்றிய சிங்களத் தாயார்**

(கண்டி நிருபர்)

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தமது பிள்ளையை அழைத்துச் சென்ற பெற்றோர்கள் இருவரும் தம்முடன் அழைத்துச் சென்ற தமது 3 வயது குழந்தையை பாதையின் ஓரத்தில் கைவிட்டுச் சென்றதால், குழந்தை திக்குமுக்காடிய நிலையில், பெரும்பான்மை சமூகப் பெண் ஒருவர் அக்குழந்தையை பாதுகாத்து வைத்திருந்த சம்பவம் ஒன்று கண்டி கெலிஓயாவில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை நாடளாவிய ரீதியில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை இடம்பெற்றது. கண்டி மாவட்டத்தில் கெலிஓயாவை சூழவுள்ள பகுதி தமிழ் மொழிமூல மாணவர்களுக்கு கெலிஓயா, தவுகல வீதியில் அமைந்துள்ள ஒரு சிங்கள மகா வித்தியாலயத்தில் மேற்படி பரீட்சைக்கான மண்டபம் ஒதுக்கப்பட்டிருந்தது.

மேற்படி மண்டபத்திற்கு கலுகமுவ பகுதியில் இருந்து பரீட்சார்த்தி ஒருவரின் பெற்றோர் தமது பிள்ளையை அழைத்து வந்துள்ளனர். அவர்களுடன் 3 வயதுடைய மற்றொரு குழந்தையையும் அழைத்துச் சென்றுள்ளனர்.

புலமைப்பரிசில் பரீட்சையில் தமது பிள்ளை அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைய வேண்டும் என்ற ஆசையில் பெற்றோர்கள் தம்முடன் அழைத்துவந்த தமது மற்ற குழந்தையை மறந்த சம்பவமே பலருக்கும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

பரீட்சை மண்டபத்திற்கு முன்பாக உள்ள வீதியில் குறிப்பிட்ட நேரத்தில் சற்று வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் எப்படியாவது பாதுகாப்பாக பாதையைக் கடந்து தமது பிள்ளையை பரீட்சை மண்டபத்தில் பத்திரமாக சேர்க்க வேண்டும் என்ற ஆர்வத்தில் பாதையை கடந்துள்ளனர். இந்த ஆர்வத்தால் தமது மற்றகுழந்தை பற்றி எவ்வித நினைவும் இல்லாதவர்களாக பாதையை கடந்துள்ளனர்.

குறித்த குழந்தைக்கு பாதை கடக்க தெரியாத நிலையில், அச்சமடைந்து அழ ஆரம்பித்துள்ளது. இந்நிலையில், சுற்று வட்டாரத்தில் இருந்தவர்கள் பெரும்பான்மை இனத்தவர்கள் என்பதால் குழந்தையின் மொழியும் புரியாத நிலையில் ஒரு சிங்களத் தாயார் குழந்தையை தன்னுடன் வைத்து பாதுகாத்துக் கொண்டிருந்துள்ளார். குழந்தை தொடர்ந்து அழுதுக்கொண்டிருந்துள்ளது.

குழந்தையின் பெற்றோர் குறித்து தெரியாத நிலையில், குழந்தையை அப்பெண்ணே வைத்திருந்துள்ளார். தமது குழந்தை கணவனிடம் இருப்பதாக மனைவியும் மனைவியிடம் இருப்பதாக கணவனும் நினைத்துள்ளனர். தாய் பரீட்சை மண்டபத்தினுள்ளும் தந்தை அதற்கு வெளியேயும் நின்றுள்ளனர். ஆனால், குழந்தை அநாதரவாக பாதை ஓரத்தில் அழுகையுடன் இருந்துள்ளது.

பரீட்சை ஆரம்பித்த போது, மண்டபத்தை விட்டு தாய் வெளியே வந்துள்ளார். அப்போது, குழந்தை ஒன்று அநாதரவாக கைவிடப்பட்ட செய்தி பரவ ஆரம்பித்தது. இது குறித்த தாயின் காதுக்கும் எட்டியுள்ளது. அப்போதே, தனது குழந்தை தன்னுடன் இல்லை என்பது அவர்களுக்கு தெரிய வந்துள்ளது. ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டியவர்களாக குழந்தையைத் தேடினர். அப்போதே குழந்தையை குறித்த சிங்களத் தாயார் பெற்றோர்களிடம் ஒப்படைத்துள்ளார்.

அது மட்டுமல்ல, குறித்த பெற்றோர்கள் இருவரையும் கடுமையாகவும் சாடியுள்ளார். பிள்ளைகள் பரீட்சை எழுதுவது தொடர்பாக பெற்றோருக்கு ஆர்வம் இருக்கத்தான் வேண்டும். அதற்கான மற்ற குழந்தையை மறந்து நடுத்தெருவில் கைவிடும் அளவுக்கு என்ன தேவை வந்தது என அச்சிங்களத் தாயார் கடுமையாக விமர்சித்துள்ளார்.

# சிவனொளிபாதமலையின் குளிரில் சுகயீனமடைந்தவர் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(மஸ்கெலியா நிருபர்)

சிவனொளிபாதமலைக்கு தரிசிக்க சென்றபோது, அங்கு நிலவும் கடும் குளிர் காலநிலை காரணமாக சுகயீனமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுவந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சிவனொளிபாதமலைக்கு தரிசிக்க சென்றபோது சியத்தல-கங்குல பகுதியில் நிலவும் கடும் குளிர்காரணமாக சுகயீனமடைந்த குறித்த பெண், மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் மினுவாங்கொட பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய சமாரா மாலதி என்ற பெண் ஆவார். இவர் நேற்று (23) நள்ளிரவு 2 மணியளவில் திடீரென சுகயீனமடைந்த நிலையில் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர்.

இவரது சடலம் வைத்தியசாலையில் உள்ள பிரேத அறையில் வைக்கப்பட்டு, பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக மஸ்கெலியா மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

# மாத்தளை அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய மகோற்சவம் 26ஆம் திகதி ஆரம்பம்

(மாத்தளை நிருபர்)

மாத்தளை அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக மகோற்சவம் நாளைமறுதினம் 26ஆம் திகதி புதன்கிழமை காலை 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

பெப்ரவரி 16ஆம் திகதி புதன்கிழமை சிவனடியார் திருவிழாவும் 17ஆம் திகதி வியாழக்கிழமை இரதோற்சவமும் 19ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் 20ஆம் திகதி திங்கட்கிழமை பூங்காவன திருவிழாவும் நடைபெறவுள்ளது.

கொவிட் -19 தொற்றுநிலை காரணமாக பஞ்சரத பவனி நகர் ஊர்வலம் வருவது தொடர்பாக மாத்தளை மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் கொவிட் தடுப்பு குழுவினருடனும் சுகாதாரப் பிரிவினர் மற்றும் உயர் அதிகாரிகளுடனும் கலந்தாலோசித்த பின்னர் அறிவிக்கப்படுமென மேற்படி தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவர் தெரிவித்தார்.



**கொட்டகலை பிரதேச சபையின் தலைவர் ராஜமணி பிரஷாந்தின் தலைமையில் நேற்றுமுன்தினம் (22) சிவில் அமைப்புகள் மற்றும் பல தரப்பினர்களின் பங்குபற்றலுடன் கொட்டகலை நகரத்தில் டெங்கு ஒழிப்பு செய்வதற்கான சிரமதானம் இடம்பெற்றது.**

(செ.திவாகரன்)







**வன்னி ஹோப் - அவுஸ்திரேலியா மற்றும் ரட்ணம் பவுண்டேஷன் - பிரித்தானியா ஆகிய நிறுவனங்களின் நிதி அனுசரணையில் கொட்டகலை எதன்சைட் பாடசாலையில் அமைக்கப்பட்ட கணினி ஆய்வுகூடம் ஒன்று நுவரெலியா கல்வி வலய பிரதி கல்விப் பணிப்பாளர் எஸ்.மோகன்ராஜினால் திறந்து வைக்கப்பட்டது.**

(படங்கள் : தலவாக்கலை நிருபர்)

தமிழன்
வணிக உலகம்
Business world
GROWTH
www.thamilan.lk

# துறைமுக நகரத்தில் செல்ஃபி எடுக்க கட்டணம் எதுவும் தேவையில்லை





துறைமுக நகரத்தில் எடுக்கப்படும் தனிப்பட்ட செல்ஃபிகள் அல்லது வீடியோக்களுக்கு பொதுமக்கள் கட்டணம் செலுத்த வேண்டும் என்று சமூக ஊடகப் பதிவுகளில் குறிப்பிடப்படுகின்ற குற்றச்சாட்டில் எந்த உண்மையும் இல்லை என்பதை கொழும்புத் துறைமுக நகரம் பொது மக்களுக்கு தெரிவிக்க விரும்புகிறது.

இருப்பினும், புதிதாக பொது மக்களுக்காக திறக்கப்பட்ட துறைமுக நகரத்தின் கடற்கரை நடைபாதையைப் பயன்படுத்துவதற்கு பொது மற்றும் தனியார் துறையினரிடமிருந்து முன்னெப்போதும் இல்லாத அளவில் கோரிக்கைகள் விடுக்கப்பட்டமையால், தனிப்பட்ட நிகழ்வுகள், தொழில்சார் மற்றும்/அல்லது வணிக நோக்கத்திற்கான படப்பிடிப்பு மற்றும் புகைப்படம் எடுத்தல் ஆகியவற்றுக்காக கட்டண முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான படப்பிடிப்பு, புகைப்படம் எடுப்பது இடையூறாக இருப்பதாகவும் கடற்கரை நடைபாதைக்கு வரும் பிற பார்வையாளர்களின் அந்தரங்கத்தை மீறுவதாகவும் எங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் இடம்பெற்றுவரும் கட்டுமானப் பணிகளைக் கருத்தில் கொண்டு, துறைமுக நகரத்தில் இதுபோன்ற தொழில்முறை படப்பிடிப்பு அல்லது புகைப்படம் எடுப்பதில் ஈடுபட விரும்பும் எவருக்கும், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாமல் இருக்கவும், தேவைப்படுபவர்களுக்கு சிறந்த சேவையை வழங்கவும் இந்த முறைமை அமைப்பு மற்றும் இதற்கென ஒதுக்கப்பட்ட கால அட்டவணை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கடற்கரை நடைபாதை தினமும் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை பொதுமக்களுக்காக திறந்திருக்கும். கட்டணம் செலுத்திய படப்பிடிப்பையும் புகைப்படம் எடுத்தலையும் காலை 9 மணிக்கு முன் அல்லது வேண்டுகோள் விடுக்கப்படுகின்ற பிற நேரங்களில் மேற்கொள்ளலாம்.

துறைமுக நகரத்தினுள் தனிப்பட்ட மொபைல் தொலைபேசிகள் அல்லது கெமராக்களைப் பயன்படுத்தி தனிப்பட்ட படங்கள், வீடியோக்கள் மற்றும் செல்ஃபி எடுக்க விரும்புவோருக்கு கட்டணம் எதுவும் கிடையாது என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

மேலும், புகழ்பெற்ற சமூக அல்லது பிரதான ஊடக நிலையங்கள் தொடர்புடைய பணிப்பிரிவுகளின் முன் அனுமதியுடன் துறைமுக நகரத்தினுள் செய்திகள் அல்லது நடப்பு விவகாரங்கள் (வணிகமற்ற நோக்கங்களுக்காக) படப்பிடிப்பு, புகைப்படம் எடுப்பதை எவ்விதமான கட்டுப்பாடுகளுமின்றி சுதந்திரமாக மேற்கொள்ளலாம்.

தனிப்பட்ட வைபவங்கள், திருமணங்கள், தயாரிப்பு அல்லது நவநாகரிக விளம்பரங்கள், இசை வீடியோக்கள், விளம்பரங்கள் அல்லது ஏனைய வகை வணிகப் படப்பிடிப்பு போன்றவற்றுக்கு படப்பிடிப்பு, புகைப்படம் எடுப்பதற்கு மட்டுமே கட்டணங்கள் விதிக்கப்படும். இவற்றின் மூலம் கிடைக்கும் வருமானம், கொழும்புத் துறைமுக நகரின் பொதுப் பகுதிகளை நிர்வகிக்கும் Estate Management Company (EMC) மூலம் பொது இடங்கள், கழிவறைகள் மற்றும் குப்பை அகற்றுதல் ஆகியவற்றின் பராமரிப்புப் பணிகளுக்காக பயன்படுத்தப்படும்.

துறைமுக நகரத்தின் பகுதிகளான கடற்கரை, கோல்ஃப் திடல், கடற்கரை பூங்கா மற்றும் இலகுரக பொழுதுபோக்கு வாகனச் சவாரித் திடல் ஆகியவை செயல்படத் தொடங்கியதிலிருந்து தனியார் தொழிற்பாட்டாளர்களால் கட்டண அடிப்படையில் நிர்வகிக்கப்படுகின்றன.

**RATE CARD FOR VIDEOGRAPHY/PHOTOGRAPHY IN PORT CITY**

| CATEGORY | NR. OF PARTICIPANTS | ALLOCATED TIME | RATE |
|---|---|---|---|
| Photography or filming of personal events, ceremonies, weddings, fashion shoots, small scale music videos, dance acts, social media shows (non Port City related) | 2-5 | 1-3 hrs | Rs. 30,000 |
| | 6-10 | 1-3 hrs | Rs. 50,000 |
| | more than 10 | 1-3 hrs | variable |
| Photography or filming of commercial advertisements, product promotions, large scale music videos, events, TV shows, films, foreign productions | less than 10 | 1-3 hrs | Rs. 100,000 |
| | more than 10 | 1-3 hrs | variable |

# கொம்பாங்க் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அத்தியாவசிய மருத்துவ உபகரணங்களை நன்கொடையாக வழங்கியது

COMMERCIAL BANK

அரசாங்க வைத்தியசாலைகளையும் சுகாதார நிறுவனங்களையும் ஆதரிக்கும் கொமர்ஷல் வங்கியின் முன்னெடுப்பின்கீழ் பயன்பெற்ற புதிய பயனாளியாக திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலை, இதன்மூலம் வைத்தியசாலையினால் வழங்கப்படும் அவசர சேவைகளை மேம்படுத்தக்கூடிய சில அத்தியாவசிய மருத்துவ உபகரணங்களைப் பெற்றுக்கொண்டது.

திருகோணமலை வைத்தியசாலைக்கான நன்கொடைகளில் பிராணவாயு சீராக்கிகள், இரத்த அழுத்தமானிகள், சேலைன் தாங்கிகள், அதியுயர் சார்புநிலை அலகு படுக்கைகள், படுக்கை அருகிலான பிராணவாயு மானிகள், இருதயத் துடிப்பு கணினித்திரைகள், இருதயத் துடிப்பு வரைகருவி (CTG) இயந்திரம், குரல்வளைகாட்டி காணொளி இயந்திரம், இரத்த நாள அடைப்பு (DVT) பம்பி ஆகியவை உள்ளடங்கியிருந்தன.

வங்கியின் CSR நிதியம் ஏற்கெனவே 25க்கும் மேற்பட்ட அரசாங்க வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உபகரணங்களையும் தனிநபர் பாதுகாப்பு உபகரண (PPE) ஆடைகள், முகக்கவசங்கள், சிகிச்சை முகக்கவசங்கள், கை சுத்திகரிப்பான்கள், கீற்று விளக்குகள், நாடித்துடிப்பு பிராண வாயு மானிகள், பலபேற்று கணினித்திரைகள் மற்றும் பிராணவாயு செறிவாக்கிகள் ஆகியவற்றை கொவிட்-19 க்கு எதிரான போராட்டத்துக்கு ஆதரவாக நன்கொடையாக வழங்கியிருந்தது.

இந்த நன்கொடைகள் நலன்பேணுபவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் நோயாளர்களால் உணரப்படும் சுகாதாரசேவையின் தரத்தை மேம்படுத்தவும் வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்தவும் வங்கியினால் வழங்கப்பட்டிருந்தது.

கொமர்ஷல் வங்கி, அரசாங்கத்தினால் கடந்தவருடம் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய கொவிட்-19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்துக்கும் பண நன்கொடையை வழங்கியிருந்தது.




**கொமர்ஷல் வங்கியின் கிழக்குப் பிராந்திய முகாமையாளர் அருளம்பலம் ஜெயபாலன், திருகோணமலை கிளையின் முகாமையாளர் சோமசுந்தரம் சிவகுமார், வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர். ஐ. டபிள்யூ. எம். ஜகத் விக்ரமரத்னவிடம் உபகரணங்களைக் கையளிக்கும்போது எடுக்கப்பட்ட படம்.**

திகதி 22.01.2022
சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4655
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 12,606,870.00
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 4 6 8 0 7 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 30,861,836.00

கொவிசெத
Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2950
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 6,233,800.00
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 45 48 56 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 61,174,946.40

Mega POWER
மெகா பவர்
கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 1003
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,932,880.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ 178,350,354.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து V
சுப்பர் இலக்கம் 24
வெற்றி இலக்கங்கள் 02 36 51 67
மெகா அதிர்ஷ்ட இலக்கம்
12717

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 685
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,834,100.00
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 08 33 54 66
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 93,523,426.40

ஜாதிக சம்பத
JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1201
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 1,912,120.00
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 0 1 3 4 3 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 11,816,542.40

செவன
சீட்டிழுப்பு இலக்கம் 347
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,194,740.00
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 18 45 49 88
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 14,249,738.40

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# The Business School (TBS) நிறுவனத்துக்கு CNCI தங்கம் மற்றும் வெள்ளி விருதுகள்



இலங்கையில் முதல் தடவையாக ஆரம்பிக்கப்பட்ட தொழில்முயற்சியாளர்களுக்கான சாதகமான சிந்தனை எனப்படும் Positive Thinking தொழில்முயற்சியாளர் கல்லூரி, The Business School (TBS), இலங்கை தேசிய கைத்தொழில் சபை (CNCI) அமைப்பு ஏற்பாடு செய்த 2021ஆம் ஆண்டுக்கான சிறந்த கைத்தொழிலாளர் விருது விழாவில் தேசிய மட்டத்திலான சேவைகள் பிரிவின் வெள்ளிப் பதக்க விருதையும் மாகாண மட்டத்திலான சேவைகள் பிரிவின் தங்கப் பதக்க விருதையும் வென்றுள்ளது.

கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவங்சவின் தலைமையில் கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெற்ற மேற்படி விருது வழங்கும் விழாவில் The Business School ஸ்தாபகர் நுவன் சஜீவக்க ஜயகொடி மற்றும் இணை ஸ்தாபகரும் பிரதான நிறைவேற்று அதிகாரியுமான துலேந்திர ஹேரத் ஆகியோர் தமக்கான விருதுகளை பெற்றுக்கொண்டனர். 2010ஆம் ஆண்டில் நுவன் ஜயகொடியின் எண்ணக்கருவுக்கமைய துலேந்திர ஹேரத் மற்றும் துசார திசாநாயக்க ஆகியோரினால் 2017ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட The Business School இரண்டு மாணவர்களுடன் தொடங்கி இன்று மாதமொன்றுக்கு 300 இற்கு மேற்பட்டவர்களுக்கு அறிவை வழங்கும் பெரும் நிறுவனமாக வளர்ச்சியடைந்துள்ளது. அதன் வர்த்தக அலுவலகம் கொழும்பு உலக வர்த்தக நிலையத்திலும் கல்வி அலுவலகம் கடவத்தை நிக்காடோ சிட்டி வளாகத்திலும் பயிற்சி நிலையம் கண்டி தலதா மாளிகைக்கு அண்டியதாகவும் அமைந்துள்ளது.

ஆங்கிலம் மற்றும் சீன மொழிகள், கணினி, Advanced Graphic Designing, கிட்டார், ஓகன் மற்றும் நடனம், நிதி முகாமைத்துவம் மற்றும் இணையவழி வர்த்தக பாடநெறிகள் ஆகியவை இந் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தனித்துவமான பாடநெறிகளாகும். 18 வயது நிரம்பிய எவருக்கும் மூன்று கட்டங்களுடன் கூடிய நான்கு வார கால இணைய வழி ஊடாக பணம் உழைக்கக்கூடிய வழிமுறைகளை கற்கக் கூடிய அடிப்படை பாடநெறியை கற்க முடிவதோடு அதில், அடிப்படையில் ஒரு தொழில்முயற்சியாளர் எவ்வாறு சிந்திப்பார் என்பது தொடர்பாக அறிவுறுத்தப்படுகிறது. அதற்கேற்ப அவருடைய மனது தயார் செய்யப்படும். அடுத்த கட்டமாக இரண்டு மாதங்கள் வரை தான் தெரிவு செய்த இலத்திரனியல் சந்தையில் பணம் உழைக்கக்கூடிய ஆறு வழிமுறைகளில், இரண்டு வழிமுறைகள் மற்றும் செய்முறை ரீதியாக இலத்திரனியல் சந்தையொன்றை எவ்வாறு உருவாக்க முடியும் என்பது தொடர்பாக விளக்கமளிக்கப்படும். கடந்த இரண்டு ஆண்டுகளில் கொவிட் பெருந்தொற்று எனும் சவாலை சிறப்பாக வெற்றிக் கொண்டு சூம் தொழில்நுட்பத்தின் துணையுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் பலர் இதில் கல்வி கற்றுள்ளார்கள். வர்த்தக உலகின் சவால்களை வலுவுடன் எதிர்கொள்ளும் விதம், குழு உணர்வு மற்றும் வெற்றிச் சிந்தனை ஆகிய கோட்பாடுகளை கட்டியெழுப்பும் பயிற்சிப் பாடநெறியொன்று அதை தொடர்ந்து அவர்களுக்கு கற்பிக்கப்படும்.

# பாதுகாக்கப்பட்ட வலயங்களிலும் மீன்பிடியில் ஈடுபடலாம்; பாரம்பரிய முறையை யாரும் தடுக்க முடியாது

## வனஜீவராசிகள் அதிகாரிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் எடுத்துரைப்பு





மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்து வலுப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படுகின்ற விவசாய மற்றும் நீர்வேளாண்மை செயற்பாடுகள் தடைசெய்யப்பட முடியாதவை என்பதே தற்போதைய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்று தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வனப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களின் நியாயமான நோக்கங்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மருதங்கேணி, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் (22.01.2022) நடைபெற்ற கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக அடையாளப்படுத்தப் பட்டிருந்தாலும் பாரம்பரிய முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதை யாரும் தடைசெய்ய முடியாது என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசத்திற்குள் அமைந்துள்ள கட்டைக்காடு எழுவரைக் குளத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு பிரதேச மீனவர்களுக்கு உடனடியாக அனுமதியளிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் மக்களின் செயற்பாடுக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் - குறிப்பாக விவசாயம் மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு, பருவகால குளங்களில் கடலுணவு வளர்ப்பு போன்ற நீர் வேளாண்மை செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் வனப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் தொடர்பாக ஆராயும் நோக்கில் இந்த கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த பிரதேச செயலாளர் பிரபாகரமூர்த்தி "சுண்டிக்குளம் தேசிய பூங்காவிற்கான பிரதேசமாக சுமார் 19 ஆயிரம் ஹக்டேயர்களும், நாகர்கோவில் பிரதேசத்தில் சரணாலயமாக மேலும் 19 ஆயிரம் ஹக்டேயர்களும் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை, மணற்காடு சவுக்குத்தோப்பு பகுதியில் சுமார் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை வனப்பாதுகாப்பு திணைக்களத்தினால் பிரகடனப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவற்றினால் வாழ்வாதார செயற்பாடுகள், அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் அன்றாட வாழ்விற்கும் அச்சுறுத்தல் ஏற்படுவதாக மக்களால் பிரதேச செயலகத்திடம் முறையிடப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

இதனையடுத்து, வனப் பாதுகாப்பு திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் பிரதேச பிரதானிகளும், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளும் தமது கருத்துகளை தெரிவித்தனர்.

அனைத்து தரப்பினரது கருத்துகளையும் செவிமடுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மேற்குறிப்பிடப்பட்ட ஆலோசனைகளை தெரிவித்ததுடன், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடி எந்தத் தரப்பினது நியாயமான நோக்கங்களுக்கும் பாதிப்பில்லாத வகையில் கொள்கை முடிவு மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப் படுத்தப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# வவுனியா சதொச விற்பனை நிலையத்தில் அத்தியாவசிப் பொருட்களுக்கு தட்டுப்பாடு

(வவுனியா நிருபர் )

வவுனியாவில் அமைந்துள்ள சதொச விற்பனை நிலையத்தில் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

நாடு முழுவதும் சதொச விற்பனை நிலையங்களினூடாக அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுமென வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ள நிலையில் வவுனியாவில் அமைந்துள்ள சதொச விற்பனை நிலையங்களுக்கு செல்லும் பலரும் அத்தியாவசிப் பொருட்களைப் பெற முடியாது ஏமாற்றத்துடன் திரும்பி வருவதாக தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக சீனி, பால்மா மற்றும் சில அரிசி வகைகளுக்குத் தட்டுப்பாடு காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். பருப்பு மற்றும் பொன்னி அரிசி என்பனவே அங்கு அதிகமாகக் கிடைப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# ஏ9 வீதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து ஹயஸ் வாகனம் விபத்து

(வவுனியா நிருபர் )



வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற ஹயஸ் வாகனம் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து கொக்காவில் பகுதியில் விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற ஹயஸ் வாகனமொன்று கொக்காவில் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. இதன்போது ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்த விபத்து குறித்து மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# தேசிய கலை இலக்கியப் பேரவைக்கு வவுனியாவில் புதிய அலுவலகம்

(வவுனியா நிருபர்)





முற்போக்கு கலை இலக்கிய செயற்பாடுகளின் முன்னோடியாக செயற்பட்டுவரும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் அலுவலகம் வவுனியாவில் நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டது. பேரவையின் தலைவர் க.தணிகாசலம் தலைமையில் குடியிருப்பு வீதி, பூந்தோட்டம், வவுனியா எனும் முகவரியில் குறித்த அலுவலகம் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை சு.டொன்பொஸ்கோ நிகழ்த்தியிருந்தார். அதனைத் தொடர்ந்து பேரவையின் தலைவரால் அலுவலகம் உத்தியோகபூர்வமாக நாடாவெட்டித் திறந்துவைக்கப்பட்டது. அதனைதொடர்ந்து வாழ்த்துரைகளும், கவிதை அரங்கும் இடம்பெற்றிருந்தது.

அலுவலகத்தில் இ.கா.சூடாமணி அரங்கு மற்றும் மாவை வரோதயன் நூலகம் என்பன அமையப் பெற்றுள்ளன. இந்நிகழ்வில் சிரேஷ்ட பொதுவுடமைவாதி சி.கா.செந்தில்வேல், ஓய்வுநிலை விரிவுரையாளர் பார்த்தீபன், தமிழ்மணி மேழிக்குமரன், நி.பிரதீபன், கலை இலக்கியச் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# முல்லைத்தீவில் பெரும்போக நெல் அறுவடை; விளைச்சல் வீழ்ச்சியால் விவசாயிகள் அவதி




(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது பெரும்போக நெல் அறுவடையில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

இந்நிலையில் இம்முறை பெரும்போக நெல் விளைச்சல் பாரிய அளவில் வீழ்ச்சி அடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

பயிர்ச்செய்கைகளுக்குரிய இரசாயன உரமின்மை மற்றும் களை நாசினி, கிருமி நாசினி என்பவற்றின் விலையேற்றம் காரணமாக அவற்றைத் தாம் வாங்கி பயன்படுத்த முடியாத நிலை போன்ற காரணங்களினாலேயே இம்முறை தமது பெரும்போக நெற்செய்கையின் விளைச்சலில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். அதேவேளை தற்போது எரிபொருட்களின் விலை அதிகரிப்பினால் அறுவடை இயந்திரக் கூலி முன்பை விடத் தற்போது அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக ஏக்கர் ஒன்றிற்கு தாம் 9 ஆயிரம் தொடக்கம், 10 ஆயிரம் வரையில் அறுவடை இயந்திரக்கூலியாக வழங்கவேண்டியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இம்முறை நெற்செய்கை விளைச்சல் பாரிய அளவு வீழ்ச்சியடைந்துள்ள சூழலில், அறுவடைக்கான கூலி முன்பைவிட அதிகரித்திருப்பது தம்மை மேலும் சிக்கலுக்குள்ளாக்கி இருப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனை விட நெல்லினை சந்தைப்படுத்துவதிலும் பல்வேறு இடர்களுக்கு தாங்கள் முகங்கொடுப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக உலர்ந்த சிவப்புப் பச்சை (கோரா) நெல்லினை வியாபாரிகள் 6 ஆயிரம் ரூபாவுக்கு தம்மிடமிருந்து பெறுவதாகவும், உலராத நெல்லினை 4 ஆயிரத்து 500 ரூபாவுக்குப் பெறுவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே, தாம் கட்டாயமாக நெல்லினை உலரவைத்து சந்தைப்படுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், தற்போது முல்லைத்தீவில் மும்முரமாக நெல் அறுவடை இடம்பெறுவதால், விவசாயிகள் அனைவரும் நெல் உலரவிடும் தளங்களை பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. ஆகவே, முல்லைத்தீவு விவசாயிகள் பலத்த இன்னல்களுக்கு மத்தியில், பிரதான வீதிகளை நெல் உலரவிடும் தளங்களாக பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரி மின் மயான அபிவிருத்திக் குழு தெரிவு

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் நகரசபையின் கோரிக்கைக்கு அமைவாக புலம்பெயர் மற்றும் உள்ளூர் உறவுகளின் நிதிப் பங்களிப்புடன் நிறுவப்படவுள்ள மின் மயானத்திற்கான மயான அபிவிருத்திக் குழு நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் தெரிவுசெய்யப்பட்டது.



சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தலைமையில் நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த அபிவிருத்திக் குழுத் தெரிவில் மின் மயான அபிவிருத்திக் குழுத் தலைவராக சாவகச்சேரி வர்த்தக சங்கத் தலைவர் ந.சிவபாலன், செயலாளராக சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் இ.சிவமங்கை, பொருளாளராக அதிபர் தேவரதி, திட்ட இணைப்பாளராக சமூகசேவகர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி, உப தலைவராக சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன், உப செயலாளராக சட்டத்தரணி திசாந்தினி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். அத்துடன் சாவகச்சேரி லயன்ஸ் கழகம், கொடிகாமம் வர்த்தக சங்கம், கைதடி வர்த்தக சங்கம், சாவகச்சேரி இளைஞர் கழகம், வைத்தியர்கள், சமாதான நீதவான்கள், கிராம சேவகர்கள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள் சார்பாக ஒவ்வொருவர் என்ற ரீதியில் 17 பேர் கொண்ட மின் மயான அபிவிருத்திக் குழு தெரிவுசெய்யப்பட்டுள்ளது. சாவகச்சேரியில் மின் மயானம் நிறுவ சுமார் ஒன்றரைக் கோடி ரூபா தேவை என்ற நிலையில் இதுவரை 18 இலட்சம் ரூபா நிதி சேகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா தோணிக்கல்லில் எரிவாயு அடுப்பு வெடிப்பு

## பொலிஸார் விசாரணை

(வவுனியா நிருபர்)

வவுனியா, தோணிக்கல் பகுதியில் சமைத்துக் கொண்டிருந்தபோது சமையல் எரிவாயு அடுப்பொன்று வெடித்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, தோணிக்கல், திருவள்ளுவர்



வீதியிலுள்ள வீடொன்றில் பெண்ணொருவர் சமைத்துக் கொண்டிருந்தபோது நேற்று முன்தினம் திடீரென சமையல் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது. இதனையடுத்து வீட்டார் சமையல் எரிவாயு சிலிண்டரை பாதுகாப்பாக அகற்றி மேலதிக அனர்த்தம் ஏற்படுவதைத் தடுத்துள்ளனர். அத்துடன் குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸில் முறைப்பாடும் செய்துள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார், தடவியல் பொலிஸாரின் உதவியுடன் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய 125 ஆவது ஆண்டு நிறைவு விழா வவுனியாவில்

(வவுனியா நிருபர்)




சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கமும், இராமகிருஷ்ண மிஷனும் இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் விவேகானந்தரின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாயின.

சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் நடராஜர் மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலய சுவாமி ஹரிவ்ரதானந்த மஹராஜ் மற்றும் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி அஸராத்மானந்த மகராஜ் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.



# அம்பாறை மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஆராய்வு





(வி.சுகிர்தகுமார் - றாசிக் நபாயிஸ்)

அம்பாறை மாவட்ட மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அறிந்து கொள்ளும் வகையில் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் ஏற்பாடு செய்த விசேட கூட்டம் நேற்று முன்தினம் அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ் ஒருங்கிணைப்பில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் மேலதிக செயலாளரும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகமுமான ஓய்வு பெற்ற மேஜர் ஜென்ரல் சுதந்த ரணசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டு மீனவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்தனர்.

இதன்போது மீனவர்கள் ஆழ்கடலில் மிகவும் தூரத்துக்கு சென்று மீன்பிடியில் ஈடுபடும்போது ஏற்பட்ட அனர்த்தங்கள் குறித்து குறிப்பிட்டு வானொலித் தொடர்பாடல் சாதனங்களை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து, இக்கோரிக்கையை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் முன்வைப்பதுடன் தொலைத் தொடர்பு ஆணைக்குழு உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்களின் ஆலோசனையை பெற்று தீர்வுகள் பெற்றுக்கொடுக்க தீர்மானிக்கப்பட்டது.

மேலும், ஒலுவில் துறைமுகத்தில் மண் நிரம்பி உள்ளதால் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை பற்றி பலர் சுட்டிக்காட்டியபோதும் இதனை தீர்ப்பதற்கு பல நடைமுறை சிக்கல்கள் உள்ளன எனவும் குறித்த விடயம் தொடர்பிலும் ஆராய்ந்து தீர்வை பெற முயற்சிப்போம் எனவும் மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

ஓய்வு பெற்ற மேஜர் ஜென்ரல் சுதந்த ரணசிங்க கருத்து தெரிவிக்கையில், குறித்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு தீர்வுகள் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். இக்கூட்டத்தில் இராணுவத்தினர், கடற்படையினர், பிரதேச செயலாளர்கள், மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள், பொறியியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# நடைபாதை பாலத்தை புனரமைக்கக் கோரிக்கை

(நிலாவெளி நிருபர்)

கிண்ணியா பிரதேச சபை எல்லைக்குட்பட்ட காக்காமுனை கிராம சேவகர் பிரிவிலுள்ள மயில்தீவு பிரதான வீதியிலுள்ள நடைபாதை பாலம் பல மாதங்களாக உடைந்து சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.

இப்பாலமானது உடைந்து பல மாதங்கள் கடந்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இவ்வீதியூடாக தினமும் பிரயாணம் செய்கின்ற பாடசாலை மாணவர்கள், வியாபாரிகள், வயோதிபர்கள், பெண்கள் ஆகியோர் சிரமப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதிகமாக இவ்வீதியை விவசாயிகள் பயன்படுத்துவதால் இயந்திரங்கள், உழவு இயந்திரங்களை, விதைகளை எடுத்து செல்வதில் சிரமங்களுக்குள்ளாவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பாதையானது காக்காமுனை மயில்தீவு ஊடாக சூரங்கல், மணியரசன்குளம், கற்குழி, வட்டமடு, தம்பலகாமம், முள்ளிப்பொத்தானை, கந்தளாய் போன்ற பிரதேசங்களுக்கு செல்லும் பிரதான பாதையாக காணப்படுகிறது.

இதனை புனர்நிர்மாணம் செய்து தருமாறு அதிகாரிகளிடம் கோரியும் எந்தப் பயனும் இதுவரை கிட்டவில்லையென கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, இவ்வீதியில் உடைந்து கிடக்கும் இந் நடைபாதை பாலத்தை புனரமைத்துத் தருமாறு உரிய அதிகாரிகளிடம் பிரதேச மக்கள் கோருகின்றனர்.

## போடியார் புலம்பல்!



அரசாங்கத்தின்
தீர்மானமே வீழ்ச்சிக்கு
காரணமாம் எண்டத
இப்பதான் ஹக்கீம் நானா
கண்டுபுடிச்சித்தாரு..அந்த
தீர்மானத்துக்கு..ஒங்கட
கட்சி எம்.பீ மாருக்கும்
பங்கு இருக்கு
எலுவா..சலுகைக்காக
விலபோனா மறுகா
வீழ்ச்சியும் சூழ்ச்சியும்
தானே வரும் நானா!

# பரீட்சை எழுதி வீடு திரும்புகையில் குளிக்கச்சென்ற இருவர் நீரில் மூழ்கினர்

## ஒருவர் உயிரிழப்பு; மற்றையவரின் நிலைமை கவலைக்கிடம்

(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இறக்கக்கண்டி பாலத்துக்கு அருகில் நீரில் மூழ்கி சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் (22) பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை எழுதிவிட்டு வகுப்பாசிரியருடன் 8 மாணவர்கள் கடலில் நீராடச் சென்றுள்ளதாகவும் அதில் இருவர் நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் மற்றையவர் திருகோணமலை பொது வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த சிறுமி திருகோணமலை ஆண்டாங்குளம் பாசல் மாவத்தையை சேர்ந்த ஒய்னீ ஹன்சலா எனவும் மற்றைய சிறுமி அயோத்தியா, திருகோணமலை பொது வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப்பெற்று வருவதாகவும் தெரியவருகின்றது.

உயிரிழந்த சிறுமியின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இராஜாங்க அமைச்சர் தயாசிறி - றிஸ்லி முஸ்தபா சந்திப்பு



(கல்முனை நிருபர்)

பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவுக்கும் கல்முனை தொகுதி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் முக்கியஸ்தர் ரிஸ்லி முஸ்தபாவுக்குமிடையிலான சந்திப்பு கொழும்பில் உள்ள அமைச்சில் கடந்த வெள்ளிக்கிழமை (21) மாலை இடம்பெற்றது.

இதன்போது அம்பாறை மாவட்டத்திலுள்ள சிறு கைத்தொழிலில் ஈடுபடுகின்றவர்களின் பிரச்சினைகள் தொடர்பிலும், அவர்களது தொழில் வாய்ப்பினை ஊக்குவிக்கும் வகையிலான வழிமுறைகள் குறித்தும் இராஜாங்க அமைச்சரிடம் கலந்தாலோசிக்கப்பட்டதுடன் சில செயற்றிட்டங்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

ஆடை உற்பத்தி, சிறு கைத்தொழில் உட்பட்ட விடயங்களில் அம்பாறை மாவட்டத்தை சேர்ந்தவர்களே கூடுதலாக ஈடுபடுவதை இராஜாங்க அமைச்சரிடம் றிஸ்லி முஸ்தபா தெளிவுபடுத்தியதுடன் நேரடியாக அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்து இதுபற்றி அறிந்துகொள்வதற்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

வெகு விரைவில் அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்வதாகவும் தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்றிட்டங்களுக்கு நடவடிக்கை எடுப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் இதன்போது உறுதியளித்தார்.

# கல்லடி - டச்பார் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா கொடியிறக்கத்துடன் நிறைவு



(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் கல்லடி - டச்பார் புனித அந்தோனியார் ஆலயத்தின் 42ஆவது வருடாந்த திருவிழா பங்குத்தந்தை அருட்பணி லோரன்ஸ் லோகநாதன் அடிகளார் தலைமையில் கொடியேற்றத்துடன் கடந்த 15ஆம் திகதி ஆரம்பமாகியது.

அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு புனித அந்தோனியாரின் திருச்சொரூப பவனி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி கல்லடி - டச்பார் பிரதான வீதி ஊடாக சென்று மீண்டும் ஆலயத்தை வந்தடைந்ததும், கூட்டெருக்கியக்கத் திரு அவையில் ஆவியானவரின் செயற்பாடு எனும் சிந்தனைக்கு அமைய நற்கருணை வழிபாடுகள் நடைபெற்றன. நவநாட் காலங்களில் அருட்தந்தையர்களான அருட்பணி ஜோட்டன் ஜோன்சன், அருட்பணி ஏ.ஏ.நவரெட்ணம் அடிகளார் ஆகியோரது சிறப்பு அருளுரைகளுடன் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்பட்டன.

இவ்வாண்டிற்கான திருவிழா திருப்பலியானது அருட்தந்தை அனிஸ்டன் மொறாயஸ் (இயேசு சபைத்துறவி) அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. நவநாட் காலங்களில் புனிதரின் பரிந்துரையால் இறையருள் பெற்றிட அந்தோனியாரின் பக்தர்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி வழிபாடுகளில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சின் இணைப்புச் செயலாளர் அலுவலகம்

## ஓட்டமாவடியில் திறப்பு



(கல்குடா நிருபர்)

பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவின் கிழக்கு மாகாண இணைப்புச் செயலாளரின் அலுவலகம் ஓட்டமாவடியில் நேற்றுமுன்தினம் (22) திறந்து வைக்கப்பட்டது.

பெருந்தோட்டத்துறை அமைச்சின் கிழக்கு மாகாணத்திற்கான இணைப்புச் செயலாளர் கலாநிதி எம்.பி. முஸம்மில் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், பெருந்தோட்டத்துறை இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவின் பிரத்தியேக செயலாளர்



டமால் பத்நாயக்க, அமைச்சின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் சதீஸ்கான், வாகரை பிரதேச சபையின் உப தவிசாளர் சந்திரபால மற்றும் அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களின் கிழக்கு மாகாண மக்களின் தேவைகள் இக் காரியாலயத்தின் மூலம் நிவர்த்தி செய்யப்படும் என்று பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவின் பிரத்தியேக செயலாளர் டமால் பத்நாயக்க தெரிவித்தார்.

# சமுர்த்தி பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கிவைப்பு



(மத்திய முகாம் நிருபர்)

நாவிதன்வெளி பிரதேச சபைக்குட்பட்ட சாளம்பக்கேணி சமுர்த்தி பயனாளிகளுக்கு வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கையினை ஊக்குவிக்கும் அடிப்படையில் மரக்கன்றுகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் எம்.பி. நவாஸ் தலைமையில் நேற்றுமுன்தினம் (22) இடம்பெற்றது.

நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினரும் சாளம்பக்கேணி கிராமிய குழு தலைவருமான எம்.பி. நவாஸின் முயற்சியால் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையை ஊக்குவித்து பொதுமக்களின் அன்றாடத் தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தின் பிரகாரம் சமுர்த்தி பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும், பொதுமக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை கேட்டறிந்து அதற்குரிய வாழ்வாதாரத் திட்டங்களும் முன்மொழியப்பட்டன. இந்நிகழ்வில் சாளம்பக்கேணி சமுர்த்தி உத்தியோகத்தர் மெடி செனசியா, கிராமிய குழு உறுப்பினர் நசீல், பாஸ் மற்றும் பள்ளிவாசல் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# திருமலை ஊடகர்களுக்கு விசேட செயலமர்வு






(கிண்ணியா நிருபர்)

இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காக உள்ளூர் ஊடகவியலாளர்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற பிரதிநிதிகளுக்கிடையிலான உறவை வலுப்படுத்துவதன் மூலம் உண்மைத் தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மையை அதிகரித்தல் தொடர்பிலான செயலமர்வு திருகோணமலை ஊடகவியலாளர்களுக்கு இடம் பெற்றது.

அகம் மனிதாபிமான வள நிலையத்தின் (AHRC) ஏற்பாட்டில் திருகோணமலை நகர சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற குறித்த செயலமர்வில் உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக நடைபெறும் திட்டங்களை வலுப்படுத்த சமூக அமைப்புகளின் பங்குபற்றல், அதன் வெளிப்படையான நிலையாக பணியாற்றல் தொடர்பில் பேசப்பட்டதுடன் ஊடகவியல் தொடர்பிலும் மக்கள் சமூகம் சார் நிலை பற்றியும் இதன்போது எடுத்துரைக்கப்பட்டது. குச்சவெளி, தம்பலகாமம், கந்தளாய், வாகரை போன்ற பிரதேச சபை பகுதிகளை இலக்காகக்கொண்டு இத் திட்டம் உரிய நிலையத்தினால் நடைபெற்று வருகிறது. குறித்த செயலமர்வுக்கு வளவாளராக எம்.மிதுனன் கலந்து கொண்டார்.

இச் செயலமர்வுக்கு அகம் நிறுவனத் திட்ட பணிப்பாளர் லவன் மற்றும் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர்.

# மட்டு. - கல்முனை பிரதான வீதி விபத்தில் ஒருவர் பலி



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்திற்கு முன்னால் நேற்றுமுன்தினம்(22) மாலை இடம்பெற்ற பாரிய கோர விபத்துச் சம்பவத்தில் ஒருவர் பலியானதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லடி பிரதான வீதியில் ஆரையம்பதி பக்கமிருந்து மட்டக்களப்பு நோக்கி தந்தையும் மகனும் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் மீது பிக்கப் ரக வாகனம் மோதிவிட்டு தப்பியோடியுள்ளது. குறித்த வாகனம் மோதிய வேகத்தில் முன்னால் சென்று கொண்டிருந்த கனரக நெல் அறுவடை செய்யும் இயந்திரத்தினுள் மோட்டார் சைக்கிள் சிக்கி தந்தை நசுங்குண்டு அதே இடத்தில் பலியானார். படுகாயமடைந்த மகன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் புதிய நியமனங்கள் அறிவிக்கப்பட்டன



(காத்தான்குடி நிருபர்)

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தவிசாளராக டாக்டர் ஸாஹிரும் அதன் தேசிய அமைப்பாளராக முஜீபுர் ரஹ்மானும் நியமிக்கப்பட்டுள்ளதாக நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தலைமைத்துவ சபை அறிவித்துள்ளது.

கடந்த தலைமைத்துவ சபை அமர்வின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாகவே இந்த நியமனங்கள் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த டிசம்பர் 25ஆம் திகதி நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தலைமைத்துவ சபை அமர்வு இடம்பெற்றது. இதில் கட்சியின் எதிர்காலத் திட்டங்களை விரிவாக்கும் பொருட்டு கட்சியின் உயர் பதவிகளுக்கான புதிய நியமனங்கள் பற்றியும் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

அதற்கிணங்க, கட்சியின் தவிசாளராக மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த டாக்டர்.கே.எம். ஸாஹிரும் தேசிய அமைப்பாளராக மன்னாரைச் சேர்ந்த முஜீபுர் ரஹ்மானும் நியமிக்கப்பட வேண்டும் என்ற ஆலோசனைகள் ஏகமனதாக முன்வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து கட்சியின் செயற்குழுவின் அபிப்பிராயங்களும் பெறப்பட்டன. இந்நியமனங்களை அவர்களும் ஆமோதித்ததைத் தொடர்ந்து ஏற்பாடு நியமனங்கள் வழங்கப்பட்டன.

டாக்டர் ஸாஹிர் பலவருடகால நீண்ட சமூகப் பணி மற்றும் அரசியல் ஈடுபாட்டைக் கொண்டவர். இலங்கை மருத்துவத்துறையின் அதியுயர் அதிகாரமிக்க சபையான இலங்கை மருத்துவ சபையில் 2010 முதல் 2015 வரை அங்கம் வகித்துள்ளார். 2002ஆம் ஆண்டு மூதூர் பிரதேசத்தில் 3 சிடி என்ற சமூக சேவை அமைப்பினை ஸ்தாபித்த அவர், அதன் தலைவராக இருந்து பல வருடங்களாக சேவையாற்றி வருகிறார். பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவராக பல வருடங்கள் தேசிய மட்டத்தில் பணியாற்றிய அனுபவம் கொண்டவர்.

அதேபோன்று கடந்த 2015ஆம் ஆண்டு




நடைபெற்ற பொதுத் தேர்தலில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி சார்பாக திருகோணமலை மாவட்டத்தில் களமிறங்கிய ஸாஹிர் கிட்டத்தட்ட 15ஆயிரம் விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதனைப் போன்று மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்ட முஜிபுர் ரஹ்மான் ஒரு சட்ட இளமாணி ஆவார். மேலும் இவர் ஒரு சமூக செயற்பாட்டாளராகவும், உளவள ஆலோசகராகவும், ஊடகவியலாளராகவும் நன்கறியப்பட்டவர். இவர் மிக நீண்டகாலமாக பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடக்கு முஸ்லிம்கள் தொடர்பில் தீவிர கரிசனையோடு செயற்பட்டு வருபவர். முசலி பிரதேச சபையில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் பிரதிநிதியாகவும் முஜிபுர் ரஹ்மான் தற்போது பதவி வகித்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# கல்முனை சுகாதார சேவை பணிப்பாளர் பிரிவில் கொரோனா நோயாளர்களாக 44 பேர் அடையாளம்

(நற்பிட்டிமுனை நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த 24 மணித்தியாலயத்தில் 44 பேர் கொரோனா நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 73 வயதுடைய ஆண் நோயாளர் இறந்துள்ளதாகவும் பணிமனை அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 10 பேரும் அக்கரைப்பற்றில் இருவரும், ஆலையடிவேம்பில் இருவரும், கல்முனை வடக்கில் ஆறு பேரும், கல்முனை தெற்கில் நான்கு பேரும், காரைதீவில் எட்டுப் பேரும், நிந்தவூரில் இருவரும், பொத்துவிலில் ஒருவரும், சாய்ந்தமருதில் ஒருவரும், திருக்கோயிலில் ஒருவரும், சம்மாந்துறையில் ஏழு பேரும் இதில் அடங்குவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.





கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பாரம்பரிய முறைப்படி பொங்கல் விழா பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் தலைமையில் நடைபெற்றது. இங்கு புதிர் எடுத்து, நெற்குத்தி, பொங்கல் பொங்கி, பல்வேறு கலை, கலாசார நிகழ்வுகளும் நடைபெற்றன. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் நவநீதன் கலந்துகொண்டிருந்தார். (பாண்டிருப்பு நிருபர்)

# அவசரகால பதிலிறுப்புச் சான்றிதழ் கற்கை அக்கரைப்பற்றில் ஆரம்பம்







(அட்டாளைச்சேனை மத்திய, மருதமுனை நிருபர்கள்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை சுகாதாரத்துறை உத்தியோகத்தர்களுக்கு அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அனுசரணையுடன் அனர்த்த முன்னாயத்த அவசரகால பதிலிறுப்பு தொடர்பான சான்றிதழ் பயிற்சி நெறியை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் அஸாத் எம்.ஹனிபா தலைமையில் நேற்று முன்தினம் (22) நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.முகம்மது ரியாஸின் வழிகாட்டலின் கீழ், திட்டமிடல் பொறுப்பு வைத்தியர் டொக்டர் ஆகில் ஷரீப்தீனின் ஒருங்கிணைப்பில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் அதிதிகளாகவும், வைத்தியசாலை மயக்க மருந்து நிபுணர் டொக்டர் எம்.என்.என்.எம்.சஹீர், பொது சத்திரசிகிச்சை நிபுணர் டொக்டர் ரிப்ஷான் ஜமீல், தர முகாமைத்துவப் பிரிவின் பொறுப்பு வைத்தியர் டொக்டர் எம்.எம்.தாஸிம், தாதிய சகோதரி ஹினாயா, இராணுவத்தின் உயரதிகாரிகள், அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் குழு உறுப்பினர்கள், சுகாதாரத்துறை உத்தியோகத்தர்கள், கற்கைநெறி பங்குபற்றுநர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இச்சான்றிதழ் பயிற்சிநெறியானது 200 மணித்தியாலயங்களை உள்ளடக்கிய 40 வேலை நாட்களை கொண்டதாகவும், அனர்த்த முன்னாயத்த விடயதான பரப்பு, பயிற்றப்பட்ட வளவாளர் குழு என்பவற்றை உள்ளீடு செய்தும் வடிவமைக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகர் சுகிர்தராஜனின் ஞாபகார்த்த தின நிகழ்வு இன்று மட்டக்களப்பில்



(மட்டக்களப்பு நிருபர்)

2006ஆம் ஆண்டு திருமலையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் 16ஆவது ஞாபகார்த்த தின நிகழ்வு இன்று திங்கட்கிழமை மு.ப. 10.30 மணியளவில் மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றலில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் ஞாபகார்த்த நினைவுத் தூபியில் நடைபெறுகின்றது.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு ஊடக அமைப்புகளின் ஒத்துழைப்புடன் நடைபெறுகின்றது. இந்த ஞாபகார்த்த நிகழ்வில் ஊடகவியலாளர்கள், மக்கள் பிரதிநிதிகள், ஊடக ஆர்வலர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புகள், உள்ளிட்ட பலதரப்பட்டோரையும் கலந்துகொள்ளுமாறு கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# மொழிப் பாடநெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கலும் நடைபவனியும்

## திருமலையில் நடத்திய தேசிய சமாதானப்பேரவை








(கிண்ணியா நிருபர்)

சிங்களம், தமிழ் மொழி பாட கற்கைநெறிகளை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு திருகோணமலையில் இடம்பெற்றது.

இலங்கை தேசிய சமாதானப்பேரவையின் ஒருங்கிணைப்புடன் சேர்விங் கியூமனிட்டி பௌண்டேஷன் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்ட 90 மணித்தியாலய சிங்கள மற்றும் தமிழ் பாடநெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கான இச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வானது, திருகோணமலையிலுள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் நேற்று முன்தினம் (22) இடம் பெற்றது.

"நல்லிணக்கத்திற்கான மொழி" எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இப்பாடநெறியானது சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கிலும், இரண்டாம் மொழி சிங்களத்தை மேம்படுத்தும் நோக்கிலும், அரச ஊழியர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், சர்வமதத் தலைவர்கள் ஆகியோருக்காக நடத்தப்பட்ட இப்பாடநெறியானது திருகோணமலை, அக்குறணை, பேருவளை ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்களுக்காக தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் நடத்தப்பட்டது. இப்பாடநெறிகளை முழுமையாகப் பூர்த்தி செய்த 53 நபர்களுக்கு இதன்போது சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டன. திருகோணமலை நகர சபை முன்றலில் இருந்து பிரதான வீதியினூடாக சமாதான நடைபவனியும் இடம்பெற்றது. சிங்களம், தமிழ் போன்ற மொழிகள் அரச கரும மொழிகளாக காணப்படுகின்றன. இவ்வாறான மொழிகளை சிங்கள, தமிழ் சகோதரர்கள் கற்றிருப்பது அவசியமாக கருதப்படுவதுடன், அரச சேவைக்கு இவ்வாறான மொழிகளை கற்றிருப்பதன் மூலம் சேவைகள் வழங்குவதில் சிரமங்களின்றி திறம்பட செயற்பட முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கற்கைநெறியானது தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்றிட்டம் ஊடாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கிவைத்தார்.

மேலும், குறித்த நிகழ்வுக்கு இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் கலாநிதி ஜோ வில்லியம், நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா, உதவி முகாமையாளர் என்.விஜயகாந்தன் மற்றும் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் சத்யப்பிரியா, சேர்விங் கியூமனிட்டி பௌண்டேஷன் நிறுவனத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஏ.எம்.ஆசிக், சர்வமத தலைவர்கள், பாடநெறி பங்குபற்றுநர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பதவியுயர்வு பெற்றுச்செல்லும் பணிப்பாளருக்கு மட்டு. செயலகத்தில் சேவைநலன் பாராட்டு









(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளராக கடமையாற்றி, சமுர்த்தி திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக பதவியுயர்வு பெற்றுச் செல்லும் திருமதி அமிர்தகலாதேவி பாக்கியராஜாவிற்கு மாவட்ட செயலகத்தில் சேவைநலன் பாராட்டும், கௌரவமும் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (21) மாவட்ட செயலகத்தில் வழங்கப்பட்டது.

மாவட்ட சமுர்த்தி பிரிவின் ஏற்பாட்டில், அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இந்த சேவைநலன் பாராட்டு நிகழ்வின்போது திருமதி அமிர்தகலாதேவி பாக்கியராஜாவிற்கு அரசாங்க அதிபர் கருணாகரன் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தார். மேலும், அவருக்கு இதன்போது மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி, பரிசில்களும் வழங்கி, விசேட கௌரவமும் வழங்கப்பட்டது.

இலங்கை சமுர்த்தி திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக பதவியுயர்வு பெற்று இன்று 24 ஆம் திகதி கொழும்பில் சமுர்த்தி திணைக்களத்தில் கடமையை பொறுப்பேற்கவுள்ள திருமதி பாக்கியராஜா, 1991.05.20 அன்று தனது முதல் அரச சேவையை ஒரு ஆசிரியையாக தொடங்கினார். தனது முதல் ஆசிரியை நியமனத்தை மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் கணித மற்றும் விஞ்ஞான ஆசிரியையாக 1994 ஜனவரி மாதம் வரை கடமையாற்றியுள்ளார். பின்னர் 1994.01.17 முதல் இலங்கை திட்டமிடல் பிரிவுக்கு உள்வாங்கப்பட்டு உதவித் திட்டமிடல் பணிப்பாளராக களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்திலும், அம்பாறை மாவட்டத்தில் நாவிதன்வெளி பிரதேச செயலகத்திலும் பணியாற்றினார். பின்னர் பிரதி திட்டமிடல் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்று 2012 தொடக்கம் 2018 வரை களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில் கடமையாற்றி வந்தார்.

இதனைத் தொடர்ந்து 2018.07.05 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளராக பதவியுயர்வு பெற்று 2022.01.23 வரை மாவட்ட செயலகத்தில் பணியாற்றி, மீண்டும் பதவியுயர்வு பெற்று இலங்கை சமுர்த்தி திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக இன்று (2022.01.24) தனது கடமையை கொழும்பில் பொறுப்பேற்கவுள்ளார். கிழக்கு பல்கலைக்கழகத்தில் 1988.05.01இல் கணித விஞ்ஞான முதல்தர சிறப்பு பட்டதாரியான இவர், தற்போது இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தரத்தை 2018 இல் பெற்றுக்கொண்டுள்ளதுடன், மேலதிக பயிற்சிகளை பெற்றுக் கொள்ளும் பொருட்டு தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் சுமார் 31 வருடங்களாக தமது சேவையை மிகச்சிறப்பாக வழங்கி வந்த இவர் கிழக்கு மண்ணிற்கு பெருமை சேர்த்த பெண்மணியாவார்.

# 40 ஆவது ஆண்டை சிறப்பித்த சம்மாந்துறை அஸ்ஹர் வித்தியாலய "அஸ்ஹரியன் பெரட்"

## வீதி உலா வந்த பாடசாலைச் சமூகம்





(நூருல் ஹுதா உமர், ஐ.எல்.எம்.நாஸிம்)

சம்மாந்துறை கல்விவலய கமு/சது/அல்-அஸ்ஹர் வித்தியாலயத்திதன் 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், விழிப்புணர்வு பேரணியும் பாடசாலை அதிபர் ஏ. அப்துல் றஹீம் தலைமையில் நேற்று (23) நடைபெற்றது.

ஆசிரியர்கள், பாடசாலை பழைய மாணவர்கள் அமைப்பு, பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பாடசாலை சமூகம் என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் 40 வருடங்களாக இப்பாடசாலையில் கல்வி பயின்ற மாணவர்கள் வருகைதந்து பேரணியில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். கனரக வாகனங்கள், வட்டா ரக லொறி, பஸ், மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டி, மாட்டுவண்டி என்பன பேரணியாக சென்று, சம்மாந்துறை மீயண்ணா சந்தியினூடாக அல்-அரசாத் தேசிய பாடசாலை வீதியூடாக





விளினையடி சந்தியை அடைந்து, ஹிஜ்ரா சுற்றுவட்டத்தினூடாக வருகை தந்து. பின்னர் மீண்டும் மீயண்ணா சந்தியிலிருந்து நடைபவனியாக பாடசாலையை வந்தடைந்தது.

பின்தங்கிய பிரதேசத்தில் பாடசாலை அமைந்திருக்கின்றமையினால் பாடசாலையிலிருந்து இடைவிலகும் மாணவர்களை தொடர்ந்தும் பாடசாலையின் பக்கம் ஈர்க்கும் நடவடிக்கையாகவும், சமூக நலன்விரும்பிகளை பாடசாலைக்கு உதவும் வகையில் ஒன்றிணைக்கும் வேலைத்திட்டமாகவும் இந்த "அஸ்ஹரியன் பேரட்" அமைந்துள்ளதாக ஏற்பட்டுக் குழுவினர் தெரிவித்தனர். இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவ அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# ஒரு வளத்தைக் கொண்டு வந்து இன்னுமொரு வளத்தை அழிப்பதை அனுமதிக்க மாட்டோம்!

## கோவிந்தன் கருணாகரம் எம்.பி. தெரிவிப்பு







(கல்லடி நிருபர்)

நாங்கள் தொழிற்சாலைகள் வருவதை ஒருபோதும் எதிர்க்க மாட்டோம். ஆனால், ஒரு வளத்தைக் கொண்டு வந்து இன்னுமொரு வளத்தை அழிப்பதை அனுமதிக்க மாட்டோமென மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஏறாவூர் புன்னக்குடாவில் அமைக்கப்படவுள்ள தொழிற்சாலை தொடர்பில் ஆராய்வதற்காக கடந்த 20 ஆம் திகதி அங்கு விஜயம் மேற்கொண்டபோதே அவர் இவ்விதம் தெரிவித்தார். தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் குறித்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவது குறித்தான தகவல்கள் அங்கு கிடைத்தவுடன் அது தொடர்பில் அரச அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடினார்.

குறித்த இடத்தில் வரவிருக்கும் தொழிற்சாலையின் கழிவுகளைச் சுத்திகரித்து கடலினுள் வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகவே இக்குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளதாகவும், அதனால் சூழலுக்கு எந்தப் பாதிப்பும் இல்லையெனவும் அதிகாரிகளால் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

எனினும், குறித்த தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் சுத்திகரிக்கப்பட்டாலும் கடலுடன் கலக்குமானால் கடல்வளம் பாதிக்கப்படும் சூழ்நிலையேற்படுமென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கருத்துத் தெரிவிக்கையில்:-

மட்டக்களப்பு புன்னைக்குடா கடற்பகுதியில் மர்மக் குழாய்கள் புதைக்கப்பட்டுள்ளதாகவும், அதன் மர்மம் விளங்கவில்லையெனவும் கடந்த ஓரிரு நாட்களில் செய்திகளில் பார்த்தோம். அதனை நேரடியாகக் கண்காணிப்பதற்காகவே இந்தப் பகுதிக்கு விஜயம் செய்தேன். நாங்கள் இதற்குள் நுழையும் நுழைவாயிலில் இராணுவ முகாமொன்று அமைக்கப்படுகின்றது.

குழாய்கள் கடலுக்குள் சுமார் 200 மீற்றர் தூரத்துக்குள் புதைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் அதிகாரிகளுடன் பேசினேன். இங்கு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பெயர்ப்பலகை பொருத்தப்பட்டுள்ளது. சுமார் 13 கோடி ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

புன்னைக்குடாப் பகுதியில் சுமார் 200 ஏக்கருக்கும் அதிகமான பகுதி முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், ஆடைத் தொழிற்சாலைக்கும் மேலாக நூல்களுக்கு வர்ணம் சேர்க்கும் தொழிற்சாலையொன்று நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் அறிய முடிகின்றது. இது தொடர்பில் பிரதேச செயலாளரிடம் கேட்டபோது அவரும் இதனை உறுதிப்படுத்தினார். கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டே கடலுக்குள் செலுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைதான் குறித்த சுத்தகரிப்பு நடவடிக்கையைச் செய்து, கடலுக்குள் நீரை வெளியேற்றும் பணியில் ஈடுபடவுள்ளதாகவும், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அதிகாரிகள் என்னிடம் தெரிவித்தனர். ஆனால், குறித்த பகுதியில் கழிவுநீரை சுத்திகரித்து கடலுக்குள் வெளியேற்ற வேண்டுமானால் கரைக்கு அருகாமையில் அதனைச் செய்யலாம். ஆனால், கடற்கரையிலிருந்து கடலுக்குள் சுமார் 200 மீற்றருக்கும் அதிகமான தூரத்திற்கு அந்தச் சுத்திகரிப்புச் செய்த நீரைக் கொண்டு சென்று வெளியேற்ற வேண்டிய தேவையில்லை. கடலுக்குள் நீண்ட தூரத்திற்கு அந்தக் குழாய்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளன என்பது சந்தேகத்தினை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள பிரதேச, மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களில் பேசவுள்ளேன்.

தொழிற்சாலைகள் எமது பிரதேசத்தை நோக்கி வர வேண்டும். அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது எங்கள் கடமையல்ல. கடந்தகால யுத்த சூழ்நிலை காரணமாக எமது பிரதேச இளைஞர்கள் மற்றும் யுவதிகள் வேலைவாய்ப்புகளின்றி மிகவும் கஷ்டத்தை எதிர்நோக்கி வருகின்றனர். அந்தவகையில் தொழிற்சாலைகள் இங்கு வருவதை நாங்கள் வரவேற்கின்றோம். அந்தத் தொழிற்சாலைகள் இன்னொரு வளத்தைக் கொடுத்து ஒரு வளத்தை அழிப்பதாக இருக்கக் கூடாது. மட்டக்களப்பு மாவட்டத்தில் பனை அபிவிருத்திச் சபை மற்றும் பனை உற்பத்தியாளர்களுக்கான பனை மூலப்பொருட்களை வழங்கும் முக்கிய பகுதியாக இதுவுள்ளது. இது அதிகமான பனை மரங்களைக் கொண்ட பகுதி. அந்தப் பனை மரங்கள் அழிக்கப்படக் கூடாது.

அதற்கும் மேலாக கழிவுநீர் சுத்திகரிக்கப்படாமல் கடலுக்குள் அனுப்பப்பட்டால், கடலை நம்பியுள்ள மீனவர்கள் பாதிக்கப்படும் நிலையேற்படும். ஒரு வளம் கொண்டு வரப்படுவதன் மூலம் இன்னுமொரு வளத்தை அழிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. தொழிற்சாலைகள் மக்களுக்கு நன்மையளிக்கும் வகையிலிருக்க வேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடு. அவ்வாறில்லாமல் மக்களைப் பாதிக்கும் வகையில் தொழிற்சாலைகள் வருமானால் நிச்சயமாக இப்பகுதி மற்றும் மாவட்ட மக்களுடன் இணைந்து எதிர்ப்பினைத் தெரிவிப்போம் என்றார்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# எட்டு பவுண் நகைகளைக் கண்டெடுத்து உரியவரிடம் ஒப்படைத்த பெண்மணி

## வாழைச்சேனையில் வெளிப்பட்ட மனிதநேயம்

( மீராவோடை நிருபர் )

பெண்ணொருவரின் தொலைந்து போன எட்டு பவுண் நகைகளை வேறு பெண்ணொருவர் கண்டெடுத்து உரியவரிடம் ஒப்படைத்துள்ள சம்பவமொன்று கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோழிக்கடை வீதியைச் சேர்ந்த பெண்ணொருவர் தனது நகைகளை எடுத்துச் செல்லும்போது கடந்த 19 ஆம் திகதி தவறவிட்டுள்ளார்.

அவ்வாறு தவறவிட்ட நகைகளை அதே பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் கண்டெடுத்து உரிய நபரிடம் ஒப்படைத்துள்ளார்.

ஏழ்மையான நிலையிலும் நகைகளைக் கண்டெடுத்து ஒப்படைத்த பெண்ணுக்கு நகை உரிமையாளர் சில நகைகளை அன்பளிப்பு செய்ய முன்வந்த போதிலும் அதனை அந்தப் பெண்மணி ஏற்க மறுத்துள்ளார்.

நகைகளை கண்டெடுத்து ஒப்படைத்த பெண்ணுக்கு நகை உரிமையாளர் உட்பட பலரும் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

# பாலின உணர்திறன் கொள்கை அறிக்கை சமர்ப்பிக்கும் நிகழ்வு





(மருதமுனை நிருபர்)

பொருளாதார, நல்லாட்சியில் பெண்கள் மற்றும் இளைஞர்களின் பங்கேற்பு தொடர்பான செயற்றிட்டத்தை அம்பாறை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தி வரும் பெரேண்டினா அரச சார்பற்ற நிறுவனமும், கிழக்கு மாகாண கிராமிய திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த சிவில் சமூக நிறுவனங்களில் மகளிர் கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கான பாலின உணர்திறன் கொள்கைகள் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கும் நிகழ்வு அம்பாறை தனியார் ஹோட்டலில் கடந்த 21 ஆம் திகதி கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் என்.தனராஜன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, சிவில் சமூக நிறுவனங்களில் காணப்படும் மகளிர் கிராம அபிவிருத்தியின் செயற்பாடுகள், கிராமிய பெண்களின் திறன் அபிவிருத்தி, பெண்களின் ஊடாக சிறந்த வலைப்பின்னலை உருவாக்கி அபிவிருத்தியை நோக்கி நகர்தல் மற்றும் 'பெண்களின் பொருளாதார நிலைமையும் அவர்களின் ஊக்கமும்' என்ற தலைப்பில் களனிப் பல்கலைக்கழக விரிவுரையாளர் இனோகா பிரியதர்ஷினி கலந்துகொண்டு வளவாளராகச் செயற்பட்டு கருத்துகளை வழங்கினார்.

தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட உத்தியோகத்தர்களிடம் கிராமிய அபிவிருத்தி சங்கங்கள், பெண்கள் கிராமிய அபிவிருத்தி சங்கங்களை ஒன்றாக்குதல், கிழக்கு மாகாண கிராமிய சங்கங்களின் யாப்பை மாற்றுதல், பெண்கள் கிராமிய சங்கங்களில் பெண்களின் பங்குபற்றலை அதிகரித்தல், பெண்கள் கிராமிய மட்ட சங்கங்களுக்கு பயிற்சிகள் வழங்குதல், பெண்கள், கிராமிய அபிவிருத்தி சங்கங்களின் நிலவுகின்ற குடும்ப ஆட்சி மற்றும் அதற்கான தீர்வுகள் பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்டச் செயலக மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன், அம்பாறை மாவட்ட பிரதேச செயலக செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பெண்கள் கிராமிய அபிவிருத்தி உறுப்பினர்கள் மற்றும் அம்பாறை மாவட்டத்தில் செயற்றிட்டத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட நாவிதன்வெளி, அட்டாளைச்சேனை, பொத்துவில், உகண மற்றும் மகாஓயா பிரதேச செயலக உறுப்பினர்கள், பெரேண்டினா நிறுவன திட்ட முகாமையாளர் எஸ்.சிவராஜா, பெரேண்டினா நிறுவன திட்ட உத்தியோகத்தர் கயானி, பெரேண்டினா நிறுவன அம்பாறை மாவட்ட கணக்கு மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எல்.ஹாதி அஹமட், மட்டக்களப்பு மாவட்ட கணக்கு மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் எம்.மதன் எனப்பலர் கலந்துகொண்டனர்.

# பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கிவைப்பு



(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை மாவட்டத்தில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது

கடந்த (21) வெள்ளிக்கிழமை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் பாண்டிகோரள தலைமையில் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது ப்ளேஜ் ரீஸ்டோர் பவுண்டேஷன் அமைப்பினால் சமூகத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகளின் ஓர் அங்கமாக திருகோணமலை மாவட்டத்தில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு "பெண்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டம்" ஊடாக வாழ்வாதார உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன.


இத்திட்டத்தின் முதற்கட்டமாக திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த பெண்கள் தலைமை தாங்கும் 11 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டம் வழங்கிவைக்கப்பட்டது.

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களில் முன்னரே தொழில் முயற்சிகளில் ஈடுபட்டவர்களின் தொழில் முயற்சியினை மென்மேலும் முன்னேற்றுவதற்கும், பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கும் ஆரம்ப கட்டமாக 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி உதவி வைக்கப்பட்டது

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் பாண்டிகோரள, திருகோணமலை மாவட்ட செயலகத்தின் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சுவர்ணா தீபானி, ப்ளேஜ் ரீஸ்டோர் பவுண்டேஷன் அமைப்பின் பெண்கள் மேம்பாட்டு திட்டத்தின் பணிப்பாளர் சூரியகுமாரி ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்வியை ஊக்கப்படுத்த புத்தகப்பை வழங்கிவைப்பு

## கல்முனையில் நிகழ்வு



(கல்முனை நிருபர்)

விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வியை ஊக்கப்படுத்தும் முகமாக புத்தகப்பைகள் வழங்கிவைக்கப்பட்டன .

கல்முனை பிரதேச மட்ட வலது குறைந்தோர் ஒழுங்கமைப்பின் முயற்சியினால் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் அனுசரணையில் கல்முனை பிரதேச செயலகப் பிரிவில் விசேட கல்வியைக் கற்கும் மாணவர்களின் நலன் கருதி, ஊக்குவிக்கும் முகமாக 50 பேருக்கு புத்தகப்பைகள் கடந்த 21 ஆம் திகதி வழங்கிவைக்கப்பட்டன.

# சௌபாக்கிய தெக்ம வேலைத்திட்டத்தின் கீழ் பொலிஸார் திருமலையில் சிரமதானம்



(அப்துல்சலாம் யாசீம்)




திருகோணமலை - மொரவெவ பொலிஸ் நிலையத்தினால் சௌபாக்கிய தெக்ம வேலைத்திட்டத்தின் கீழ் மஹதிவுல்வெவ குளத்துக்கு அருகிலுள்ள பிரதான வீதியை சுத்தப்படுத்தும் பணிகள் நேற்று (23) நடைபெற்றன.

திருகோணமலை - ஹொரவ்பொத்தானை பிரதான வீதியில் மஹதிவுல்வெவ குளம் அமைந்துள்ளது.

இவ்வீதியினூடாக அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதால் அக்குளத்தில் நீராடிச்செல்வதுடன், உணவு உட்கொண்டுவிட்டு கழிவுகளை வீசுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டு கோமரங்கடவல - தம்பலகாமம் - மொரவெவ பிரதேசத்திற்கு பொறுப்பான உதவி பொலிஸ் பொறுப்பதிகாரி அகில கருணாரத்னவின் அறிவுறுத்தலின் அடிப்படையில், மொரவெவ பொலிஸ் பொறுப்பதிகாரி வசந்த சந்ரலாலின் வழிகாட்டலுடன் இச்சிரமதானம் இடம்பெற்றது.

இதன்போது பிரதான வீதியின் இரு பக்கங்களையும் பொலிஸார் துப்புரவு செய்ததுடன், மரங்களையும் நாட்டி வைத்தனர்.

# அக்கரைப்பற்றில் மூன்று வீதிகள் மாநகர முதல்வரால் திறந்துவைப்பு





(நூருல் ஹுதா உமர்)

தேசிய காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லாவின் வழிகாட்டலிலும், ஆலோசனையின் படியும் அபிவிருத்தி செய்த அக்கரைப்பற்று மாநகர சபைக்குட்பட்ட புதுப்பள்ளி வட்டார ஆலீம் வீதி, ஜின்னா வீதியின் 4 ஆவது ஒழுங்கை மற்றும் ஹிஜ்றா வீதி என்பவற்றை நேற்று முன்தினம் (22) அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி திறந்து வைத்து, மக்கள் பாவனைக்காக கையளித்தார்.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சார் (நளிமீ), அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் ஏ.ரீ.எம்.றாபி, அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விஜேதுங்க, அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர்களான ஏ.ஜி.அஸ்மி, முஹம்மத் சிராஜ், மாநகர சபையின் சட்டத்தரணி ஏ.எல்.எம்.ஆசாத் மற்றும் மாநகர சபை உத்தியோகத்தர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# கிழக்குப் பல்கலை உபவேந்தர் கடமைகளைப் பொறுப்பேற்றார்

(ஏறாவூர்)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் புதிய உபவேந்தராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் நேற்று முன்தினம் 22.01.2022 அன்று காலை கடமையேற்றுக் கொண்டார்.

கிழக்குப் பல்கலைக்கழத்தின் மட்டக்களப்பு - வந்தாறுமூலை பிரதேசத்திலுள்ள அலுவலகத்தில் சர்வமத ஆசிகளுடன் கடமையேற்பு நிகழ்வு நடைபெற்றது.

பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் இலங்கை கிழக்குப் பல்கழகத்தின் உபவேந்தராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

சுமார் 25 வருடகால வரலாற்றைக் கொண்ட கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பத்தாவது உபவேந்தராக மட்டக்களப்பு - கிரான்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இவரது கடமையேற்பு நிகழ்வில் பல்கலைக்கழகப் பதிவாளர் ஏ.பகிரதன், பீடாதிபதிகள் மற்றும் விரிவுரையாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

முகாமைத்துவப் பேராசிரியரான வல்லிபுரம் கனகசிங்கம் இதற்கு முன்னர் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தின் முதல்வராகப் பணியாற்றியவராவார்.

# நாளை வரை மின்வெட்டுக்கு அவசியமில்லை: மின்சக்தி அமைச்சர் லொக்குகே தெரிவிப்பு

நாட்டில் நாளை 25ஆம் திகதி வரை மின்வெட்டினை அமுல்படுத்துவதற்கான அவசியம் இல்லை என மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

நாளை வரை மின்னுற்பத்திக்கு தேவையான எரிபொருள் உள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே, நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்தில் செயலிழந்துள்ள மின் பிறப்பாக்கியை 25ஆம் திகதிக்குள் சீர்செய்ய முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

அதன் பின்னரும் தொடர்ச்சியான மின்சார விநியோகத்தை வழங்க எதிர்பார்ப்பதாக மின்சக்தி அமைச்சர் கூறினார்.

களனிதிஸ்ஸ, சப்புகஸ்கந்த மற்றும் துறைமுகத்திலுள்ள மிதக்கும் மின்னுற்பத்தி நிலையம் ஆகியவற்றில் மின்னுற்பத்தி



செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதால், தற்போது பற்றாக்குறையாகவுள்ள 200 மெகாவோட் மின்சாரத்தை இந்த மின்னுற்பத்தி நிலையங்களூடாக பெற்றுக்கொள்வதாகவும் அமைச்சர் காமினி லொக்குகே சுட்டிக்காட்டினார்.

மின்சார பாவனையாளர்கள் தங்களின் தாமத கொடுப்பனவுகளை தற்போது செலுத்த ஆரம்பித்துள்ளதால், அடுத்த வாரமளவில், பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு 15 பில்லியன் ரூபா பணத்தை வழங்க எதிர்பார்ப்பதாகவும் மின்சக்தி அமைச்சர் தெரிவித்தார்.

நீர் மின்னுற்பத்தியை அதிகரிப்பது தொடர்பில் மகாவலி அதிகார சபையுடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

இந்நிலையில், எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை உரிய மழைவீழ்ச்சியை எதிர்பார்க்க முடியாது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# நாட்டின் 4 நகரங்களில் வளி மாசடைதல் அதிகரிப்பு




நாட்டில் நான்கு நகரங்களில் வளி மாசடைதல் அதிகரித்துள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் அறிவித்துள்ளது.

கொழும்பு, யாழ்ப்பாணம், புத்தளம் மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலேயே வளி மாசடைதல் அதிகரித்துள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தின் சுற்றாடல் பிரிவின் பணிப்பாளர் சரத் பிரேமசிறி குறிப்பிட்டார்.

பலத்த காற்று வீசுவதால், வளி மாசடைவு அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

இதனிடையே, மின்னுற்பத்தியில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு மத்தியில், மின்பிறப்பாக்கிகள் அதிகமாக பயன்படுத்தப்படுவதாலும் வளி மாசடைதல் அதிகரித்துள்ளதாகவும் தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தின் சுற்றாடல் பிரிவின் பணிப்பாளர் சரத் பிரேமசிறி சுட்டிக்காட்டினார்.

# ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் வருடாந்த மாநாடு மார்ச் 12இல்



ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் வருடாந்த மாநாடு, எதிர்வரும் மார்ச் 12ஆம் திகதி நடத்தப்படும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும் மூத்த ஊடகவியலாளருமான என்.எம். அமீன் தெரிவித்தார்.

இதுகுறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும் மூத்த ஊடகவியலாளருமான என்.எம். அமீன், பொதுச்செயலாளர் ஸாதிக் ஷிஹான் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின், 25ஆவது வருடாந்த மாநாட்டை எதிர்வரும் மார்ச் மாதம் 12ஆம் திகதி நடத்துவது என முஸ்லிம் மீடியா போரத்தின் நிறைவேற்றுக் குழு ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் நிறைவேற்றுக் குழு கூட்டம் போரத்தின் தலைவர் அல்ஹாஜ் என்.எம்.அமீன் தலைமையில், தெமடகொடயிலுள்ள வை.எம்.எம்.ஏ. பேரவையில் நடைபெற்றது.

வருடாந்த மாநாடு மற்றும் வேட்புமனுத் தாக்கல் தொடர்பாக உறுப்பினர்களுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டிருந்த கடிதங்கள் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் தொடர்பில் உறுப்பினர்கள் பலர் விடுத்த வேண்டுகோள் மற்றும் நாட்டில் தற்பொழுது காணப்படும் நிலைமையை கருத்திற் கொண்டே போரத்தின் நிறைவேற்றுக்குழு மேற்படி கூட்டத்தில் விரிவாக ஆராய்ந்து மேற்படி தீர்மானத்தை ஏகமனதாக மேற்கொண்டுள்ளதாக அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வருடாந்த மாநாடு கடந்த 21ஆம் திகதி நடத்துவது என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த மாநாட்டில் இலங்கை அமைச்சர்கள், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், இந்தியாவிலிருந்து அரசியல் கட்சி தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சாதாரண தரப் பரீட்சை தொடர்பான அறிவிப்பு

**கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் இறுதி திகதி எதிர்வரும் பெப்ரவரி 3ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.**

**இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் www.doenets.lk ஊடாக அல்லது உத்தியோகபூர்வ தொலைபேசி செயலி ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.**

**தனியார் பரீட்சார்த்திகள் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.doenets.lk ஐ பார்வையிட்டு மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள முடியும். இதேவேளை, பாடசாலை பரீட்சார்த்திகள் தங்களின் விண்ணப்பங்களை அதிபர்கள் அறிவுறுத்தியவாறு சமர்ப்பிக்க வேண்டும்.**

# தாராவில்லு பகுதியின் மக்களை சந்தித்தார் அலிசப்ரி ரஹீம் எம்.பி



(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் நேற்றுமுன்தினம் (22) மாலை முந்தல் தாராவில்லு பிரதேசத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு நிலவும் குறைபாடுகள் சம்பந்தமாக கேட்டறிந்து கொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் தாராவில்லு அபிவிருத்திக் குழுவின் தலைவர் முஹம்மது ரியால்தீன், உறுப்பினர் முஹம்மது ஜனீர் உட்பட தாராவில்லு மஸ்ஜித் நிர்வாக சபைத் தலைவர் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க, நாடாளுமன்ற உறுப்பினர் இந்த விஜயத்தை மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் ஜமால்தீன் ஜெளசி உள்ளிட்ட சிலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது தாராவில்லு பிரதேசத்தில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன.

அத்துடன், கடந்த காலங்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் வீதிகளும் கடுமையாக சேதமடைந்துள்ளதாகவும் மக்கள் போக்குவரத்து செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீமிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது தனக்கு கிடைத்த இந்த வருடத்திற்கான நாடாளுமன்ற நிதியிலிருந்து தாராவில்லு பகுதியில் உள்ள பாடசாலை, பாலர் பாடசாலை மற்றும் மஸ்ஜித் ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் எனினும், இந்தப் பகுதி மக்களின் அத்தியாவசிய தேவையாக இருக்கின்ற பிரஜா சாலாவ பாதையை அடுத்த ஆண்டு நிதியில் கொங்கிறீட் பாதையாக புனரமைக்க நடவடிக்கைகள் எடுப்பதுடன், ஏனைய குறைபாடுகளையும் கட்டம் கட்டமாக நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன், மக்களின் போக்குவரத்தினை கருத்திற் கொண்டு சில தினங்களுக்குள் பிரஜா சாலாவ பாதைக்கு தனது சொந்த செலவில் கிரவல் இட்டு புனரமைத்து கொடுப்பதாகவும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் வாக்குறுதியளித்தார்.

# நேரடி எரிபொருள் கொள்வனவிற்கு நிதி கோரும் மின்சக்தி அமைச்சு

எரிபொருள் கொள்வனவிற்கான இந்திய நிதியுதவியில் ஒரு பகுதியை தமது அமைச்சுக்கு ஒதுக்குமாறு மின்சக்தி அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது. எரிபொருள் வழங்கல் தொடர்பாக இலங்கை மின்சாரசபை, எரிசக்தி அமைச்சுக்கு இடையில் மோதல் ஏற்பட்டுள்ள நிலையில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில், மின்சார உற்பத்திக்குத் தேவையான எரிபொருளை வழங்குவதற்கு அமெரிக்க டொலர்களைக் கண்டுபிடிக்குமாறு மின்சார சபையிடம், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்திருந்தது.

இலங்கையின் எரிபொருள் தேவையை நிறைவேற்ற இந்தியா வழங்கும் 500 மில்லியன் டொலர் அவசர கடனுதவி தொகையில், ஒரு பகுதியையே மின்சக்தி அமைச்சு கோரியுள்ளது.

இந்தியன் ஒயில் நிறுவனத்திடமிருந்து நேரடியாக எரிபொருளை வாங்க, இந்த நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு திறைசேரியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவிக்கையில், நெருக்கடியை சமாளிக்க குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு எரிபொருள் வாங்குவதற்கு இந்திய பணத்தின் ஒரு பகுதியை ஒதுக்குமாறு கோரியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தடையின்றி மின்சார விநியோகத்தை பேணுவதற்கு இலங்கை மின்சார சபைக்கு மாதம் ஒன்றுக்கு 30 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான எரிபொருள் தேவைப்படுவதாக அவர் கூறினார்.

எரிபொருள் கொள்வனவு செய்வதற்கு மேலதிக உதவிகளைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுமாறு திறைசேரி மற்றும் வெளிவிவகார அமைச்சிடம் தமது அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

நிலக்கரி கொள்முதல் செய்வதற்காக திறைசேரி ஒதுக்கிய நிதியை பயன்படுத்தி எரிபொருளை வாங்குவது குறித்து பரிசீலித்து வருவதாகவும், நிலக்கரிக்கான கூடுதல் கட்டணம் செப்டெம்பர் மாதத்தில் மட்டுமே தேவைப்படும் என்றும் அவர் கூறினார்.

அடிக்கடி விபத்துக்குள்ளாகும் நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் அலகுகளில் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமைக்குள் மீள இயக்கப்பட்டு 300 மெகாவோட் மின்சாரம் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்பட்டது.

தற்போதைய மின் நெருக்கடி குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கடந்த வாரம் கலந்துரையாடிய நிலையில் இந்த தகவல் வெளியாகியுள்ளது.

முன்னதாக, எரிபொருள் விநியோகம் மற்றும் மின்சார நிலைவரம் குறித்து ஜனாதிபதியுடன் தனியான சந்திப்பொன்று நடந்துள்ளது.

எரிசக்தி அமைச்சு மற்றும் மின்சக்தி அமைச்சிடம் எரிபொருள் தேவைகள் குறித்து கலந்துரையாடி மாதத்திற்கு தேவையான எஞ்சிய பொருட்களை பெற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி கோரிக்கை விடுத்ததாக தெரிய வந்துள்ளது.

எவ்வாறாயினும், எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைவதால் மின் உற்பத்தி நிலைமை தொடர்பில் நிச்சயமற்ற நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக செவ்வாய்க்கிழமைக்குப் பின்னர் மின்வெட்டு ஏற்படக்கூடும் என இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்க செயற்குழு உறுப்பினர் எரங்க குடஹேவா தெரிவித்தார்.

மறுசீரமைப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், நுரைச்சோலை அலகு நாளைமறுதினம் 26ஆம் திகதி அல்லது 27ஆம் திகதி வரை இயங்குவதில் தாமதமாகும். இதன் விளைவாக நாளொன்றுக்கு 300 மெகாவோட் மின்சாரம் பற்றாக்குறையாக இருக்கும்.

யூனிட் முழுமையாக செயல்பட்டாலும், சப்புகஸ்கந்த அனல்மின் நிலையத்தை இயக்குவதற்கு எண்ணெய் கிடைக்காததால் நாளொன்றுக்கு 100 மெகாவோட் இழப்பு ஏற்படும் என்றார்.

"ஐந்து நாட்களுக்கு மட்டுமே டீசல் கிடைக்கும். எனவே மின் உற்பத்தி நிலையங்களுக்கு டீசல் கிடைப்பதில் நிச்சயமற்ற நிலை உள்ளது. இதனால் மீண்டும் 280 மெகாவோட் இழப்பு ஏற்படும்" என்றார்.

# கொரோனா தொற்றுப் பரவல் அதிகரிக்கும் ஆபத்து!



**சுகாதார விதிமுறைகளை பின்பற்றுமாறு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி வலியுறுத்து**

கொரோனா தொற்று நிலைமை மீண்டும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வைத்தியசாலைகளில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கொரோனா தொடர்பான பரிசோதனைகளில் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த விடயத்தை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. சுகாதார விதிமுறைகளை பின்பற்றுவது தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, கொழும்பு ரிட்ஜ்வே மகளிர், சிறுவர் வைத்தியசாலையில் கொரோனா தொற்றுக்குள்ளான சிறுவர்கள் 40 பேர் வரையில் சிகிச்சைப்பெற்று வருவதாக அந்த வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஜீ. விஜேசூரிய தெரிவித்துள்ளார்.



மீசாலை கிழக்கு மதுவன் சனசமூக நிலையத்தின் தைப்பொங்கல் நிகழ்வு அண்மையில் நிலைய முன்றலில் இடம்பெற்றது. நிலைய செயலாளர் வனக்சன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வின் விருந்தினராக நிலையத்தின் ஆலோசகர் றெமீடியஸ் கலந்து கொண்டிருந்தார். (படங்கள்: சாவகச்சேரி நிருபர்)

# பரீட்சை சான்றிதழ் வழங்கும் ஒருநாள் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தம்

பரீட்சை சான்றிதழ் வழங்கும் ஒருநாள் சேவையை, இன்று 24ஆம் திகதி முதல் மீள அறிவிக்கும் வரையில் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

2021ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி 7ஆம் திகதி தொடக்கம் மார்ச் 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதற்கான கால எல்லை குறுகியது என்பதால், ஆகக் கூடுதலான ஊழியர்களை பயன்படுத்த வேண்டியிருப்பதாலும் தற்போதைய தொற்று சூழ்நிலையில் சுகாதார வழிகாட்டி ஆலோசனைகளுக்கமைவாக சேவைகளை முன்னெடுக்க வேண்டியிருப்பதினாலும் திணைக்களத்தின் இந்த சேவை தொடர்பில் மேற்படித் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக திணைக்கள ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

வழங்கல் சேவையின், www.doenets.lk இணையத்தில் இது தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள விரும்பும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை இணையவழி ஊடாக அல்லது தொலைபேசி செயலியை பயன்படுத்தி சமர்ப்பிக்க முடியும்.

தேவைக்கு அமைவாக சம்பந்தப்பட்ட சான்றிதழ் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அல்லது விண்ணப்பதாரியின் முகவரிக்கு "ஸ்பீட்" தபால் மூலம் அனுப்பப்படும்.

## கமநல அபிவிருத்தித் திணைக்களத்துக்கு திடீர் கண்காணிப்பு விஜயம் செய்தார் ஜனாதிபதி

# வரலாற்றில் முதல் தடவையாக அரச தலைவர் ஒருவரின் கண்காணிப்பு

★ சேதனப் பசளை விநியோகம், பயன்பாடு மற்றும் உற்பத்தித் திறன் ஆராய்வு

★ நெல் வயல்கள் கைவிடப்படுவதற்கான காரணங்களைத் தேடியறிந்து பயிரிடுவதற்கான நடவடிக்கை எடுக்க பணிப்பு

★ விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களுக்கான தொழில்நுட்ப அறிவை வழங்குமாறு கோரிக்கை

★ விவசாய வங்கிகளைப் பிரபலப்படுத்துவதில் கவனம் செலுத்தவும்

### ஜனாதிபதி அறிவுறுத்தல்











கமத்தொழில் அமைச்சுக்கு சொந்தமான கொழும்பு-07, சேர் மார்க்கஸ் பெர்னாண்டோ மாவத்தையில் அமைந்துள்ள கமநல அபிவிருத்தித் திணைக்களத்துக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த 21 ஆம் திகதி முற்பகல் திடீர் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார்.

"விவசாய சமூகத்தின் அனைத்து விவசாய நிலங்களின் நிலைபேறான அபிவிருத்தி" என்பதை நோக்காகக் கொண்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் செயற்பாடுகளானவை, விவசாய நிலங்களிலிருந்து உகந்த உற்பத்தித்திறனைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் நிறுவன ரீதியான ஒத்துழைப்பு, சட்ட மற்றும் மேலாண்மை சேவைகளை வழங்குதல் மற்றும் காலத்துக்கு ஏற்ப பராமரிப்பதுமாகும்.

அந்த நோக்கங்கள் முறையாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கண்டறிவதே ஜனாதிபதியின் கண்காணிப்பு விஜயத்தின் நோக்கமாகும். திணைக்களத்தின் பல தசாப்தகால வரலாற்றில், அரச தலைவர் ஒருவர் இங்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும்.

கமநல மீளாய்வுச் சபை, விவசாய வங்கி, நிர்வாகம், கணக்கியல், மேம்பாடு, சட்டம், நிறுவன மேம்பாடு (சேவைகள்), பயனுள்ள சந்தைப்படுத்தல் மற்றும் பொறியியல் நீர் முகாமைத்துவம் ஆகிய அனைத்துப் பிரிவுகளையும் கண்காணித்த ஜனாதிபதி, சுமார் மூன்று மணித்தியாலங்கள் வரை அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுடன் கலந்துரையாடி, விவசாய மேம்பாட்டுக்காக எடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் பற்றிக் கேட்டறிந்துகொண்டார்.

பசுமை விவசாயம் மற்றும் நஞ்சற்ற உணவு உற்பத்தியே அரசாங்கத்தின் கொள்கையாகும். இம்முறை பெரும் போகத்தில், சேதனப்பசளை விநியோகம், பயன்பாடு மற்றும் விளைச்சல் என்பன தொடர்பில் ஆராய்ந்து, குறைபாடுகளைத் தீர்க்கும் வகையில் சிறு போகத்துக்கு தயாராக வேண்டுமென ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

34 அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு சேதனப் பசளையை உற்பத்தி செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிறுவனத்தினதும் சேதனப் பசளையின் மூலம் பெற்ற விளைச்சல் மற்றும் முன்னேற்றம் தொடர்பாக அவதானிக்க வேண்டும். உயர் முன்னேற்றம் கண்ட நிறுவனங்களை ஊக்குவித்து, அந்த நிறுவனங்களின் உற்பத்தியை அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டது. எதிர்வரும் காலங்களில், விவசாயிகளுக்கு அறிவூட்டுவதற்காக விவசாய ஆராய்ச்சி அதிகாரிகளுக்குத் தொழில்நுட்ப அறிவை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

கடந்த இரண்டு வருடங்களில் கைவிடப்பட்ட வயல்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் திட்டத்தின் மூலம், அநுராதபுரம், ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு உள்ளிட்ட ஒன்பது மாவட்டங்களிலுள்ள அனைத்துத் தரிசு நெல் வயல்களிலும் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடிந்ததென, அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாடளாவிய ரீதியில் ஏனைய தரிசு வயல் நிலங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் உள்ளன. அவற்றைக் கைவிடுவதற்கான காரணங்களை ஆராய்ந்து, உரிமையாளர்கள் மற்றும் விவசாய அமைப்புகள் தலையிட்டு, அவற்றில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

நெற்செய்கைக்கு பயன்படுத்த முடியாத நிலங்களை வேறு பயிர்களுக்குப் பயன்படுத்த வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

கமநல அபிவிருத்தித் திணைக்களம் மூலம் செயற்படும் 559 கிளைகளைக் கொண்ட கமநல வங்கிகள் ஊடாக விவசாயிகளின் வைப்புத் தொகைகளை ஏற்றுக்கொள்ளப்படுவதோடு, கடன்களும் வழங்கப்படுகின்றன. இரண்டு இலட்சம் முதல் பத்து இலட்சம் ரூபா வரையில், போகங்கள் மற்றும் வருடாந்த முறைமையின் கீழ் கடன் வழங்கப்படுகின்றது. ஏனைய தரப்பினரிடமிருந்து விவசாயிகள் அதிக வட்டிக்குக் கடன் பெறுவதன் மூலம் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். இதன் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு கமநல வங்கிகளைப் பலப்படுத்துவது மற்றும் விவசாயிகளிடமிருந்து அதிக விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்யத் தலையிடுவது தொடர்பில் ஆராயுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, இராஜாங்க அமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் இந்த பேச்சுக்களில் கலந்துகொண்டிருந்தனர்.

## புத்தளம் நகர வீதிக்கு புதிய பெயர்ப் பலகை





(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் நகரிலுள்ள "மஹ்மூத் ஆலிம் ப்ளேஸ்" வீதிக்கு இடப்பட்ட புதிய பெயர்ப்பலகை நேற்று முன்தினம் (22) திறந்துவைக்கப்பட்டது.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் புத்தளம் கிளைத் தலைவரும், புத்தளம் காஸிமிய்யா அரபுக் கல்லூரி அதிபருமான அஷ்ஷெய்ஹ் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் ஹஸரத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு குறித்த பெயர்ப் பலகையைத் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் புத்தளம் நகரசபை உறுப்பினர்களான ஆரிப் சிஹான், ரனீஸ் பதூர்தீன், மௌலவி ஷாபி ஸஹ்தி, உலமாக்கள், கல்லூரியின் மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

புத்தளம் நகரசபை உறுப்பினர் ஆரிப் சிஹானின் வேண்டுகோளை முன்னிட்டு காஸிமிய்யா அரபுக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையில் குறித்த பெயர்ப்பலகை நிர்மாணிக்கப்பட்டது.

மன்னார் நெடுஞ்சாலையின் காஸிமிய்யா மத்ரஸா உள்ளக வீதியில் ஆரம்பித்து, 5ஆம் குறுக்கை ஊடறுத்துச் சென்று, கடற்கரை லைட் ஹவுஸ் வரையிலான பகுதிகளே மஹ்மூத் ஆலிம் பிளேஸாகும்.

மேலும், "பெரிய ஹஸரத்" என்று புத்தளம் வாழ் முஸ்லிம்களால் என்றும் கௌரவமாக அழைக்கப்படும் காஸிமிய்யா கலாசாலையின் முன்னாள் அதிபராக சுமார் 40 வருடங்களுக்கும் மேலாக கடமையாற்றிய மஹ்மூத் அப்துல் மஜீத் இனமத பேதமின்றி சேவையாற்றி அனைத்து சமூகத்தினதும் நன் மதிப்பைப் பெற்றமை இதன்போது நினைவு கூரப்பட்டது. இதன்போது புத்தளம் நகரபிதா காஸிமிய்யா அரபுக் கல்லூரிக்கு விஜயம் செய்து கல்லூரி நிர்வாகத்தினரோடு கலந்துரையாடியதுடன், அங்கு காணப்படும் குறைபாடுகளையும் கேட்டறிந்துகொண்டார்.

## கற்பிட்டி நடுப்புட்டிக்கு செல்லும் பாதையை சீரமைக்க மாணவர்கள் இணைந்த முயற்சி





கற்பிட்டி நடுப்புட்டிக்கு செல்லும் பாதை நீண்ட நாட்களாக செப்பனிடப்படாமல் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாக இப்பகுதி வாழ் மக்களால் தெரிவிக்கப்படுகின்றது. இப்பாதை ஊடாகவே தமிழ்க் கலவன் பாடசாலை, சிங்கள ஆரம்ப பாடசாலை, உல்லாசப் பிரயாண ஹோட்டல்கள், முசல்பிள்ளை குடியிருப்பு கிராமம் மற்றும் முதலாளிமார்களின் தோட்டங்களுக்கும் செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

மேலும், இப்பாதை அக்கரையில் இருக்கும் தோட்ட முதலாளிமார் மற்றும் குடியிருப்பாளர்களால் சிரமதானம் மூலம் ஆரம்ப காலத்தில் அமைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பாதையை சீரமைப்பது பற்றி பாடசாலை அதிபரினால் கற்பிட்டி பிரதேச சபைத் தலைவரிடம் எழுத்து மூலமாகவும், நேரடியாகவும் சுட்டிகாட்டிய போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது விடயமாக தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் கற்பிட்டி இணைப்பாளர் ஜே.பத்மநாதனின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதையடுத்து, நெப்ஸோவின் நடுப்புட்டி இளைஞர் அமைப்பினூடாக பாதையின் கரையோரத்தைப் பாதுகாத்தல் வேலைத்திட்டத்தினூடாக "ஒரு பிள்ளை, ஒருவர், நாளாந்தம் ஒரு கல் போடும் திட்டம்" என்ற அறிவித்தல் பலகை இரு மொழிகளிலும் கடந்த வாரம் இப்பாதையில் நடப்பட்டது.

இவ்வேலைத்திட்டத்தின் தொடர் நிகழ்வாக நடுப்புட்டியில் அமைந்துள்ள அரசினர் ரோமன் கத்தோழிக்க கலவன் தமிழ் பாடசாலை மாணவர்களால் ஒரு பிள்ளை, ஒரு கல் போடும் வேலைத்திட்டத்தினூடாக தொடர் வேலைத்திட்டம் கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்றது.

இதில் நெப்ஸோவின் கற்பிட்டி இணைப்பாளர் ஜே.பத்மநாதன், நெப்ஸோவின் பெண்கள் வேலைத்திட்ட இணைப்பாளர் சியாஜ், நெப்ஸோவின் இளைஞர் வேலைத்திட்ட இணைச் செயற்பாட்டாளரும், நெப்ஸோவின் புத்தளம் மாவட்ட ஊடகவியலாருமான முனாஸ் மற்றும் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டதுடன், மனித உரிமைகள் பாதுகாப்பு பற்றிய ஐக்கிய நாடுகள் பிரகடனம் நெப்ஸோவினால் வெளியிடப்பட்ட நூல் பாடசாலையில் கல்வி பயிலும் சாதாரணதர, உயர்தர மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வரி செலுத்தாமல் தங்க நகைகளை கொண்டுசெல்ல முனைந்தவர் கைது



கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்க வரி செலுத்தாமல் கடத்திச் செல்லப்பட்ட சுமார் ரூ.10 மில்லியன் பெறுமதியான நகைகளுடன் பெண்ணொருவரை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தினர் கைதுசெய்துள்ளனர்.

கண்டி பிரதேசத்தில் வசிக்கும் 30 வயதுடைய வர்த்தகப் பெண்ணொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.சந்தேகநபரிடம் இருந்து 599 கிராம் 404 மில்லிகிராம் எடையுள்ள 6 தங்க மோதிரங்களும், 200 கிராம் 44 மில்லிகிராம் எடையுள்ள தங்க மாலையொன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்ட பெண் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தினரால் விமான நிலைய சுங்க விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், நகைகளும் கையளிக்கப்பட்டுள்ளன.

## பங்களாதேஷ் வெளிநாட்டுச் சேவை அகடமியின் பிரதிநிதிகள் வெளிநாட்டு அமைச்சிற்கு விஜயம்







தமது ஆய்வுப் பயணத்தின் ஒரு பகுதியாக, பங்களாதேஷ் வெளிநாட்டு சேவை அகடமியின் பிரதிநிதிகள் குழு கடந்த 21ஆம் திகதி வெளிநாட்டு அமைச்சிற்கு விஜயம் செய்தது.

பங்களாதேஷ் வெளிநாட்டு சேவை அகடமியின் பணிப்பாளர் திருமதி ஃபர்ஹானா அஹமத் சௌத்ரி மற்றும் டாக்காவிலுள்ள வெளிநாட்டு சேவை அகடமியில் பயிற்சி பெற்று வரும் 16 வெளிநாட்டு சேவை அதிகாரிகள் இந்த பிரதிநிதிகள் குழுவில் உள்ளடங்கியிருந்தனர். பங்களாதேஷின் தற்காலிக உயர்ஸ்தானிகர் மொஹமட் ரெயாட் ஹொசைனும் தூதுக்குழுவுடன் இணைந்திருந்தார்.

தூதுக்குழுவினரை வரவேற்ற அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே, பங்களாதேஷ் - இலங்கை இருதரப்பு உறவுகள் மற்றும் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையின் எதிர்காலம் மற்றும் நிகழ்கால சவால்கள் குறித்த கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார். இலங்கைக்கான உறுதியான ஆதரவிற்காக பங்களாதேஷ் அரசாங்கத்திற்கு வெளியுறவுச் செயலாளர் பாராட்டுகளைத் தெரிவித்தார்.

மேலும், இலங்கை வெளிநாட்டமைச்சு, வெளிநாட்டு சேவை மற்றும் வெளிநாட்டுக் கொள்கை குறித்த அறிமுகம் என்ற தலைப்பில் ஐ.நா. மற்றும் அமைச்சின் பல்தரப்பு விவகாரங்கள் பிரிவின் பணிப்பாளர் மெக்ஸ்வெல் கீகல் பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்தார். பங்களாதேஷ் வெளிநாட்டு சேவையின் இளம் தூதுவர்களுக்கு பிராந்திய தகவல் வெளிப்பாட்டை வழங்குவதற்கும், இரு நாடுகளினதும் வெளிநாட்டுச் சேவைகளுக்கு இடையே நெருக்கமான தொடர்புகளை வளர்ப்பதற்கும் உதவுவதாக இந்த ஆய்வுப் பயணம் அமைந்திருந்தது. தமது ஆய்வுப் பயணத்தின் போது, பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திரப் பயிற்சி நிறுவனத்தினால் நடத்தப்படும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ளவுள்ள தூதுக்குழுவினர், கொழும்புத் திட்ட செயலகம், தேசிய வர்த்தக சபை, ஹம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி மற்றும் காலி ஆகிய நகரங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

## புத்தளத்தில் கிராம சேவகர்கள் கௌரவிப்பு







(ரஸீன் ரஸ்மின்)

முந்தல் பிரதேச செயலகத்தினல் நடத்தப்பட்ட கிராமசேவகர் அலுவலக முகாமைத்துவ போட்டியில் முதல் பத்து இடங்களைப் பெற்றுக் கொண்ட கிராம சேவகர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (21) நடைபெற்றது.

முந்தல் பிரதேச செயலாளர் விஜானி வசந்திகாவின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.அஸ்மில், கிராம நிர்வாக உத்தியோகத்தர் கே.எஸ்.எம்.சிரோமி உட்பட சமுர்த்தி முகாமையாளர்கள், பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலின் கீழ், புத்தளம் மாவட்டம் முந்தல் பிரதேச செயலகத்தின் கீழ் கடமையாற்றி வரும் கிராம சேவகர்களுக்கிடையில் நடத்தப்பட்ட 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுக்கான அலுவலக முகாமைத்துவ மதிப்பீட்டுப் போட்டியில் வெற்றிபெற்று முதல் 10 இடங்களைப் பெற்றவர்கள் இதன்போது நினைவுச் சின்னங்கள், சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இப்போட்டியில் முந்தல் பிரதேச செயலகத்திற்குட்பட்ட வேல்சுமனபுர கிராமசேவகர் எம்.பி.ஆர்.ஆர்.லிவேரா முதலிடத்தையும், மதுரங்குளி கிராம சேவகர் திருமதி பி.ரத்னாயக்க இரண்டாமிடத்தையும், சமீரகம கிராம சேவகர் எஸ்.ஏ.ருவன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இவ்வாறு முதல் பத்து இடங்களைப் பெற்ற கிராம சேவகர்கள் விருது , சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய செய்திகள்

## குடமுழுக்கு விழா காணும் வடபழனி முருகன்





வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சென்னை வடபழனி முருகன் கோவிலில் 15 ஆண்டுகளுக்குப் பின் குடமுழுக்கு விழா நேற்று நடைபெற்றது.

சென்னையில் வடபழனி முருகன் கோவிலில் இதற்கு முன்னர் 2007ஆம் ஆண்டு குட முழுக்கு விழா நடைபெற்றது. ஆகம விதிமுறைப்படி 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கோயில்களைச் சீரமைத்துக் குடமுழுக்கு நடத்த வேண்டும்.

இந்நிலையில், 15 ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்று குடமுழுக்கு விழா நடைபெற்றது. இதையொட்டி 108 ஹோம குண்டங்கள் அமைத்து யாகசாலைப் பூஜை நடைபெற்றது.

கங்கை, யமுனை, துங்கபத்ரா, காவிரி, கிருஷ்ணா, கோதாவரி, தாமிரபரணி உள்ளிட்ட ஆறுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட புனித நீர் அடங்கிய கலசங்களுக்குப் பூஜை செய்யப்பட்டது.

கோயில் கோபுரத்தில் தங்க முலாம் பூசப்பட்ட 7 கலசங்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஆறுகளிலிருந்து எடுத்துவரப்பட்ட புனித நீரைக் கோபுரக் கலசங்களில் ஊற்றிக் குடமுழுக்கு நடத்தப்பட்டது.

அர்ச்சகர்கள், அர்ச்சகர்களின் உதவியாளர்கள், கோயில் பணியாளர்கள், நன்கொடையாளர்கள் எனக் குறிப்பிட்ட எண்ணிக்கையிலானோர் மட்டும் குடமுழுக்கில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர்.

கொரோனா தடுப்பு விதிகளின்படி குடமுழுக்கு விழாவில் பங்கேற்கப் பொதுமக்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. தொலைக்காட்சியிலும், யூடியூபிலும் குடமுழுக்கு விழாவை நேரலையாகக் காண ஏற்பாடு செய்யப்பட்டது. இதனால் கோயிலுக்கு வந்த பக்தர்கள் வீதிகளில் நின்று வழிபட்டுச் சென்றனர்.

**வட்டமிட்ட கருடன்**

கும்பாபிஷேகம் நடந்து கொண்டிருந்தபோது வானத்தில் 4 கருடபகவான்கள் வட்டமடித்தன. இதனை பார்த்த பக்தர்கள் பரவசத்துடன் ''வெற்றி வேல் முருகனுக்கு அரோகரா..'' என விண்ணைப் பிளக்க மந்திரம் எழுப்பினர்.

### தமிழக மீனவர்களின் படகுகளை ஏலம்;

## இலங்கை அரசின் நடவடிக்கையை தடுத்து நிறுத்த மீனவர்கள் கோரிக்கை



எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் விசைப்படகுகள் ஏலம் விடப்படும் என அறிவித்துள்ள இலங்கை அரசின் நடவடிக்கையை மத்திய, மாநில அரசுகள் தடுத்து நிறுத்த வேண்டுமென மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துமீறி நுழைந்து மீன் பிடித்ததாகக் கூறி இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்களின் 105 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்தப் படகுகளை அரசுடைமையாக்கியுள்ள இலங்கை அரசு, படகுகள் பகிரங்க ஏலம் விடப்படும் என அறிவித்துள்ளது.

இலங்கை அரசின் இந்த நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தி படகுகளை மீட்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென தமிழக மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நல்ல நிலையிலுள்ள படகுகளை அதன் உரிமையாளர்களிடம் வழங்கவேண்டும் எனவும், சேதமடைந்துள்ள படகுகளை ஏலத்தில் விட்டு அதன்மூலம் கிடைக்கும் தொகையை உரியவர்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்றும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இந்தியாவில் சமூகப் பரவலான ஓமிக்ரோன்; தமிழகத்தில் 3ஆவது வாரமாக முழு ஊரடங்கு

இந்தியாவில் ஓமிக்ரோன் வைரஸ் பாதிப்பு சமூகப் பரவல் நிலையை எட்டியுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இன்சாகாக் அமைப்பு அறிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், நாட்டில் பெரும்பாலான மெட்ரோ நகரங்களில் கொரோனா பாதிப்பு உயர்ந்து வருவதாகவும், அங்கும் ஓமிக்ரோன் ஆதிக்கம் செலுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும், ஓமிக்ரோன் மாறுபட்ட வகையான பி.ஏ.2 திரிபும் நாட்டில் கணிசமான பகுதியில் பரவி வருவதால், எஸ்-ஜீன் மாறுபாட்டின் அடிப்படையிலான சோதனையில் அதிகளவில் தவறான நெகடிவ் முடிவுகள் வர வாய்ப்புள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரும்பாலும் ஓமிக்ரோன் தொற்று உள்ளவர்களுக்கு இதுவரை அறிகுறியில்லாமல் அல்லது மிதமான அளவிலும் பாதிப்பு இருந்தாலும், அச்சுறுத்தல் நிலை மாறாமல் உள்ளதாகவும் இன்சாகாக் தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்தியாவில் நேற்று 24 மணிநேரத்தில் 3,33,533 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், 525 பேர் உயிரிழந்துள்ளனர். இதேவேளை இந்தியாவில் ஓமிக்ரோன் தொற்றுப் பரவல் 10 ஆயிரத்தை கடந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**தமிழகத்தில் 3ஆவது வாரமாக முழு ஊரடங்கு**

தமிழகத்தில் மூன்றாவது வாரமாக நேற்று முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. இதனால் தமிழகத்தின் முக்கிய வீதிகள் பல வெறிச்சோடின.

தமிழகத்தில் அதிகரித்து வரும் கொரோனா தொற்று மற்றும் ஓமிக்ரோன் தொற்றை கட்டுப்படுத்தும் விதமாக தமிழக அரசு கடந்த 6ஆம் திகதி முதல் இரவு 10 மணி முதல் காலை 5 மணி வரை இரவு நேர ஊரடங்கை அமுல் படுத்தி வருகிறது.

அதேபோல் ஞாயிற்றுக்கிழமையன்று முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி கடந்த 2 வாரம் ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கு கடைபிடிக்கப்பட்டது. இருப்பினும் தமிழகத்தில் தொடர்ந்து கொரோனா தாக்கம் ஒவ்வொரு நாளும் அதிகரித்து வருவதால் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மீண்டும் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அதேபோன்று கடந்த 2 வார முழு ஊரடங்கின்போது என்னென்ன நடைமுறைகள் பின்பற்றப்பட்டனவோ அதுவே இந்த வாரமும் தொடருமென அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதன்படி, இன்று 3 ஆவது வாரமாக முழு ஊரடங்கு கடைப்பிடிக்கப்பட்டது. இதனால் பிரதான நகரங்களில் தொழில் பேட்டைகள், கடைகள் அடைக்கப்பட்டு முக்கிய வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. அத்தியாவசியப் பொருளான பால் சேவைகள் வழக்கம்போல் நடைபெற்றன. இதைப்போல் மருத்துவமனைகள், மருந்தகங்கள், ஆய்வுகூடங்கள், அம்பியூலன்ஸ் சேவை, பெற்றோல் நிலையங்கள் என்பன வழக்கம்போல் இயங்கின.

## இயக்குநர் செல்வராகவனுக்கு கொரோனா தொற்று உறுதி



இயக்குநர் செல்வராகவனுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் கொரோனா அச்சுறுத்தல் மீண்டும் அதிகரித்து வருகிறது. இந்தியாவிலும் தற்போது 3ஆவது அலை தொடங்கிவிட்டதால், தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த மத்திய, மாநில அரசுகள் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றன. கொரோனா வைரஸின் உருமாற்ற டெல்ட்டா வைரஸ் பரவுவதோடு, தற்போது ஓமிக்ரோன் பரவலும் அதிகரித்து வருகிறது.

திரையுலகப் பிரபலங்கள் மகேஷ் பாபு, அருண் விஜய், விஷ்ணு விஷால், சத்யராஜ், த்ரிஷா, குஷ்பு, மீனா, இசையமைப்பாளர் தமன் உள்ளிட்ட பலருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. பலரும் தற்போது தொற்றிலிருந்து குணமடைந்து விட்டனர்.

இந்நிலையில், இயக்குநர் செல்வராகவன் தனக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். தனது ட்விட்டர் பதிவில் அவர் கூறியிருப்பதாவது:

''எனக்கு இன்று (ஜனவரி 23) கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கடந்த 2 அல்லது 3 நாட்களில் என்னுடன் தொடர்பிலிருந்தோர் தயவுசெய்து நீங்கள் என்ன செய்யவேண்டும் என்று உங்கள் மருத்துவரிடம் கேட்டுக் கொள்ளவும். தயவுசெய்து கவனமுடன் இருங்கள். அனைவரும் முகக்கவசம் அணிந்து பாதுகாப்பாக இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் - இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**எஸ்.வி.சேகருக்கும் தொற்று**

நாடக நடிகரும், முன்னாள் எம்.எல்.ஏவுமான எஸ்.வி.சேகருக்கு (வயது 71) கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்,

''இரண்டு டோஸ் தடுப்பூசி ஏற்கனவே போட்டு விட்டேன். சமீபத்தில் பூஸ்டர் தடுப்பூசி போட இருந்தேன். 102 டிகிரி செல்ஸியஸ் காய்ச்சல் இருந்ததால், பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தபோது, பரிசோதனையில் இலேசான கொரோனா தொற்று பாதிப்பு இருப்பது உறுதியானது. பயப்படும் வகையில் இல்லை என்று மருத்துவர்கள் கூறியதால், வீட்டிலேயே தனிமைப்படுத்திக் கொண்டேன். என்னுடன் தொடர்பிலிருந்தவர்கள், உரிய பரிசோதனை செய்து கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன் - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## 125ஆவது அகவையில் மாவீரர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்



மாவீரர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் 125ஆ வது பிறந்தநாள் நேற்று இந்தியா முழுவதும் கொண்டாடப்பட்டது.

ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை அடியோடு ஒழிக்க இராணுவ வீரர்களைத் திரட்டி பெரும் போர் புரிந்த இந்திய விடுதலை போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் பிறந்த நாள் விழா ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 23ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

இந்நிலையில், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்தநாளை முன்னிட்டு தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்டுள்ள ட்வீட் பதிவில்,

''நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் ஜெயந்தி அன்று அவருக்குத் தலைவணங்குகிறேன். நமது தேசத்திற்கு அவர் ஆற்றிய மகத்தான பங்களிப்பிற்காக ஒவ்வொரு இந்தியனும் பெருமிதம் கொள்கிறான்'' என குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் வெளியிட்டுள்ள ட்வீட் பதிவில், "நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 125ஆவது பிறந்தநாளில் அவருக்கு இந்தியா நன்றியுடன் மரியாதை செலுத்துகிறது. சுதந்திர இந்தியா - ஆசாத் ஹிந்த் - என்ற தனது கடுமையான உறுதிப்பாட்டை நிறைவேற்ற அவர் எடுத்த துணிச்சலான நடவடிக்கைகள் அவரை ஒரு தேசிய அடையாளமாக மாற்றியது. அவரது இலட்சியமும், தியாகமும் ஒவ்வொரு இந்தியருக்கும் என்றென்றும் ஊக்கமளிக்கும்" என பதிவிட்டுள்ளார்.

இதேவேளை ''சூரியக் கதிர்களை போல நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் புகழ் நாடெங்கும் பரவியுள்ளது'' என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில்,

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பிறந்த நாளில், அவருக்கு எனது வணக்கத்தை உரியதாக்குகிறேன். இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு தேசப்பற்றின் அடையாளமாக நேதாஜி விளங்குகிறார். அவரது புகழ் சூரியனின் கதிர்களைப் போல் தேசம் முழுவதும் பரவியுள்ளது, அவர் காட்டிய ஒளியில் தேசபக்தியுடன் முன்னோக்கிச் செல்வோம் என்று தெரிவித்துள்ளார்.

**இந்திய விடுதலையில் நேதாஜி**

ஜவஹர்லால் நேருவும், சுபாஷ் சந்திர போஸும் சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் சிறந்த நண்பர்கள். ஆனால், இரு தலைவர்களும் கருத்து வேற்றுமை உடையவர்கள்.

நேரு நிதானமானவர். போஸ் சற்று வேகமானவர். தீவிர சோஷலிஸ்ட் கொள்கையைக் கடைப்பிடித்த போஸ், பொருளாதாரக் கொள்கையில் வலதுசாரிகளின் பக்கம் சாயும் காங்கிரஸ் தலைவர்களுடன் மிகக் கடுமையான கருத்து வேறுபாடு கொண்டிருந்தார். அகிம்சை, ஒத்துழையாமை பேசும் காந்தியக் கொள்கைகளை போஸ் நிராகரித்தார். பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிரான மிதவாதப் போராட்டத்தையும் அவர் நிராகரித்தார். இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக போஸ் இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டபோது அவருடைய புகழ் மேலோங்கியது.

புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர் ருத்ராங்ஷு முகர்ஜி 'நேருவும் சுபாஷும் இணையான இரு வாழ்க்கை' என்ற நூலில், 1939ஆம் ஆண்டு சுபாஷ் கூறியதாக எழுதுகிறார்: ''எனக்கு நேருவைவிட அதிகம் தீங்கு செய்தவர் யாரும் இல்லை. ஆனால், தம்முடைய இந்திய தேசிய இராணுவத்தின் ஒரு பிரிவுக்கு நேருவின் பெயரை போஸ் ஏன் வைக்க வேண்டும்? என்ற முகர்ஜி மேலும் எழுதுகிறார்: சுபாஷின் மரணச் செய்தியைக் கேட்டவுடன் நேரு ஏன் கண்ணீர் விட்டு அழுதார் எனக் கேட்டு, நான் அவரை என்னுடைய இளைய சகோதரர் போல் நடத்தினேன் என்று நேரு குறிப்பிட்டதாக எழுதியிருக்கிறார். மகாத்மாகாந்தி நேருவைத் தம் வாரிசாகத் தேர்வு செய்திருக்கலாம். ஆனால், இந்திய தேசிய இராணுவ வீரர்கள் கைது தொடர்பாக டில்லி செங்கோட்டையில் நடைபெற்ற வழக்கில் அவர்களுக்காக நேருதான் வாதாடினார் என்பது உண்மை.

1935ஆம் ஆண்டு சுபாஷ் சந்திரபோஸ் எழுதி லண்டனில் பிரசுரிக்கப்பட்ட 'இந்தியாவின் போராட்டம்' என்னும் நூலில் அவர் தெரிவித்த கருத்துகள், நேருவின் கொள்கையிலிருந்து மிகத் தீவிரமாக மாறுபட்டு நின்றன. பாஸிசமும் கம்யூனிஸமும் கலந்த ஓர் அமைப்பை உருவாக்க போஸ் விரும்பினார். இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு குறைந்தபட்சம் இருபது ஆண்டுகள் சர்வாதிகார ஆட்சி நாட்டுக்குத் தேவை என்றார் போஸ். தங்குதடையில்லாத வளர்ச்சிக்கும் சமூக சமத்துவம் உறுதி செய்யப்படவும் அத்தகைய அமைப்பு தேவை என்றார். தனி நபர் சுதந்திரத்தையும், மனித உரிமைகளையும் முக்கியமாக கருதும் நேருவுக்கு இத்தகைய கொள்கைகளில் உடன்பாடு இல்லை.

நேருவின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய சிறந்த வரலாற்றுப் பேராசிரியர் சர்வபள்ளி கோபால் கூறுவதுபோல், நேருவுக்கு ஜனநாயக வழிமுறை மீது இருந்த நம்பிக்கை அறிவுபூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் எஃகு போன்று உறுதியானதுமாகும். இதன் அடிப்படையில், இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை கொடுத்த மிகச் சில நாடுகளுள் இந்தியாவும் ஒன்று என்பதைக் கருத்தில் கொண்டு, முக்கியமான, இன்றியமையாத மாற்றங்களை நேரு மேற்கொண்டார்.

1938 இன் இறுதியில், இக்கட்டான சூழலில் கடின முடிவை மேற்கொள்ள வேண்டிய நிலை உருவானபோது, காந்தியவாதிகளுக்கு எதிராக சவால் விடுத்தபோது, தமது சோஷலிஸ்ட் தோழரும் 'அரசியலில் மூத்த சகோதரருமான' நேரு தம்முடன் இல்லை என்பதை போஸ் உணர்ந்தார். இடதுசாரிகளுக்கு எதிராக வலதுசாரிகள் செயல்படுவதாக போஸ் கருதியதுபோல், காங்கிரஸை நேரு கருதவில்லை.

உயர்ந்த இலட்சியத்தோடும் கொள்கை உறுதியோடும் விளங்கிய சுபாஷ் சந்திரபோஸ் வங்கத்தின் தலைவர் சி.ஆர்.தாஸ் வழி காட்டுதலோடு காங்கிரஸில் செயற்பட்டு வந்தார். 1937 தேர்தலுக்கு பிறகு காங்கிரஸ் கட்சியில் சோர்வு ஏற்பட்டது. அந்த சூழலில் காங்கிரஸ் கட்சிக்கு புத்துயிர் கொடுக்க நினைத்த காந்திஜி 1938இல் ஹரிபுராவில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் சுபாஷ் சந்திர போஸை தலைவராக தேர்வு செய்ய பரிந்துரை செய்தார். ஆனால், 1939இல் திரிபுரியில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் மீண்டும் சுபாஷ் தலைவராக வருவதை அன்றைய சர்வதேச அரசியல் சூழலை மனதில் கொண்டு காந்திஜி விரும்பவில்லை. இந்த பின்னணியில் சுபாஷ் காங்கிரஸிலிருந்து வெளியேறினார்.

தாய்நாட்டைவிட்டு தனிமனிதனாக வெளியேறி, அயல்நாட்டில் இந்திய தேசிய இராணுவம் அமைத்து, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, ஆயுதமேந்திய போராட்டத்தைத் தொடங்கினார் நேதாஜி. இறுதியில் அவரது முயற்சி தோல்வியடைந்து, விமான விபத்தில் 1945 ஓகஸ்ட் 18ஆம் திகதி நேதாஜி காலமான செய்தியை பிரித்தானிய வானொலி அறிவித்தது.

இந்திய விடுதலைக்கு அகிம்சை வழியில் போராடிய காந்தியடிகள் அணுகுமுறைதான் சுதந்திரத்தை பெற்றுத்தந்தது. நேதாஜியின் வீரமிக்க அணுகுமுறை தோல்வியைத் தழுவினாலும் விடுதலைப் போராட்டத்தில் அவரது பங்களிப்பு மகத்தானது. தேசத்தின் தந்தையாக மகாத்மா காந்தியும், தேசத்தின் வீரத்திருமகனாக சுபாஷ் சந்திர போஸும் போற்றப்பட்டு வருகிறார்கள். நேதாஜியின் 125ஆவது பிறந்த நாள் கொண்டாடப்படும் இத்தருணத்தில் அவரது தியாகத்தை இந்திய மக்கள் என்றென்றும் போற்றி பாராட்டுவார்கள்.

# உலக செய்திகள்

# பிரிட்டனை மிரட்டும் புதிய பி.ஏ.2 ஒமிக்ரொன் வைரஸ்

## 426 பேருக்கு தொற்று உறுதி; 40 நாடுகளில் வேரூன்றியது



ஒமிக்ரொன் வைரஸின் புதிய மாறுபாடு கொண்ட பி.ஏ.2 வைரஸ் பிரித்தானியாவில் கண்டறியப்பட்டுள்ளது. இந்தப் புதிய வைரஸ் தொற்று பிரித்தானியாவில் 426 பேருக்கு உறுதிசெய்யப்பட்டுள்ளதுடன், உலகின் 40 நாடுகளில் வைரஸ் பரவல் கண்டறியப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் ஒமிக்ரொன் தொற்று பெரும் பாதிப்புகளை ஏற்படுத்திவருகிறது. இதனைக் கட்டுப்படுத்தும் விதமாக பல்வேறு நாடுகளில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. டெல்ட்டா, ஒமிக்ரொன் என உருமாறும் தன்மை கொண்ட கொரோனா, விஞ்ஞான உலகுக்கே சவால் விடுத்துவருகிறது.

இந்நிலையில், பிரிட்டனில் ஒமிக்ரொன் வைரஸிலிருந்து புதிய உருமாறிய கொரோனா வைரஸ் வகை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அந்நாட்டு ஆய்வாளர்கள் தீவிர ஆய்வில் இறங்கியுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

'பி.ஏ.2' அல்லது 'ஸ்டெல்த்' கொரோனா எனப்படும் இந்த உருமாறிய கொரோனாவிலுள்ள மாறுபாடுகள் ஒமிக்ரொன் வைரஸ் போல இல்லை என்பதால் டெல்ட்டாவிலிருந்து இதை எளிதாகக் கண்டுபிடிக்க முடியவில்லை என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டன் உள்ளிட்ட 40 நாடுகளில் ஒமிக்ரொன் வைரஸின் புதிய மாறுபாடு வகையான பி.ஏ.2 வைரஸ் கண்டறியப்பட்ட நிலையில், அது வேகமாகப் பரவும் தன்மை கொண்டது என பிரான்ஸ் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

### "வேகமாகப் பரவும் தன்மை கொண்டது" – பிரான்ஸ் விஞ்ஞானிகள் எச்சரிக்கை

ஒமிக்ரொன் வகை கொரோனா வைரஸின் துணை திரிபுகள், பி.ஏ.1, பி.ஏ.2 மற்றும் பி.ஏ.3 என உலக சுகாதார அமைப்பு வரிசைப்படுத்தியுள்ளது. இந்நிலையில், பிரித்தானியாவில் 426 பேருக்கு பி.ஏ.2 வகை ஒமிக்ரொன் வைரஸ் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், டென்மார்க், நோர்வே, ஸ்வீடன் உள்ளிட்ட நாடுகளிலும் அவ்வகை மாறுபாடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலும் கூட சிலருக்கு இந்தப் புதிய கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக டென்மார்கில் தற்போது உறுதி செய்யப்படுவோரில் சுமார் 45% பேருக்கு இந்த கொரோனா கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒமிக்ரொன் குறித்து ஆய்வுகள் நடைபெறும் நிலையில், இது நோயெதிர்ப்பு சக்தியிலிருந்து தப்பிக்கும் ஆற்றலைக் கொண்டிருக்கலாம் என்றும் இதன்மூலம் வைரஸ் பாதிப்பு அதிகரிக்கலாம் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# திருமணத்தை நிறுத்திய நியூசிலாந்து பிரதமர்

## காரணம் என்ன தெரியுமா?



நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டர்ன் திடீரென தனது திருமணத்தை நிறுத்தியுள்ளார். அவரின் இந்த முடிவிற்குப் பின் முக்கியமான காரணம் ஒன்று இருக்கிறதாம்.

உலகில் கொரோனாவை எதிர்கொண்டதில் சிறப்பாக செயற்பட்ட நாடென்றால் அது நியூசிலாந்துதான். மிக வேகமாக கொரோனாவைக் கட்டுப்படுத்தி அந்நாட்டு பிரதமர் ஜெசிந்தா ஆர்டர்ன் உலக நாடுகள் மத்தியில் கவனம் பெற்றார். உலக நாடுகள் பல நியூசிலாந்தின் கொரோனா கட்டுப்பாட்டு விதிகளை பின்பற்றும் வகையில் ஜெசிந்தா சிறப்பாக செயற்பட்டார்.

அங்கு இதுவரை மொத்தமாகப் பதிவான கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை 15,550 பேர்தான் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். அங்கு இதுவரை 52 பேர் மட்டுமே உயிரிழந்துள்ளனர்.

கொரோனா பரவல் சிறப்பாக கட்டுப்படுத்தப்பட்ட நிலையில், திடீரென கடந்த ஒரு வாரமாக ஒமிக்ரொன் பரவல் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. அங்கு ஒரே குடும்பத்தில் 8 பேருக்கு ஒமிக்ரொன் தொற்று ஏற்பட்டது. இவர்கள் நியூசிலாந்தில் பல மாகாணங்களுக்கு திருமணம் உள்ளிட்ட பல விழாக்களில் கலந்துகொள்ளச் சென்றுள்ளனர். இதனால் அங்கு புதிய நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. தினசரி பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 70ஐ தாண்டியுள்ளது.

இதையடுத்து அங்கு தீவிர கொரோனா கட்டுப்பாடுகள் மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ளன. பெப்ரவரி இறுதிவரை கட்டுப்பாடுகள் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா கட்டுப்பாடுகளைக் காரணம் காட்டி அந்நாட்டுப் பிரதமர் ஜெசிந்தா ஆர்டர்ன் தனது திருமணத்தை நிறுத்தியுள்ளார்.

ஜெசிந்தா ஆர்டர்ன் தனது நீண்ட காலக் காதலர் கிளார்க் கேபோர்டை திருமணம் செய்து கொள்ளவிருந்தார். இதற்காக அவரால் பெரியளவில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு அரசியல் தலைவர்கள் பலருக்கு அழைப்பும் விடுத்திருந்தார். இந்நிலையில், அந்த நாட்டின் 'பேவரைட் ஜோடி' இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் இவர்களின் திருமணத்தை பொதுமக்களும் ஆர்வமாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். ஆனால், கடைசியில் திருமணம் நடக்கவில்லை. அடுத்த வாரம் ஜெசிந்தா - கிளார்க் ஜோடியின் திருமணம் நடக்கவிருந்தது. தற்போது கொரோனா கட்டுப்பாடுகளை காரணம் காட்டி ஜெசிந்தா திருமணத்தை நிறுத்தியுள்ளார்.

அவரின் இந்த முடிவு மக்கள் மத்தியில் பெரிய வரவேற்பை பெற்றுள்ளது. இதுகுறித்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டர்ன் தெரிவிக்கையில்,

"இதுதான் வாழக்கை. இப்படித்தான் இருக்கும். திருமணத்தை நான் இப்போது நடத்துவது சரியாக இருக்காது. எனக்கும், மற்ற நியூசிலாந்து பொது மக்களுக்கும் வித்தியாசம் இல்லை. எல்லோரும் விதிமுறைகளை மதிக்கவேண்டும். இந்த கொரோனா பெருந்தொற்று நான் உட்பட எல்லோரையும் பாதித்திருக்கிறது. பலர் இந்த பெருந்தொற்று காரணமாக வீடுகளிலேயே முடங்கியுள்ளனர். அவர்களிடம் நாம் அன்பு செலுத்தவேண்டும். மீண்டும் நாம் இயல்பு நிலைக்கு திரும்புவோம்" என்று தெரிவித்துள்ளார்.

# அதிர்ச்சி ஆவணங்கள் வெளியீடு - பீதியில் டிரம்ப்



தேர்தல் வாக்கு இயந்திரங்களை பறிமுதல் செய்ய அமெரிக்க இராணுவத்துக்கு முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்ட ஆவணங்கள் வெளியாகியுள்ளன. இதனால் அவர் பீதியில் உறைந்துள்ளார்.

கடந்த 2020ஆம் ஆண்டு டிசம்பர் 16ஆம் திகதி அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி பதவியிலிருந்த காலகட்டத்தில் அவர் அமெரிக்க இராணுவத்துக்கு அளித்த ஒரு உத்தரவு தற்போது சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

அப்போது நடந்து முடிந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் அமெரிக்க ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடன் பெரும்பான்மைத் தொகுதிகளைப் பெற்று வெற்றி வாகை சூடினார். அமெரிக்க தேர்தல் ஆணையம் வாக்குகளை எண்ணிவந்த நிலையில், ஜோ பைடன் முன்னணி வகித்ததையடுத்து அதனைத் தாங்கிக்கொள்ள முடியாத ட்ரம்ப், வாக்குப்பதிவில் முறைகேடு நடந்திருப்பதாகவும், பிற நாடுகளுடன் உள்ள சட்டவிரோத தொடர்புகள் காரணமாக கணினி முறைகேடுகள் நடந்ததாகவும் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை பைடன் மீது முன்வைத்தார்.

மேலும், அமெரிக்க காங்கிரஸ் ட்ரம்ப் பதவி விலகக்கோரியும் தனது பதவியை இராஜினாமா செய்ய மறுத்தார். இதுபோன்ற பல அடாவடி செயல்களில் ஈடுபட்ட ட்ரம்பின் ஆதரவாளர்களும் அமைதியாக இருக்கவில்லை. வெள்ளை மாளிகையில் சுவர் மீது ஏறிக்குதித்து இவர்கள் செய்த கலவரம் அப்போது சமூக வலைத்தளங்களில் வைரல் ஆனது.

இந்நிலையில், தனது ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ள அதிகாரம் கைமாறும் முன்னர் ட்ரம்ப் எந்த நிலைக்கும் செல்லத் துணிந்தார். இதனையடுத்து வாக்கு இயந்திரங்களைக் கையகப்படுத்த இராணுவத்துக்கு எழுத்துபூர்வமாக உத்தரவிட்டார். வெள்ளை மாளிகையிலிருந்து இந்த உத்தரவு இராணுவத் தலைமைக்கும் சென்றுள்ளது. அரசு ஆவணக் காப்பகத்தில் இந்த ஆவணங்கள் இந்நாள்வரை பாதுகாக்கப்பட்டன. இந்நிலையில், சமீபத்தில் இவை வெளியிடப்பட்டுள்ளன. வாக்கு இயந்திரங்களைக் கைப்பற்றி அதனை முழுவதுமாக அழித்துவிட்டு தனது ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள ட்ரம்ப் முயற்சி மேற்கொண்டிருக்கிறார் என்று பலர் தற்போது குற்றஞ்சாட்டி வருகின்றனர். இந்த விவகாரத்தில் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களும் ட்ரம்ப் மீது கடும் அதிருப்தியில் உள்ளதால் அவர் தற்போது பீதியடைந்துள்ளார்.

# நுரையீரல் நோயால் பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு பதில் பாடசாலைக்கு செல்லும் ரொபோ



ஜோசுவா என்ற ஜேர்மனியைச் சேர்ந்த 7வயது சிறுவன் நுரையீரல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளான். அவனது கழுத்தில் குழாய் பொருத்தப்பட்டுள்ளதால், அவனால் நேரடியாக பாடசாலைக்கு செல்ல முடியவில்லை. எனவே, அவனுக்குப் பதிலாக, ரொபோ ஒன்று பாடசாலைக்கு செல்கிறது. ஜோசுவா நேரடியாக வகுப்புகளில் கலந்துகொள்ள முடியாமல் போனாலும், அவனது படிப்பு பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக பெர்லின் உள்ளூர் அமைப்பு இந்த ரொபோவை ஏற்பாடு செய்துள்ளது.

# யேமன் சிறைச்சாலை மீதான சவூதி தாக்குதல் -100 பேர் பலி

## ஐ.நா. கண்டனம்



யேமனின் சிறைச்சாலையில் சவூதி கூட்டுப் படைகள் நடத்திய தாக்குதலில் 100 பேர் உயிரிழந்துள்ளதுடன், பலர் காயமடைந்துள்ளனர். இந்தத் தாக்குதலை ஐ.நா. கண்டித்துள்ளது.

யேமனில் ஹொடெய்டா நகரைக் குறிவைத்து சவூதி கூட்டுப் படைகள் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தின. இதன் காரணமாக யேமனில் இணைய சேவைகள் பாதிக்கப்பட்டன.

முன்னதாக, யேமனில் இயங்கும் ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சியாளர்கள், ஐக்கிய அரபு அமீரகத் தலைநகர் அபுதாபியில் திங்கட்கிழமை ட்ரோன் மூலம் அடுத்தடுத்துத் தாக்குதல் நடத்தினர். இதில் மூன்று பேர் உயிரிழந்தனர். இந்த மூவரில் இருவர் இந்தியர்கள். ஒருவர் பாகிஸ்தானியர்.

அபுதாபி விமான நிலையம் அருகே உள்ள முசாஃபா பகுதியில் செயற்பட்டு வரும் எண்ணெய் நிறுவனமான ADNOC-ஐக் குறிவைத்து இத்தாக்குதலை ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் நடத்தினர். ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் யேமன் தலைநகர் சனாவில் சவூதி கூட்டுப் படையினர் தாக்குதல் நடத்தினர். இதில் 12இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். தொடர்ந்து மூன்றாவது நாளாக யேமனில் சவூதிப் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. இதன் காரணமாக பதற்றம் நீடிக்கிறது.

தென்மேற்கு ஆசிய நாடான யேமனில், சன்னி பிரிவைச் சேர்ந்த ஜனாதிபதி மன்சூர் ஹைதிக்கும், ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுதி கிளர்ச்சிப் படைக்குமிடையே 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. இதில் ஜனாதிபதி மன்சூர் ஹைதிக்கு ஆதரவாக சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் செயற்பட்டு வருகின்றன. ஹவுதி கிளர்ச்சிப் படைக்கு ஈரான் ஆதரவளித்து வருகின்றது. மேலும், யேமன் தென்பகுதி பிரிவினைவாதிகள், யேமன் அரசுக்கு எதிராகப் போரிட்டு வந்தனர். யேமனில் ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெறும் போர் காரணமாக ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. யேமன் போரில் இதுவரை ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், இலட்சக்கணக்கான மக்கள் பஞ்சநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

# 5.8 ரிச்டரில் குலுங்கிய சீனா

சீனாவின் குயிங்காய் மாகாணத்திலுள்ள டெலிங்கா நகரில் நேற்று 5.8 ரிச்டர் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. எனினும், நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை.

குயிங்காய் மாகணத்தில் ஏற்கனவே கடந்த 12 ஆம் திகதி மென்யுவான் கவுன்டி பகுதியில் 5.2 ரிச்டர் நிலநடுக்கம் ஏற்பட்டிருந்த நிலையில், தற்போது 2ஆவது முறையாக அம்மாகாணத்தில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

**பிலிப்பைன்ஸில் நில நடுக்கம்**

பிலிப்பைன்ஸின் டேவோ ஆக்ஸிடென்டல் மாகாணத்தில் 6 ரிச்டர் சக்தி வாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

**ஜப்பான் நிலநடுக்கம்**

இதேவேளை ஜப்பானின் தென்மேற்கு மற்றும் மேற்கு பகுதிகளில் 6.4 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலநடுக்கம் கியூஷி தீவுக்கு அருகில் 40 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அத்தோடு நிலநடுக்கத்தால் மியாசாகி, ஓய்டா, குமாமோட்டோ உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 10இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பெலாரஸ் இராணுவத்துடன் ரஷ்யா கூட்டுப் போர் ஒத்திகை

உக்ரைன் மீது எப்போது வேண்டுமானாலும் ரஷ்யா தாக்குதல் தொடுக்கலாம் என மேற்கத்தேய நாடுகள் எச்சரித்துள்ள நிலையில், ரஷ்ய போர் விமானங்கள் கூட்டுப் போர்ப் பயிற்சிக்காக பெலாரஸுக்கு புறப்பட்டுச் சென்றுள்ளன.

ஒருபுறம் உக்ரைன் எல்லையருகே ஏராளமான படைகளை ரஷ்யா குவித்து வருகிறது. மறுபுறம் அமெரிக்காவின் நட்பு நாடுகளான போலந்து மற்றும் லித்துவேனியா உள்ளிட்ட நாடுகளின் எல்லையருகே பெலாரஸ் இராணுவத்துடன் இணைந்து போர் ஒத்திகை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

ரஷ்யாவின் இத்தகைய நடவடிக்கைகளால் அண்டை நாடுகளில் பதற்றமான சூழல் நிலவுகின்றது. இந்நிலையில், ரஷ்ய இராணுவத்தின் இரு படைப்பிரிவுகள், 12 போர் விமானங்கள் மற்றும் 8 விமான எதிர்ப்பு ஏவுகணை அமைப்புகளை பெலாரஸுக்கு அனுப்பியுள்ளன.

# ஆப்கான் பஸ்ஸில் குண்டுவெடிப்பு; 4 பெண்கள் உட்பட 7 பேர் உயிரிழப்பு



ஆப்கானிஸ்தானில் பஸ்ஸொன்றில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் 4 பெண்கள் உட்பட 7 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஹெரத் மாகாண வீதியில் சென்று கொண்டிருந்த மினி பஸ்ஸில் திடீரென குண்டு வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெடி விபத்தில் 9 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இச்சம்பவத்திற்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்காத நிலையில், ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் சதிச் செயலாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொதுநலவாய விளையாட்டு விழாவிற்கு தகுதிபெறுமா இலங்கை அணி?

## இன்று பங்களாதேஷுடன் பலப்பரீட்சை

இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமில் நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டு விழாவின் மகளிர் கிரிக்கெட் போட்டிக்கான எஞ்சிய ஓர் அணியை தேர்வுசெய்யும் தகுதிகாண் போட்டிகள் மலேசியாவில் நடைபெற்று வரும் நிலையில், இலங்கை மகளிர் அணி இறுதிப் போட்டியில் இன்று பங்களாதேஷ் மகளிர் அணியை எதிர்கொள்கிறது. இந்தப் போட்டி இலங்கை நேரப்படி காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகிறது.

முன்னதாக நடைபெற்ற மூன்று போட்டிகளிலும் வெற்றிபெற்ற இலங்கை மகளிர் அணி இன்றைய போட்டியில் பங்களாதேஷ் மகளிர் அணியை வீழ்த்தினால் இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமில் நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டு விழாவின் மகளிர் கிரிக்கெட் போட்டிக்கு தகுதிபெற்றுவிடும். 5 அணிகள் பங்கேற்கின்ற இந்த தகுதிகாண் போட்டியில் சம்பியனாகும் அணிக்கு மாத்திரமே 2022 பொதுநலவாய விளையாட்டு விழாவில் பங்கு பெறக்கூடிய வாய்ப்பு கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.



# காலிறுதியில் ஆப்கானை எதிர்கொள்ளும் இலங்கை இளையோர் அணி

ஐ.சி.சி. இளையோர் உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் லீக் சுற்றில் முதல் மூன்று போட்டிகளிலும் வெற்றிபெற்று புள்ளிப் பட்டியலில் முதலிடம் பிடித்த இலங்கை இளையோர் அணி காலிறுதிப் போட்டியில் எதிர்வரும் வியாழக்கிழமை ஆப்கானிஸ்தான் இளையோர் அணியை எதிர்கொள்கிறது. குறித்த போட்டி இலங்கை நேரப்படி மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்றுவரும் 16 அணிகள் பங்கேற்கும் ஐ.சி.சி. இளையோர் உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் குழு "டி" யில் இடம்பிடித்திருக்கும் இலங்கை இளையோர் அணி தனது முதல் போட்டியில் ஸ்கொட்லாந்து அணியை வீழ்த்தியது. இரண்டாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்திய இலங்கை அணி, தமது மூன்றாவது போட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு தொடரை நடத்தும் மேற்கிந்திய தீவுகளை எதிர்கொண்டது.

குறித்த போட்டியிலும் 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற இலங்கை அணி ஹெட்ரிக் வெற்றிகளைக் குவித்து ஐ.சி.சி. இளையோர் உலகக் கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் 6 வருடங்களின் பின்னர் காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளது.



இறுதியாக கடந்த 2016ஆம் ஆண்டு நடைபெற்ற தொடரில்தான் இலங்கை அணி காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Sri Lanka Cricket
2022 ICC Under-19 Cricket World Cup
எம் வீரர்கள்
19 வயதிற்கு உட்பட்ட எமது வீரர்களுக்கு இலங்கையர்கள் நமது தேசிய வாழ்த்துக்களை இணைக்கும்
Dialog

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# ஒலிம்பிக் வீரர்களுக்கான சிறப்பு ரயில் சேவை ஆரம்பம்

(அக்ஷரா)

பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் இடங்களுக்குச் செல்லும் விளையாட்டு வீரர்களை மற்ற மக்களிடமிருந்து பிரிக்கும் குமிழியில் விரைவுபடுத்துவதற்காக சிறப்பு புல்லட் ரயில் சேவையை சீனா வெள்ளிக்கிழமை தொடங்கியது.

பீஜிங் விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், சர்வதேச பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் சில விளையாட்டு வீரர்கள் ஏற்கனவே வரத் தொடங்கியுள்ளனர். பனிச்சறுக்கு சேமிப்பு, பராலிம்பிக் விளையாட்டு வீரர்களுக்கான சில பிரெய்ல் பகுதிகள் மற்றும் மாநில ஒளிபரப்பாளருக்கான ஒரு வண்டியில் நேரடி தொலைக்காட்சி ஸ்டுடியோ ஆகியவற்றைப் பெருமைப்படுத்தும் ரயில்கள் பங்கேற்பாளர்களை மணிக்கு 350 கிலோமீற்றர் வேகத்தில் அனுப்பும்.

"வண்டிகளின் அமைப்பு சாதாரண ரயில்களில் இருந்து வேறுபட்டது" என்று சீன ரயில்வே பீஜிங் குழுமத்தின் நடத்துநர் லு பான் ஏ.எஃப்.பி. கூறினார். பல வண்டிகள் ஒரு "மூடிய வளையத்திற்குள்" உள்ளன, மற்றவற்றிலிருந்து ஒரு வெற்று தனிமைப்படுத்தப்பட்ட கபின் மூலம் பிரிக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

வழக்கமான பயணிகளுக்கு சீல் செய்யப்பட்ட பகுதி களுக்கு வெளியே வரையறுக்கப்பட்ட இருக்கைகள் உள்ளன. கொரோனா வைரஸ் பரவுவதற்கான எந்தவொரு வாய்ப்பையும் குறைக்க சீனா கடுமையான பூஜ்ஜிய கொவிட் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது. அதிவேக ரயில்கள் பல நிகழ்வுகளை வழங்கும் ரிசார்ட் நகரமான பீஜிங் மற்றும் ஜாங்ஜியாகோவில் உள்ள இடங்களுக்கிடையில் 174 கிலோ மீற்றர் பாதையில் பங்கேற்பாளர்களை அழைத்துச் செல்லும். நியமிக்கப்பட்ட சேவைகள் வெள்ளிக்கிழமை முதல் மார்ச் 16 வரை அதிகாரபூர்வமாக இயங்கும் என்று மாநில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பிரத்தியேக ரயில் சேவைகளில் ஒன்று, ஸ்டுடியோவில் மீண்டும் வடிவமைக் கப்பட்ட ஒரு வண்டியைக் கொண்டுள்ளது. இது பனி நிலப்பரப் புகளில் பெரிதாக்கும்போது மாநில ஊடகங்களை ஒளிபரப்ப அனுமதிக்கிறது. நூற்றுக்கணக்கான 5ஜி அடிப்படை நிலையங்களின் உதவியுடன் இது நிறுவப்பட்டுள்ளது.




தி பீஜிங் நியூஸ் படி, இந்த வரி கட்டுவதற்கு சுமார் 58.4 பில்லியன் யுவான் (9.2 பில்லியன்



டொலர்) செலவாகும். இது 2019 இல் செயற்படத் தொடங்கியது. ஜாங்ஜியாகோவுக்கான வழக்கமான பயண நேரத்தை சுமார் மூன்று மணிநேரத்திலிருந்து சுமார் 50 நிமிடங்களாகக் குறைத்தது.

பீஜிங்கிலுள்ள சமூகத்தினரிடையே உள்ளூரில் கொரோனா பரவல் காரணமாக பொதுமக்களுக்கு டிக்கெட்களை விற்கும் திட்டத்தை அதிகாரிகள் இரத்துசெய்து, அழைப்பாளர்களை மட்டுமே செயற்பாடுகளைப் பார்க்க அனுமதிக்கின்றனர். கடந்த கோடையின் தொற்றுநோயால் தாமதமான டோக்கியோ விளையாட்டுகளைப் போலல்லாமல், எடுத்துக்காட்டாக, ஊடகங்கள் இரண்டு வாரங்களுக்குப் பிறகு குமிழியை விட்டு வெளியேற முடிந்தது. விளையாட்டுகளின் போது யாரும் "மூடிய வளையத்தை" விட்டுவிட முடியாது.

பீஜிங்கின் விமான நிலையத்திற்கு வந்ததிலிருந்து அவர்கள் வெளியேறும் தருணம் வரை, தலைநகருக்குள் பிரத்தியேக சாலைகள் உட்பட, பல்வேறு இடங்களுக்கிடையில் அவர்கள் நிறுத்தப்படுவார்கள்.

# ஐ.பி.எல். மெகா ஏலத்தில் பங்கேற்க 36 இலங்கை வீரர்கள் பதிவு




2022 ஆம் ஆண்டுக்கான இந்தியன் ப்ரீமியர் லீக் (ஐ.பி.எல்.) தொடருக்கான மெகா ஏலம் அடுத்த மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ள நிலையில், குறித்த ஏலத்தில் பங்கேற்பதற்காக இலங்கையிலிருந்து 36 வீரர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ஐ.பி.எல். மெகா ஏலத்தில் பங்கேற்பதற்காக பதிவுசெய்யப்பட்டுள்ள மொத்த வீரர்களின் எண்ணிக்கையை ஐ.பி.எல். நிர்வாகம் நேற்று முன்தினம் வெளியிட்டது. ஒட்டுமொத்தமாக 1,214 வீரர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதில் தேசிய அணிகளுக்காக விளையாடிய 270 வீரர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், தேசிய அணியில் அறிமுகமாகாத 903 வீரர்கள் மற்றும் அங்கத்துவ நாடுகளில் இருந்து 41 வீரர்களும் பதிவுசெய்யப்பட்டுள்ளனர். இதிலிருந்து அடுத்த மாதம் நடைபெறும் மெகா ஏலத்துக்கான இறுதிப் பட்டியல் முடிவு செய்யப்படும். மெகா ஏலத்தில் அதிகபட்ச அடிப்படை விலை ரூ.2 கோடியாகும். இதில் 49 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். ஆஸி. யில் இருந்து அதிகபட்ச வீரர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளனர். வெளிநாடுகளிலிருந்து மெகா ஏலத்துக்காக பதிவுசெய்யப்பட்ட வீரர்களின் எண்ணிக்கை வருமாறு,

அவுஸ்திரேலியா – 59, தென்னாபிரிக்கா – 48, மேற்கிந்திய தீவுகள் – 41, இலங்கை – 36, இங்கிலாந்து – 30, நியூசிலாந்து – 29, ஆப்கானிஸ்தான் – 20, பங்களாதேஷ் – 9, அயர்லாந்து – 3, சிம்பாப்வே - 2

# கிழக்கு மாகாண உதைபந்தாட்ட அணிக்கு கல்முனை சனி மௌன்ட் கழகத்தின் இருவர் தெரிவு



(எம்.என்.எம்.அப்ராஸ்)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படவுள்ள, மாகாண மட்டத்திலான 28 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்டப் போட்டித்தொடருக்கான கிழக்கு மாகாண அணிக்கான வீரர்கள் தெரிவில், இறுதி 30 பேர் கொண்ட கிழக்கு மாகாண அணியில், அம்பாறை உதைபந்தாட்ட லீக்கிலிருந்து கல்முனை சனி மௌன்ட் விளையாட்டுக் கழக அணி வீரர்களான ஏ.எஸ்.எம்.ரில்வான், ஏ.ஆர்.எம்.பிரோஸ் ஆகிய 2 வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். குறித்த கிழக்கு மாகாண அணி இறுதிக்கட்டத் தெரிவுக்கு மாகாணத்திலிருந்து 90 பேர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இருபதுக்கு 20 தொடரைக் கைப்பற்றிய பிரைட் பியூச்சர் விளையாட்டுக் கழகம்

(நாசிக் நபாயிஸ்)

மருதமுனை பிரைட் பியூச்சர் விளையாட்டுக் கழகத்தினருக்கும், புத்தளம் கம்மந்தொழுவ சுப்பர் இலெவன் விளையாட்டு கழகத்தினருக்கும் இடையே புத்தளம் கல்லடிய ஹொல்சிம் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இருபதுக்கு 20 கடினப் பந்து போட்டிகளில் மருதமுனை பிரைட் பியுச்சர் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று 2-0 எனும் ரீதியில் தொடரை கைப்பற்றியது.

முதலாவது போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பிரைட் பியூச்சர் விளையாட்டுக் கழகம் முதலில் களத்தடுப்பை தேர்ந்தெடுக்க, கம்மந்தொழுவ சுப்பர் இலெவன் அணியினரை 95 ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்தியது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பிரைட் பியூச்சர் விளையாட்டுக் கழக அணியினர் 18 வது



ஓவரில் 5 விக்கெட்களை இழந்து 96 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டினர்.

இரண்டாவது போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கம்மந்தொழுவ சுப்பர் இலெவன் அணி துடுப்பாட்டத்தைத் தெரிவுசெய்து 18.2 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பிரைட் பியூச்சர் விளையாட்டுக் கழகம் 15ஆவது ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 101 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றியது.

# சம்பியனான அக்கரைப்பற்று என்.என்.சீ. கழகம்

(றியாஸ் இஸ்மாயில்)

அக்கரைப்பற்று லெஜென் அணியின் ஏற்பாட்டில் கழகத்தின் தவிசாளர் நிஹால் முஸ்தபா தலைமையில் நடைபெற்ற கடினபந்து முக்கோணக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அக்கரைப்பற்று என்.என்.சீ. கழகம் வெற்றி பெற்று இவ்வாண்டுக்கான சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் அக்கரைப்பற்று றோயல் அணியும், அக்கரைப்பற்று என்.என்.சீ. அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற என்.என்.சீ. அணியினர் 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட் இழப்பிற்கு 143 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். அக்ரம் 51 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.



பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றோயல் அணியினர் 18.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்களையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். அதன்படி அக்கரைப்பற்று என்.என்.சீ. அணியினர் 34 ஓட்டங்களினால் வெற்றிபெற்று இவ்வாண்டுக்கான லெஜென் வெற்றிக் கிண்ணத்தை பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்ட சாய்ந்தமருது கடினபந்து கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் எம்.எச்.ஏ. காலித்தீன் மற்றும் அம்பாறை மாவட்ட வை.எம்.எம்.ஏ. பேரவையின் பணிப்பாளர் எம்.ஐ.எம்.றியாஸ் ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

இச்சுற்றுப் போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரராக அக்ரமும், தொடர் ஆட்ட நாயகனாக முஸ்பீக்கும் தெரிவுசெய்யப்பட்டு அதிதிகளினால் கிண்ணங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் கழகங்களின் தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7